மஞ்சரி

MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL
RECEIVED.
2 NOV. 1951
TANJORE

கர - கார்த்திகை

புகழ் பெற்ற நாளந்தா

தேர்தலும் வாக்குறுதியும்

லண்டனுக்கு ஒரே நாளில்

மண்டையை முகமாக்கும் சிற்பி

வருங்காலக் கவிஞன் (சிறுகதை)

ஆனந்த மடம் (நாவல் சுருக்கம்)

-6- அண

புகையும் சுவரும்

புகை சுவரைக் கரியாக்கும்; ஆகாய வெளியைக் கரியாக்காது. கர்மம் உடலைப் பீடிக்கும்; ஆத்மாவைப் பீடிக்காது.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 12

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

காஷ்மீரில் அரசியல் நிர்ணய சபை கூடிவிட்டது. அதற்கு நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற எல்லாரும் ஷேக் அப்துல்லா கட்சியினரே; அவர்களுக்குப் போட்டியே இல்லை. ஒளிக்காமல் பேசினால், காஷ்மீர் ராஜ்யம் முழுவதையும் இந்தச் சபையின் முடிவு தர்க்க ரீதியில் கட்டுப்படுத்தாது. காஷ்மீரில் ஒரு பகுதி, பாகிஸ்தான் வசம் இருக்கிறது. இந்திய-பாகிஸ்தான் உறவில் பெரிய உபத்திரவம் தருவது காஷ்மீர் விவகாரமே. அது தீர்ந்தால் மற்றதெல்லாம் வெகு சுலபமாகத் தீர்ந்துவிடும். காஷ்மீர்ச் சிக்கலை ஆராயக் கடைசியாக வந்த ஐ. நா. சபைப் பிரதிநிதி கிராஹாம் சில சிபாரிசுகள் செய்திருக்கிறார். இரண்டு கட்சிகளையும் சமரசம் செய்துவைக்க வேண்டும் என்பதே அதன் சாரம். இந்தியா, பாகிஸ்தான் இரண்டில் எதனுடன் சேர்வது என்பதுபற்றிச் சுதந்தரமாக வோட்டு எடுக்க வேண்டுமானால், இந்தியா, பாகிஸ்தான் இரண்டின் சேனைகளும் காஷ்மீரை விட்டு வெளியேறவேண்டும் என்பது ஐ. நா. முடிவு. ஆனால் அங்கே அமைதியை நிலை நாட்ட இந்தியாவின் சொற்பத் துருப்புகள் பின் தங்கியிருக்க, ஐ. நா. வின் பழைய தீர்மானம் ஒன்று சம்மதித்தது. இதைப் பாகிஸ்தான் ஒப்பவில்லை. வேறு எந்த விதமான சமரச ஏற்பாட்டுக்கும் அது சம்மதிக்கவில்லை. 'தானாகப் பழுக்காத பழத்தைத் தடிகொண்டு அடித்துப் பழுக்கச் செய்யவேண்டும்' என்ற முறையைக் கையாளுகிறது பாகிஸ்தான். இந்த நிலையில் வேறு வழியில்லாமலே, அரைகுறையான அரசியல் நிர்ணய சபை காஷ்மீரில் கூடியிருக்கிறது. ஆனால், தார்மிக பலம் அதற்கு உண்டு. என்றுமே காஷ்மீர் மக்களின் சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட கட்சியினரைக் கொண்டு அது அமைந்திருக்கிறது. எனவே, அது பரிபூர்ண வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துவோம்.

* * *

இந்த அக்டோபரில் பாகிஸ்தானுக்குப் பெரு நஷ்டம் ஒன்று நேர்ந்தது. ஜின்னா சாகேபுக்குப் பக்கபலமாக நின்று பாகிஸ்தானை ஸ்தாபிக்க உதவி அதன் பிரதமமந்திரியாகப் பதவி வகித்த லியாகத் அலிகானை, யாரோ ஓர் ஆப்கானியன் கொலை செய்துவிட்டான். இதைக் கேட்டு, உலகெங்கும் - முக்

கியமாக இந்தியா - திடுக்கிட்டது. இந்திய மக்களின் சார்பாகப் பாகிஸ்தானுக்கு இந்தியத் தலைவர்களும் சர்க்காரும் அநுதாபம் தெரிவித்துக்கொண்டார்கள். இந்தக் கொலைக்குக் காரணம் என்ன என்பதுபற்றி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அரசியல் காரணமாகவே இருக்கலாம் என்று ஊகிக்கிறார்கள். ஆனால் ஆப்கன் நாட்டை இதில் சம்பந்தப்படுத்துவது தவறு என்றே தோன்றுகிறது. சுட்ட ஆப்கானியன், அநேக வருஷங்களுக்கு முன்பு, ஆப்கன் சர்க்காரால் வெளியேற்றப்பட்டவன்; பாகிஸ்தான் சர்க்காரிடம் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தவன். ஆகவே, பாகிஸ்தானுக்குள்ளேயே நடந்த ஏதோ சதியில் சம்பந்தப்பட்டவன் என்றே அவனை மதிக்க வேண்டியிருக்கிறது. போகப் போகத்தான் ரகசியம் வெளியாக வேண்டும். ஒன்றை மட்டும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறோம். சுதந்தர ஜனநாயக நாடு எதிலும் அரசியல் கொலை நடப்பது மட்டில் மிக மிக அநாகரிகம்; அருவருக்கத்தக்கது.

* * *

பிரிட்டிஷ் தேர்தல் நடந்து முடிந்தது. தொழிற்கட்சியார் தோற்றார்கள்; கன்ஸர்வேடிவ் கட்சியார் ஜயித்தார்கள். அட்லி மந்திரி சபை ராஜீநாமாச் செய்தது; சர்ச்சில் பிரதமமந்திரியாகித் தமது மந்திரி சபையை அமைத்துவிட்டார். ஆனால், தொழிற் கட்சி மந்திரி சபையைப் போலத்தான் இதுவும் பலவீனமாக இருக்கிறது. காமன்ஸ் சபையில் கட்சிகளின் பலாபலம் வருமாறு:

கன்ஸர்வேடிவ் ஸ்தானம்	320
(மொத்த லாபம் 23)	
தொழிற்கட்சி	293
(மொத்த நஷ்டம் 20)	
லிபரல்	6
(மொத்த நஷ்டம் 3)	
மற்றவர்	3

கன்ஸர்வேடிவ்கள் பெற்றிருக்கும் மொத்த மெஜாரிட்டி ஸ்தானங்கள் 18 தான். மிகவும் நெருக்கடியான காலத்தில் ஒரு வருஷ காலத்துக்குமேல் ஆட்சி செலுத்திய தொழிற்கட்சியின் செல்வாக்குப் பெரிதும் குறையாததுதான் ஆச்சரியம். தொழிற் கட்சி கடைப்பிடித்த கொள்கைகளையும் செய்த ஏற்பாடுகளையும் கன்ஸர்வேடிவ் கட்சி புரட்சிகரமாக அடியோடு மாற்ற முயன்றால் அது தனக்குத்தானே சாவு தேடிக்கொள்ளும். சர்ச்சில் அவ்வளவு அசடர் அல்ல. எனவே, பிரிட்டனின் போக்கில் - முக்கியமாக அதன் அயல் நாட்டு உறவுகளில் - குறிப்பிடத்தக்க பெரிய மாறுதல் எதுவும் நிகழுமெனத் தோன்றவில்லை.

மாமியைக் கூப்பிடும் விதம்

ஒருத்தி: எனக்குக் கல்யாணமானதும், என் கணவனின் அம்மாவை நான் எப்படிக் கூப்பிடுவது? மாமி என்று கூப்பிடுவது என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை.

மற்றவள்: இதுதானே! நான் செய்ததுபோல் செய். எனக்குக் கல்யாணமான முதல் வருஷம் 'ஓய்' என்றே என் மாமியை அழைத்தேன். அடுத்த வருஷத்திலிருந்து 'பாட்டி' என்று அழைக்க வசதியாய்ப் போய்விட்டது.

—'மியூஸிக் பார் மில்லியன்ஸ்'

விலக வேண்டிய தலைவர்கள்

★

இந்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரி பதவி வகித்து வந்த ராஜாஜி, வயது முதிர்ந்த காரணமாகப் பதவியை விட்டு விலகிவிட்டார். இவரைப்போல் இன்னும் பல முதிய அரசியல்வாதிகள் இப்போதோ சிறிதுகாலத்திலோ விலகவேண்டியவர்கள்தான். அவர்களைப்பற்றிய விவரங்களைக் கோவையாக இந்தக் கட்டுரையாளர் தந்திருக்கிறார்.

இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தில் 60 வருஷங்களுக்கு மேலாகவே காங்கிரஸ் ஈடுபட்டு வந்திருக்கிறது. வங்கத்தில் சுரேந்திரநாத் பானர்ஜி, சுபாஷ் சந்திர போஸ், மகாராஷ்டிரத்தில் திலகர், பஞ்சாபில் லாலா லஜபத் ராய் முதலிய பல தலைவர்கள் அதற்காக மிகவும் பாடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது சுதந்தரம் கிடைத்துவிட்டது. அதற்கான போராட்டத்தை முன்னின்று நடத்திய காந்திஜியும் படேலும் மறைந்துவிட்டார்கள். மற்றத் தலைவர்களுக்கும் இப்பொழுது வயது அதிகமாகிவிட்டது. ஒவ்வொருவராக அரசியல் அரங்கத்திலிருந்து விலகிக்கொண்டு வருகிறார்கள்.

இப்பொழுது வங்காளத்தில் பிரதம மந்திரியாக இருக்கும் டாக்டர் விதான சந்திர ராய்க்கு இன்று வயது 68. மிகப் பிரபலமான டாக்டர். காந்திஜியின் டாக்டர்களில் ஒருவராகவும் இருந்தார். கல்கத்தா சர்வகலாசாலையின் உப அத்தியட்சகராகவும் மேயராகவும் இருந்து நிர்வாகத் திறமை பெற்றவர். பல வருஷம் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இருந்திருக்கிறார். கல்கத்தா சட்ட சபை அங்கத்தினராகவும் வங்கக் காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் இருந்திருக்கிறார். இந்திய சர்க்கார் இவரை முதலில் ஐக்கிய மாகாண கவர்னராக நியமித்தது. ஆனால் இவர் அந்தப் பதவியை ஏற்கவில்லை. 1947 - இலிருந்து மேற்கு வங்கப் பிரதமராக இருக்கிறார்.

அடுத்தபடியாக வங்க சர்க்காரில் நிதி மந்திரியாக இருக்கும் நளினீ ரஞ்சன் சர்க்காரும் அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கி ஓய்வு பெற விரும்புகிறார். இவருக்கும் வயது 65 ஆகிறது. 1906 - இலேயே சுதேசி இயக்கத்தில் சேர்ந்தார். 1923 - இல் சுயராஜ்யக் கட்சியின் கொறடாவாக இருந்தார். பிறகு வர்த்தக விஷயங்களில் ஈடுபட்டுப் பல உயர்ந்த பதவிகளை வகித்தார். 1934 - இல் கல்கத்தா மேயரானார். 1935 - இல் வங்க சர்க்காரில் நிதி மந்திரி பதவி வகித்தார். வைசிராயின் நிர்வாக சபையில் அங்கத்தினராகவும் இருந்தார்.

அடுத்தபடியாக அரசியலிலிருந்து விலகுபவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார். உடல் நலம்

ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 30-9-'51), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

குறைந்துவிட்டது என்பதுதான் அவர் கூறும் காரணம். சேலம் நகரசபைத் தலைவர், சென்னைப் பிரதமர், வங்க கவர்னர், கவர்னர்-ஜெனரல், உள்நாட்டு மந்திரி ஆகிய பல பதவிகளைத் திறம்பட நிர்வகித்து நடத்தியவர். பழுத்த அரசியல்வாதி. காந்திஜீ, படேல் இவர்களுக்குப் பிறகு ராஜாஜிதான் காங்கிரஸிலேயே மிகவும் வயதானவர். இவருக்கு இப்பொழுது வயது 71.

பம்பாய்ப் பிரதம மந்திரி பால கங்காதர கேருக்குப் பதிலாக மொரார்ஜி தேசாய் பிரதமராகலாம் என்று வதந்தி. பி. ஜி. கேருக்கு வயது 63. மிகப் பிரபலமான வக்கீல். 1922-முதல் அரசியலில் ஈடுபட்டு வருகிறார். 1932-இலும் 1937-இலும் சிறை சென்றார். யுத்தத்துக்கு முன்னும் பின்னும் இரண்டு காங்கிரஸ் மந்திரி சபைகளிலும் பிரதமராக இருந்து பம்பாய் மாகாணத்துக்கே நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தார்.

ஐக்கிய மாகாணப் பிரதமர் கோவிந்த வல்லப பந்த், காங்கிரஸில் நல்ல செல்வாக்கு உடையவர். நிர்வாகத் திறமை மிக்கவர். இரு முறை பிரதமர் பதவி வகித்தவர். இவருக்கும் 64 வயதாகிவிட்டது. இவருக்குப் பிறகு ஐக்கிய மாகாணப் பிரதமராக யார் வரப் போகிறார் என்றுதான் இப்போது பேச்சாக இருக்கிறது.

ஆந்திரத் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையா அரசியல் வாழ்விலிருந்து விலகுவார் என்பதும் நிச்சயமாகிவிட்டது. இவர் வைத்தியராகவும் 'ஜன்ம பூமி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்தார். பல வருஷம் தொடர்ந்து காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இருந்திருக்கிறார். 1939-இல் சுபாஷ் சந்திர போஸுடன் காங்கிரஸ் ராஷ்டிர பதவித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். 1949-இல் ராஷ்டிரபதியானார். அந்தப் பதவியிலிருந்து சென்ற வருஷந்தான் விலகினார்.

புருஷோத்தம தாஸ் டண்டன் முன்பு ஐக்கிய மாகாணச் சட்டசபையின் சபா நாயகராக இருந்தார். ராஷ்டிரபதி ஸ்தானத்திலிருந்து ராஜீநாமா செய்த அவர் மீண்டும் அந்தப் பழைய ஸ்தானத்துக்குச் செல்வாரா என்பது சந்தேகமே.

மௌலானா அபுல்கலாம் ஆஸாதுக்கும் வயது 63 ஆகிவிட்டது. காந்திஜீயுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பே பிரிட்டிஷ் சர்க்கார் அவரை ஒரு முறை பாதுகாப்பில் வைத்தார்கள். 1921-இலிருந்து காந்திஜீயின் இயக்கங்களில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். கிலாபத் இயக்கம் இவருக்குப் புகழைத் தந்தது. 1940-இலிருந்து 6 வருஷம் தொடர்ந்து காங்கிரஸ் ராஷ்டிரபதியாக இருந்தார். கல்வி மந்திரியாக 4 வருஷம் பணியாற்றியிருக்கிறார். முன்பு கல்கத்தாத் தொகுதிக்குத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். சில வருஷங்களாகத் தம் பொதுத் தொகுதியான கல்கத்தாவுடன் அதிகத் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. புதிய பார்லிமெண்டில் எந்தத் தொகுதியின் சார்பாக அவரைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

எதிர்காலத்தில் பதவியைத் தேடிச் செல்லும் போட்டி இன்னும் தீவிரமாகிவிடும். புதிய புதிய

மனிதர்கள் பலர் இந்தப் போட்டிக்குத் தயாராக இருக்கிறார்கள். புதிய தலைவர்கள் தோன்றுவதற்கு அநுசரணையாக ராஜாங்க மந்திரிகளின் நியமனம் இருக்கிறது. ஆனால் ராஜ்ய சர்க்கார்களில் இவ்விதம் ராஜாங்க மந்திரிகள் நியமிப்பதற்கான வசதிகள் எதுவும் இல்லை. இன்றைய ராஜ்யப் பிரதமர்கள் எல்லாருமே சிறந்த ராஜதந்திரிகள் என்று சொல்ல முடியாது.

ஸ்ரீ கிரிஜா சங்கர் வாஜபேயரும் வி. பி. மேனனும் உயர்தரச் சர்க்கார் அதிகாரிகளில் குறிப்பிடத் தகுந்தவர்கள். தம் தம் துறையில் நிபுணர்களானாலும் இவர்களை அரசியல்வாதிகள் என்று கூற முடியாது. மிதவாதிகளில் டாக்டர் பராஞ்சபேயும் டாக்டர் ஜயகரும் முக்கியமானவர்கள். சுயராஜ்யக் கட்சியில் சில காலம் வேலை செய்துவிட்டுக் காங்கிரஸிலிருந்து விலகியவர் ஜயகர். வட்ட மேஜை மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் சென்றார். பெடரல் கோர்ட்டில் நீதிபதியாகவும் இருந்திருக்கிறார். சிறந்த சட்ட நிபுணர். இந்திய அரசியல் திட்டம் தயாரிப்பதிலும் சிறிது ஈடுபட்டார். பிறகு அ. நி. சபையிலிருந்து ராஜீநாமா செய்துவிட்டார். டாக்டர் பராஞ்சபே பேராசிரியராகவும் கல்லூரிப் பிரின்ஸிபாலாகவும் இருந்திருக்கிறார். பம்பாயில் இந்திய மாதர் சர்வகலாசாலையில் உப-அத்தியட்சகராகவும் வேலை பார்த்தார். இப்பொழுது இவருக்கு வயது 75. ஜயகரும் பராஞ்சபேயும் மீண்டும் அரசியலிலே ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

திவானாக இருந்து புகழ் பெற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர் மிர்ஸா இஸ்மாயிலும் சர் சி.பி. ராமசாமி ஐயரும். இந்த இருவரும் பழுத்த அரசியல்வாதிகள்; மிகுந்த நிர்வாகத்திறமை வாய்ந்தவர்கள். சர் சி. பி. ராமசாமி ஐயர் தற்சமயம் அமெரிக்கச் சர்வகலாசாலையில் சில மாதங்கள் பேராசிரியராகப் பணியாற்றச் சென்றிருக்கிறார். இவர் இந்தியப் பார்லிமெண்ட் தேர்தலுக்கு நிற்கப் போவதாகப் பத்திரிகைகளில் சமீபத்தில் செய்தி வந்தது. இன்று கவர்னராக இருப்பவர்களில் சர் ஹோச். பி. மோடி வர்த்தக விஷயங்களிலும் அரசியலிலும் நல்ல அநுபவம் பெற்றவர். இவர் அநுபவத்தைப் பம்பாய் சர்க்காரே நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பிஹார் கவர்னர் ஸ்ரீ எம். எஸ். அணே ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டவர். பிறகு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் பதவி வகித்தார். பின்னால் ஹிந்து மகாசபையில் சேர்ந்தார். வைசிராயின் நிர்வாக சபையில் பதவி வகித்தார். இவருக்கு இப்பொழுது வயது 71 ஆகிறது. தம் கவர்னர் பதவிக் காலம் தீர்ந்ததும் இவர் பொதுவாழ்க்கையில் ஈடுபடலாம்.

முதல் முதலாக இந்தியாவில் பொது ஜனத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்குப் பின் ஏற்படும் புதிய மந்திரி சபையிடம் காங்கிரஸ்காரர் அல்லாதவர்களுக்கு அதிகமாகச் செல்வாக்கு இராது. அரசியலிலிருந்து விலகிச் செல்பவர்களிடமிருந்து நாம் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இளைஞர்களின் கையில்தான் எதிர்காலம் இருக்கிறது. என்றாலும், முதியவர்களின் அநுபவத்தை இழக்கக்கூடாது. வெளி நாடுகளுக்கு ஸ்தானிகர்களாகச் செல்பவர்கள் பொது வாழ்க்கையில் பிரசித்தி பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 8-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. ஜோஸப் ஸ்டாலின், வின்ஸ்டன் சர்ச்சில் இந்த இரண்டு பேருக்குள் யார் அதிக வயதான கிழவர்?

2. "குதிரையை விட வேகமாக ஓடக்கூடியது நெருப்புக் கோழி" என்று ஒரு நண்பர் சொன்னார். இது சரியா, தவரு?

3. மேற்கிந்தியத் தீவுகளுக்குள்ளே மிகப் பெரியது எது?

4. எந்த நாட்டின் கொடி, மற்ற நாட்டுக் கொடிகளையெல்லாம் விட மிக அதிக காலமாக மாறுதல் அடையாமல் இருந்து வருகிறது?

5. ஐக்கிய அமெரிக்காவின் சுதந்தரச் சிலை உலகப் பிரசித்தம். அதன் படத்தை நீங்கள் எத்தனையோ பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அந்தச் சிலையின் ஒரு கையில் தீப் பந்தம் இருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அது எந்தக் கையில் என்று உங்களால் சொல்ல முடியுமா?

6. வான வில்லில் உண்மையில் எத்தனை வர்ணங்கள் தெரிகின்றன?

7. பூனையின் மீசை அதற்கு எப்படி உபயோகப் படுகிறது? 'எங்கேயாவது வளை, துவாரம், ஜன்னல் கம்பி இடுக்கு இவைகளுக்குள் நுழையும்போது இவைகளில் மீசை படுமானல், தன் உடம்பு நுழையாது என்று பூனை தெரிந்து கொள்ளும்' என்று ஒரு நம்பிக்கை இருந்து வருகிறதே, இது சரி தானு?

8. இதோ ஐந்து விலாசங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றே ஒன்றுதான் சரி; மற்றவையெல்லாம் தவறு. எது சரி என்பதைக் கண்டு பிடியுங்கள்;

(அ) திப்ருகர், அஸ்ஸாம்.

(ஆ) ஜப்பல்புர், வங்காளம்.

(இ) கரக்புர், உத்தரப் பிரதேசம்.

(ஈ) கான்புர், மத்தியப் பிரதேசம்.

(உ) புவனேச்வரம், சென்னை.

9. இங்கிலாந்து, அயர்லாந்து, பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள், ஐக்கிய அமெரிக்கா நகர சபைகளுக்கு மேயர் என்ற தலைவர் இருக்கிறார். இவைகளில் எந்த நாட்டில், எந்த நகரில், எந்த நூற்றாண்டில் முதல்முதல் மேயர் ஏற்பட்டார்?

10. அரை நாளில் அரைக் கோழி அரை முட்டை இட்டால், ஒரு நாளில் ஒரு கோழி எத்தனை முட்டை இடும்? ஒன்ரு, இரண்டா, நாலா? ("எங்கேயாவது அரைக் கோழி முட்டையிடுமா? இடாது" என்று கேலி செய்ய வேண்டாம். சட்டென்று கணக்கைப் போடுங்கள்.)

மணத்துக்கும் அழகுக்கும் மட்டுமா, பயிர்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது ரோஜா!

ரோஜா வேலி

★

ரோஜாவை அதன் அழகையும் உட்கருத்தையும் உத்தேசித்து மலர்களுக்கெல்லாம் அரசி என்று சொல்வது வழக்கம். இந்தியாவில் மல்லிகையையும் செவ்வந்தியையும் ரோஜாவோடு சேர்த்து மாலையாகத் தொடுத்துப் பூஜைக்கும் வரவேற்பு வைபவங்களுக்கும் உபயோகிக்கிறார்கள். ரோஜா விசேஷமாக இருப்பதால் ஈரானைக் குலிஸ்தான் - ரோஜாத் தோட்டம் - என்று அழைப்பார்கள். முஸ்லிம் நாடுகள் எல்லாவற்றிலுமே விழாக்காலங்களில் ரோஜாவை விசேஷமாக உபயோகிப்பதால் அவற்றையும் குலிஸ்தான் என்றே அழைக்கலாம். தேவதாருவைக் கிறிஸ்துமஸ் மரமாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். அதிலிருந்தோ ஏதாவது வெற்றுக் கொம்பிலிருந்தோ ரோஜா தோன்றியதாகக் கிறிஸ்துவர்களிடையே ஓர் ஐதிகம் உண்டு. ஆத்ம வளர்ச்சி குன்றியிருந்த மனித சமூகத்துக்கு ஏசு கிறிஸ்து புத்துயிரும் நம்பிக்கையும் அளித்ததற்கு அறிகுறியாக இவற்றைப் போற்றி வந்தார்கள். உலக முழுதும் பல காலமாக மக்கள் கவிதையிலும் பாட்டிலும் ரோஜாவைப் பாராட்டியிருக்கிறார்கள். யுனானி, ஆயுர்வேத வைத்திய முறைகளிலும் ரோஜா பெரிதும் பயன்படுகிறது.

அமெரிக்காவில் மண்வளத்தைக் காத்துப் பசுமை செழித்தோங்க இயற்கை வேலியாக நின்று உதவுகிறது ரோஜா. பயிர் நிலத்தை ஆடு மாடு மேயாதிருக்கக் கம்பி முள் வேலி போட்டால் அதிகச் செலவாகும். மைல் கணக்கில் மரமே இல்லாத சமவெளிகளில் சூறைக்காற்றில் மண் சிதறுண்டு நிலம் பாழாகாதிருக்க இந்த மாதிரி இயற்கை வேலி அவசியமாகும். மலைச் சாரலிலும் மழைநீரில் மண் கரைந்தோடாதபடி இந்த வேலி பாதுகாக்கும். அதோடு பல விலங்குகளும், பயிர்களைப் பாழடிக்கும் பூச்சிகளைக் கொன்று குடியானவர்களுக்குதவும் பல பறவைகளும் தங்கி வாழ இது பெரிதும் பயன்படும்.

பல வருஷங்கள் ஆராய்ந்ததில் அமெரிக்கக் காட்டிலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் 'ரோஸா மல்டிப்ளோரா' என்ற ஒரு வகை ரோஜாச் செடி இயற்கை வேலியாக நடுவதற்கு ஏற்றது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இந்த வகை ரோஜா சீனாவில் தோன்றியது. 10 அடி உயரம் 6 அடி அகலத்துக்கு வளர்ந்து அழகிய வேலியாகக் காட்சி அளிக்கும். இதன் வேர் அதிக தூரம் பரவாததால் பயிர்களும் குன்றாமல் வளரும்; அதோடு இந்த வேர் நிலத்தில் ஈரம் வற்றாதபடி காக்கும்.

மூலம்: லிவிங் அமெரிக்கா-தி லாண்ட் அண்ட் தி பீப்பிள் (ஆங்கிலம்), யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன் ஸெர்வீஸ், யு. எஸ். ஏ.

16 வருஷங்களுக்கு முன்னால் தான் இந்தச் செடியை வேலியாக அமெரிக்கக் காட்டிலாகாக்காரர் ஒருவர் நட்டார். சில இடங்களில் 3 அடியும் சில இடங்களில் $1\frac{1}{2}$ அடியும் இன்னும் சில இடங்களில் 1 அடியும் இடைவெளி விட்டு இதன் விதைகளை நட்டார். இன்று அவை புதராக வளர்ந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு கிடக்கின்றன.

கரிய மண்வளம் மிகுந்த இல்லினொய்ஸ் பிரதேசத்தில் காட்டிலாகாவைச் சேர்ந்தவர்கள் இந்தச் செடியை ஆயிரக்கணக்கில் நட்டார்கள். இவர்கள் வேலிக்காக இப்படி நடவில்லை; வேட்டைக்குரிய பிராணிகள் பதுங்கி வாழ்வதற்கு வசதியாக இருக்கவே நட்டார்கள். இதோடு பிற வகை ரோஜாச் செடிகளையும் தாழ்ந்து படரும் பசுங்கொடிகளையும் கலந்து நட்டிருந்தார்கள்.

இப்போது இங்கே வந்து பார்த்தால் எப்படி இருக்கிறது தெரியுமா? கிளிகள் கொஞ்சுகின்றன. பலவகைக் குருவிகள் கூடிப் பாடும்போது மனத்துக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அக்கம் பக்கப் பயிர்களையும் அவைகள் பூச்சி வராமல் பாதுகாக்கின்றன. இந்த மாதிரி ஒரு புதரின் அருகில் காட்டிலாகா அதிகாரி ஒருவர் ஒரு நாள் கவனித்தாராம்: ஒரு ஜோடி குருவிகள் 140 தரம் வெளியே போய்ப் பூச்சிகளை அலகில் கவ்விவந்து குஞ்சுகளுக்குக் கொடுத்தனவாம். இப்படி ஒரு நாளைக்கு ஒரு குஞ்சு தன் நிறைக்குச் சமமான பூச்சிகளை இரையாகக் கொள்கிறதென்றால் பாருங்கள்!

இந்த வகை ரோஜா பரவப் பரவப் பறவைகள் சேருவதனால், பயிர்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும்; மண்வளமும் பெருகும்.

க்விஸ் விடை

(1) சர்ச்சில். (2) சரி. (3) கியூபா. (4) டென்மார்க் நாட்டின் கொடி. (5) வலது கையில்; (6) 'ஏழு' என்றுதான் நாம் பெரும்பாலும் சொல்வோம். ஆனால் இது சரியல்ல. பெரும்படியாகப் பார்த்தால் சிவப்பு-ஆரஞ்சு, மஞ்சள் - பச்சை, நீல - ஊதா இந்த மூன்று வர்ணங்களே தெரியும். இன்னும் சற்றுக் கவனித்தால், சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா இந்த ஐந்து வர்ணங்களையும் பிரித்துக் காணலாம். இதையும் விடக் கூர்ந்து பார்த்தால், ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, கருநீலம் இவைகளையும் வேறு பிரித்துக் காணலாம். ஆக மொத்தம் ஒன்பது வர்ணங்கள் தெரியும். சில நூற்றாண்டுகளுக்குமுன் நியூட்டன் காலத்தில் ஏழு ஸ்வரம், ஏழு கிரகம், ஏழு உலோகம் என்று எல்லாம் ஏழாக விளங்கியதால், அவற்றைப் போலவே வானவில் வர்ணங்களும் ஏழாகவே இருக்க வேண்டுமென்று அவர் சாதித்துவிட்டார்! (7) சரி அல்ல; இரவில் இருட்டிலே வழி கண்டுகொள்ளவே பூனையின் மீசை உபயோகப்படுகிறது. (8) திப்ருகர், அஸ்ஸாம். (9) இங்கிலாந்தில், லண்டனில், 12-ஆம் நூற்றாண்டில். (10) இரண்டு முட்டை.

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: முட்டாள் அறிவாளிக்குப் போதனை செய்ய முடியுமா?

பதில்: எப்போதும் செய்யலாம்! அறிவாளி முட்டாளைக் கவனித்துக் கொண்டே இருந்தால் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாமே!

* * *

கே: யாருக்கோ வந்த காதற் கடிதத்தைத் தபாற்காரன் படித்துப் பார்த்தால் என்ன நடக்கும்?

ப: கிராமத்துத் தபாற்காரனுக இருந்தால் அது வம்பாக மாறும்; நகரத்துத் தபார்காரனுனுல் தூ என்று துப்பிவிட்டு மறந்து போவான்.

* * *

கே: இறந்த காலத்தின் சம்பந்தமே இல்லாத ஞாபகம் நமக்கு வர முடியாதா?

ப: முன்னுலே எரிந்து போனதன் புகைதான் ஞாபகம் என்பது. அதை அதன் மூலத்தினின்றும் எப்படிப் பிரிக்க முடியும்?

* * *

கே: வருகிற தேர்தல் கேலிக் கூத்தாக இருக்குமோ?

ப: அது கேலிக் கூத்தாக ஆரம்பித்துத் துக்க நாடகமாக முடியும்.

* * *

கே: இந்தியாவுக்கு எந்த மாதிரி மந்திரிகள் தேவை?

ப: அவலட்சணமும் மலட்டுத் தன்மையும் உடைய மனைவிகளை உடையவர்களாக இருக்கவேண்டும். முப்பது வருஷங்களுக்கு முன்பே உறவினர்களையெல்லாம் நெடுந் தூரத்தில் புதைத்திருக்கவேண்டும். அப்படி யிருந்தால் ஒருகால் திறமை இல்லாவிட்டாலும் நேர்மையாவது இருக்கும்.

* * *

கே: இந்தியா எந்தப் பக்கமாகப் போகும்? மேற்கிலா, பழையபடி வேத நெறிக்கா, ஸ்டாலினீயத்துக்கா? என்ருவது ஒரு நாள் இந்த முக்கியமான கேள்விக்கு இந்தியா பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ப: வேதத்தை நாடிச் செல்லும் வழி தவறிப் போயிற்று; மேற்கே போகிற வழியோ ஒரே வழுக்கலாக இருக்கிறது. மூன்ருவது சொன்னதுதான் சுலபமாகக் கிடைப்பதாக இருக்கிறது. வெறும் வயிற்ருேடே நகர்ந்தாவது போகலாம்.

* * *

கே: ஒரு மந்திரிக்குப் பத்திரிகை எவ்வாறு பயன்படுகிறது?

ப: காளாஞ்சியைப் போல ஒவ்வொரு நாளும் அவர் எதைத் துப்புகிருரோ அதை அச்சில் போட்டுவிடுகிறது பத்திரிகை.

* * *

கே: ஞானிகள் கடவுளின் அம்சமா?

ப: அவர்கள் கடவுளுடைய விளம்பர அதிகாரிகள்.

கே: ஏன் கடவுள் கண்ணுக்குத் தோற்றுவதே இல்லை?

ப: அவர் கண்ணுக்குத் தோற்றினால் அவரை லட்சக்கணக்கான துண்டுகளாக வெட்டிவிடுவார்கள். இப்போதே ஒரு நாளைக்கு லட்சந் தடவை அவர் முதுகிலே குத்துகிறார்களே!

* * *

கே: பெண்கள் போருக்குரிய பாடல்களைப் பாட முடியுமா?

ப: பாடலாம்; ஆனால் ஆண்களே போர் செய்யவேண்டும்.

* * *

கே: தகப்பனாருடைய பெருமூச்சு எதைக் குறிக்கிறது?

ப: 'ஐயோ! பெண்ணுக்கு வயசு அதிகமாகிவிட்டதே!' என்பதை.

* * *

கே: நம்முடைய நாகரிகம் கடைசியில் அழிந்துவிடுமா?

ப: உலகில் பல பாகத்தில் வெட்டி எடுத்த புதைபொருள்கள் பின்னே எதைத் தெரிவிக்கின்றன?

* * *

கே: சமாதானத்தின் இலக்கணம் என்ன?

ப: சமாதானம் என்பது, வாழ்க்கையில் அலுத்துப் போன மனிதர்களுக்குத் தூரத்திலே தோன்றும் கானல் நீர். மனிதர்கள் நடத்தும் போட்டியிலே சண்டை விளையுமே ஒழியச் சமாதானம் விளையாது.

கே: ஒரு பெண்ணினுடைய நடத்தையைக் கண்டுபிடிக்கும் வழி எது?

ப: பெண்ணின் நடத்தையைக் காட்டும் கண்ணாடி அவள் கண்களே. அந்தக் கண்களைக் கவனிக்க முடியுமானால் அவளுடைய ஆத்ம குணங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

* * *

கே: காதல் மாயாஜாலமா?

ப: ஆம்; கல்யாணத்துக்குப் பிறகு, மறைந்திருந்த பிராணிகளை அது வெளிவரச் செய்கிறது.

* * *

கே: மந்திரி வேலைக்கு மாத்திரம் ஏன் பரீட்சை வைப்பதில்லை?

ப: பெரும்பாலான மந்திரிகள் சிறைகளிலிருந்து பட்டம் பெற்று வரவில்லையா?

* * *

கே: ஒருவன் எப்போது தற்கொலை செய்துகொள்கிறான்?

ப: அவன் மூளை சிந்திப்பதை நிறுத்தும்போது. சிந்தனை இருக்கும் வரையில் மனிதன் வாழ்க்கையோடு போராடுகிறான்.

* * *

கே: நம்பிக்கை குருடாகத்தான் இருக்கவேண்டுமா, என்ன?

ப: நம்பிக்கை கடவுளைக்கூடக் காணுமே! அறிவுக்குத்தான் அந்தப் பார்வை இல்லை.

மின்னல் மின்னிய ஒளி

ஒரு மின்னல் ஆகாயத்திலே மின்னினால், அது மின்னிய பகுதியிலே மட்டும் ஒளி வீசி மறைவதில்லை. அதன் ஒளி ஆகாயம் முழுவதும் பரவுகிறது. ஒரு செகண்டில் ஆயிரத்தில் ஒரு பகுதி நேரத்தில் மின்னிய மின்னல் ஒன்றின் ஒளி, அதைப்போல் 30 மடங்கு நேரம் ஆகாயத்தில் நீடித்திருந்ததாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

—'ஸயின்ஸ் நியூஸ் லெட்டர்'

புகழ் பெற்ற நாளந்தா

★

புராதன இந்தியாவின் இந்தச் சர்வகலாசாலை, வெளிநாட்டின ரெல்லாம் பார்த்து வியந்தது; தூரத்து மக்களெல்லாம் வந்து பயின் றது. இதைப்பற்றிய இந்த விவரங்களுக்கு ஆதாரம்: (1) 'ஓரி யெண்ட்' பத்திரிகையில் ஆர். ஸோம் எழுதிய கட்டுரை; (2) ஸங் காலி எழுதிய, 'யூனிவர்ஸிடி ஆவ் நாலந்தா' என்ற புத்தகம்.

பழைய காலத்தில் இந்தியாவில் பல இடங்களில் உயர்தரக் கல்வி அளிக்கும் சர்வகலாசாலைகள் இருந்தன. அவைகளில் மிகவும் புகழ்பெற்றவை இரண்டு. ஒன்று இந்தியாவின் வடமேற்கே உள்ள தக்ஷசிலை. மற்றொன்று பிஹார் ராஜ் யத்தில் உள்ள நாளந்தா. பழம் பெருமை வாய்ந்த ராஜக்கிருகத் துக்கு 7 மைல் வடக்கே பாட்னுவுக் குத் தென்கிழக்கே 55 மைல் தூரத் தில் உள்ள பார்கான் கிராமத் துக்கு அருகில் இருக்கிறது நாளந்தா. பல புத்த விஹாரங்களும் கட்டிடங் களும் இங்கே சீர்குலைந்து கிடப் பதை இன்றும் காணலாம். புக்தியாபுர்-பிஹார் ரெயில் பாதையில் உள்ள நாளந்தா என்னும் ஸ்டேஷனுக்கு அருகில்தான் பழம் பெரு மையை எடுத்துக் காட்டும் பல சின்னங்கள் இருக் கின்றன.

மகாவீரர், புத்தர் ஆகிய வர்களின் காலத்திலேயே நாளந்தா நல்ல நிலையில் இருந்தது. ராஜக்கிருகம் என்னும் புகழ்பெற்ற பழைய நகரத்தின் ஒரு புறத்தில் இந்த நாளந்தா இருந்தது என்று ஜைன நூல்களி லிருந்து தெரிகிறது. மகாவீரர் 14 ஆண்டுகள் இங்கே கழித்தார் என்று தெரிகிறது. பாலி பாஷை இலக்கியங்களிலே நாளந்தாவின் பெருமை பற்றிய பல குறிப்புகளைக் காணலாம்.

புத்தர் பல தடவை நாளந்தா வுக்கு வந்திருக்கிறார். 'நாளந்தாவில் எங்கும் வளப்பம் நிறைந்திருக் கிறது. ஜனங்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள்' என்று நாளந்தா வைப்பற்றிப் புத்தர் குறிப்பிடுகிறார். பாவரிகா என்னும் மாந்தோப்பு ஒன்று இருந்தது என்றும், ராஜக்



நாளந்தா சுவர்ச் சிற்பம்

கிருகத்திலிருந்து ஒரு யோஜனை தூரத்தில் நாளந்தா இருந்தது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

புத்தரின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான சாரிபுத்திரரின் சைத்தியக் கோயில் நாளந்தாவில் இருக்கிறது. இதை அசோகர் வழிபட்டார். 'அவர்தான் இங்கே முதல் முதலாக ஒரு கோவிலைக் கட்டச் செய்தார். கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற மஹாயான தத்துவஞானியும் ரசவாதியுமான நாகார்ஜுனர் நாளந்தாவில் தம் ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். பின்னர் நாளந்தா சர்வகலாசாலையில் உயர்ந்த பதவியையும் வகித்தார்' என்று தாரா நாத் என்ற பௌத்த அறிஞர் எழுதியிருக்கிறார். புத்தமதத்தின் பிரிவுகளான ஹீனயானம், மஹாயானம் இவை இரண்டும் வீழ்ச்சி அடையாதபடி தடுக்க நாகார்ஜுனர் காலத்தில் வாழ்ந்த சுவிஷ்ணு என்னும் ஒருவர் நாளந்தாவில் 108 கோவில்களைக் கட்டினார்.

4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆர்யதேவர் என்னும் மற்றொரு தத்துவ ஞானியும் நாளந்தாவில் இருந்திருக்கிறார். புத்த மதத்தில் யோகாசாரம் என்னும் தத்துவப் பிரிவில் தேர்ந்த அசங்கா என்பவரும் நாளந்தா சர்வகலாசாலையில் 12 ஆண்டுகள் இருந்தார். இவருடைய காலம் கி. பி 5-ஆம் நூற்றாண்டு. இவருக்குப் பிறகு இந்தச் சர்வகலாசாலையில் உயர்ந்த பதவி வகித்தவர் இவர் சகோதரர் வசுபந்து என்பவர். நாகார்ஜுனர் காலத்திலிருந்து தொடர்ந்து சில நூற்றாண்டுகள்வரைக்கும் புத்த மதக் கொள்கைகள் பரவுவதற்குத் துணையாகவும் ஆராய்ச்சிக்கு உறைவிடமாகவும் நாளந்தா இருந்து வந்தது.

நாளந்தாவுக்குச் சமீபத்தில் வெட்டி எடுத்தபோது கிடைத்த பொருள்களிலிருந்து வேறு சில விஷயங்களும் தெரிகின்றன. சமுத்திர குப்தனின் தாமிர சாசனங்களும் குமார குப்தனின் நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. இதிலிருந்து குப்தர்கள் காலத்தில் தான் நாளந்தா சர்வகலாசாலை வளர்ச்சி பெற ஆரம்பித்தது என்று தெரிகிறது. குப்தர்களுக்கு முன்பு நாளந்தாவில் கட்டிடங்கள் இருந்ததற்கான சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

'சகராதித்தியன் என்னும் ஓர் அரசன் இங்கே பௌத்த பிக்ஷுக்கள் தங்குவதற்கான விஹாரங்களையும் கட்டச் செய்தான்' என்று யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் எழுதியிருக்கிறார். இந்தச் சகராதித்தியனைத்தான் சரித்திர ஆசிரியர்கள் முதலாவது குமார குப்தன் என்கிறார்கள்.

நாளந்தாவில் சர்வகலாசாலைக் கட்டிடங்கள் ஏற்பட்டது சம்பந்தமாக ஒரு கதை வழங்குகிறது. சகராதித்தியன் நல்ல நாளில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தான். அஸ்திவாரம் போடுவதற்காகக் கூலியாட்கள் பூமியைத் தோண்டினார்கள். நாளந்தாவுக்கு அருகில் வசித்து வந்த நாளா என்னும் பாம்பின் வாலை வேலையாட்கள் தெரியாமல் காயப்படுத்திவிட்டார்கள். இதனால் அரசன் கலக்கம் அடைந்தான். ஜோஸ்யர் ஒருவரை அழைத்து விசாரித்தான்.

"தேர்ந்தெடுத்த இடம் சிறந்த இடம். பாம்புக்குக் காயம் பட்டது அபசகுனம் என்று எண்ணிக் கட்டிட வேலைகளை நிறுத்தவேண்

டாம். ஐந்து தீவுகள் வரை இதன் புகழ் பரவும். 1000 வருஷம்வரை இதன் கீர்த்தி நிலைக்கும். ஆனால் நாகத்தின் ரத்தம் சிந்தியதால் இந்த இடத்தில் அடிக்கடி ரத்தம் சிந்தும்" என்று அவர் சொன்னார். அப்படியே கி. பி. 425-இலிருந்து கி. பி. 1205 வரை இந்தச் சர்வகலாசாலை சிறந்தோங்கியிருந்தது. கடல் கடந்த நாடுகளிலும் இதன் புகழ் பரவியது. சுவர்ணத்வீபம் (சுமத்திரா) யவத்வீபம் (ஜாவா) ஆகிய நாட்டு மன்னர்களும் இதை ஆதரித்தார்கள். இடையிடையே மிஹிரகுலன் போன்ற அந்நிய நாட்டு மன்னர்கள் படையெடுத்து நாளந்தாவைச் சிதைத்து வந்தார்கள்.



நாளந்தாவில் ஒரு ஸ்தூபம்

சகாராதித்தியனுக்குப் பிறகு புத்த குப்தன், ததாகத குப்தன், பாலாதித்தியன், வஜ்ரன் ஆகிய மன்னர்களும் நாளந்தாவுக்குச் சமீபத்தில் பல விஹாரங்களை அமைத்தார்கள்.

நாளந்தா சர்வகலாசாலையில் பல உயர்ந்த விஷயங்களை மாணவர்கள் கற்றுக்கொண்டார்கள். ஹீனயான, மஹாயானப் பிரிவு சம்பந்தமான சாஸ்திரங்கள், தர்க்க சாஸ்திரம், இலக்கணம், வைத்தியம் முதலிய பலவகையான வகுப்புக்கள் நாளந்தாவில் நடந்து வந்தன. ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்களும் ஹிந்து சாஸ்திரங்களும் கற்றுக்கொடுக்கப் பல ஆசிரியர்கள் இருந்தார்கள். இங்கே எப்பொழுதும் ஏதாவது இலக்கிய சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கும். மிகவும் பெரிய புத்தகசாலை ஒன்றும் நாளந்தாவில் இருந்தது. ரத்ன சாகரம், ரத்னோததி, ரத்ன ரஞ்சிதம் என்று மூன்று பெரிய கட்டிடங்கள் இருந்தன. ரத்னோததி என்னும் பகுதியில் 9 மாடிகள் இருந்தன. மத சம்பந்தமான பல நூல்கள் இந்தப் பிரிவில் இருந்தன.

அந்த அந்தக் காலங்களில் புகழ் பெற்ற பல அறிஞர்கள் இந்தச் சர்வகலாசாலையில் ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். நாகார்ஜுனர், ஆர்ய தேவர் போன்ற சிறந்த அறிஞர்கள் இங்கே இருந்

தார்கள். வசுபந்து என்ற அறிஞர் இங்கே 12 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். இவருக்குப் பிறகு தினகாரர் என்பவர் ஆசிரியரானார். இவர் தர்க்க சாஸ்திரத்தில் நிபுணர். காஞ்சீபுரத்தைச் சேர்ந்தவர். பல அறிஞர்கள் இவரிடம் அந்தக் காலத்தில் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். சீனா, ஜப்பான் நாட்டுப் புத்தகங்களில் கூட இவர் பெயரைக் காணலாம். தினகாருக்குப் பிறகு ஜயதேவர், சந்திரகீர்த்தி என்ற இரண்டு அறிஞர்கள் ஆசிரியர்களானார்கள். நாளந்தாவுக்கு யுவான் சுவாங் வந்தபோது தர்மபாலர் என்பவர் ஆசிரியராக இருந்தார். இவர் காஞ்சீபுரத்தைச் சேர்ந்தவர். உயர்தர அதிகாரி ஒருவரின் மகனாகப் பிறந்த இவர் சிறுவயதிலேயே புத்த மதத்தில் சேர்ந்து பிக்ஷுவானார். பிறகு நாளந்தாவை அடைந்து பல விஷயங்களைக் கற்றார். பல அரிய புத்தகங்களையும் எழுதியிருக்கிறார். குணமதி, ஸ்திரமதி, பிரபாமித்ரர், ஜினமித்ரர் என்ற ஆசிரியர்களும் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்றவர்கள். "ஸ்திரமதியின் அறிவு ஊற்றுப் பெருக்கெடுத்து அயல் நாடுகளில் வழிந்தோடியது" என்று யுவான் சுவாங் பெருமையாகக் கூறுகிறார்.

மோக்ஷதேவர் என்ற இந்தியப் பெயரை வைத்துக்கொண்டு யுவான் சுவாங் இங்கே 12 ஆண்டுகள் மாணவராக இருந்தார். தர்க்க சாஸ்திரத்தையும் பல பௌத்த நூல்களையும் பயின்றார். இவர் இந்தியாவை விட்டுச் சென்ற பிறகும் நாளந்தாவில் இருந்த பலர் இவரை மறவாதிருந்தார்கள்.

நாளந்தாவின் புகழ் இந்தியா வெங்கும் பரவியது. புத்த மத சம்பந்தமான பல விஷயங்களையும் இதரப் பொதுவிஷயங்களையும் விரிவாகக் கற்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் நாளந்தாவைத் தேடி வந்தார்கள். சில ராஜகுமாரர்கள் கூட இங்கே கல்வி பயின்றார்கள். யுவான் சுவாங்குக்குப் பிறகு சீனாவிலிருந்தும் கொரியாவிலிருந்தும் 11 யாத்திரிகர்கள் நாளந்தாவுக்கு வந்தார்கள்.

இவ்வளவு புகழ் பெற்ற நாளந்தா சர்வகலாசாலை எப்படித் தாழ்வுற்றது என்று சொல்வது கஷ்டம்.

முதல் முதலில் லண்டன் ராயல் ஏஷியாடிக் சொஸைட்டியிடமிருந்து உதவி பெற்று இந்திய ஆர்க்கியலாஜிகல் இலாகாக்காரர்கள் 1915-16-ஆம் ஆண்டுகளில் நாளந்தாவுக்குச் சமீபத்தில் சில இடங்களை வெட்டி ஆராய்ச்சி செய்தார்கள். இங்கே உள்ள பழைய கட்டிடங்களை அழியாமல் பாதுகாத்துப் பல புராதனச் சின்னங்களைச் சேகரித்து வைத்தார்கள்.

இவர்களுடைய இந்த அரிய முயற்சியினால்தான் நாளந்தாவின் பெருமையை உலகம் அறிய முடிந்தது.

நாட்டியக்காரி

"நீ மிகவும் புகழ்பெற்ற நாட்டியக்காரியாவதற்கு இரண்டே இரண்டுதான் தடையாயிருக்கின்றன."

"அப்படியா? அவை எவை?"

"உன் கால்கள்!"

—'இல்லெஸ்டிரெர்ட்', ஆஸ்லோ.

கார்ட்டூன் கதம்பம்



ஆந்திர ராஜ்யம் அமைப்பதில் ஏற்படும் தாமதத்துக்கு யார் பொறுப்பு?

—'ப்ரீ இந்தியா'



உபவாச காலத்தில் காந்திஜீ க்ளூகோஸ் கலந்த தண்ணீர் குடித்ததாக விஷமத்தனமாய் ஒரு பொய்யைத் தமது 'யுத்த ஞாபகங்கள்' என்ற நூலின் நாலாவது பாகத்தில் சர்ச்சில் எழுதியிருக்கிறார்! காந்திஜீ இறந்த பிறகும் இந்தக் குறும்பு செய்யும் சர்ச்சிலே இன்று பிரிட்டனின் பிரதம மந்திரி!

—'பிளிட்ஸ்'



காஷ்மீர் தேர்தலில் அப்துல்லாவுக்கு அபார வெற்றி; பாகிஸ்தான் சூழ்ச்சி பலிக்கவில்லை.

—'போரம்'

எப்படியாவது காரியமானால் சரி என்ற மனோபாவத்துடன் கையெழுத்திட்டவரை எப்படி நம்புவது?

தேர்தலும் வாக்குறுதியும்

'மாக்னஸ்'

"உங்களுடைய விண்ணப்பத்தை அனுப்பிவிட்டீர்களா?" என்றான் குட்டன்.

"என்ன விண்ணப்பம்?"

"இந்தியப் பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நிற்பதற்குத்தான்."

பார்லிமெண்டுக்கோ உள்ளூர் முனிஸிபாலிடிக்கோகூட அபேட்சகனாக நிற்க வேண்டுமென்று இதுவரை நான் எண்ணினதில்லை. அவனாகவே இப்படிப் பேச்சு எடுக்கவே எனக்கும் அந்த விஷயத்தில் சிரத்தை மூண்டது.

"இதோ பாருங்கள். இதில் நீங்கள் கையெழுத்துப் போட்டு என் கையில் பணம் கொடுக்க வேண்டியதுதான். மற்ற விஷயங்களையெல்லாம் நானே எழுதிப் பூர்த்தி செய்து கொள்கிறேன்" என்று குட்டன் அச்சிட்ட ஒரு பாரத்தை என்னிடம் நீட்டினான்.

அதை உடனே அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டேன். அதில் இந்தியில் எழுதியிருந்தது. அது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் இந்த விஷயத்தில் சற்று அக்கறை ஏற்பட்டது.

"இதில் என்ன எழுதியிருக்கிறது?" என்று கேட்டேன்.

"அப்படி வாருங்கள்; நான் சொல்வது என்னவென்றால், உங்களை அபேட்சகராகப் பொறுக்காவிட்டால் தேர்தல் நிதிக்காவது ஏதாவது ஒத்தாசை செய்வீர்கள் அல்லவா?" என்றான் குட்டன்.

"எந்தக் கட்சியின் தேர்தல் நிதிக்கு?"

"ஏன், காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நிதிக்குத்தான். மற்றக் கட்சிகளுக்குத் தேர்தல் நிதி ஏது? இப்போது என்ன சொல்கிறீர்கள்? கையெழுத்துப் போடுகிறீர்களா?"

"அது சரி; இது இந்தியில் இருக்கிறதே! எனக்கு இந்தி படிக்கத் தெரியாது. ஏன் இந்தியிலே போட்டிருக்கிறது?" என்றேன்.

அதற்கு அந்தப் பயல் குட்டன் உடனே பதில் அளித்தான்.

"நீங்கள் ஒருவேளை உத்தரப் பிரதேசத்தில் அபேட்சகராக நிற்கலாம். அங்கே எல்லாருக்குமே இந்தி தெரியும். அது உங்களுக்குத் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி, இந்தியிலேதான் பூர்த்தி செய்தாக வேண்டும்."

"அப்படியானால் கையெழுத்தும் இந்தியிலேதான் போடவேண்டுமோ? சரி. அதில் என்ன போட்டிருக்கிறது என்றாவது மொழிபெயர்த்துச் சொல்லு."

குட்டனுக்கு அப்படிப் பிரமாதமாக இந்தி வரும் என்று சொல்ல முடியாது; ஏதோ என்னைவிடச் சுமாராக வேலைக்காரர்கள், ரிக்ஷாக்காரர்கள் இவர்களோடெல்லாம் இந்தியில் பேசுவான்; அவ்வளவுதான். இருந்

மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 16-9-'51), புது டில்லி.

தாலும் ஆசாமி குறைந்தது இப்படி ஆறு பாஷையிலாவது பொழிந்து தள்ளிவிடுவான்! மொழிபெயர்ப் பதிலும் தான் மிகவும் கெட்டிக் காரன் என்று அவனுக்கு எண்ணம்!

"இதுதான் விஷயம். உங்கள் பெயர், ஊர் இப்படி எல்லாவற்றை யும் இதில் பூர்த்தி செய்ய வேண் டும். இதில் முக்கியமானது வாக் குறுதிப்படி நடப்பதாக ஒப்புக் கொள்ளவேண்டியது. பாருங்கள்: ஸ்ரீ கிருபலானி போன்றவர்கள் கட்சிவிட்டுக் கட்சி மாறுவது நியாய மானதே என்று சொல்ல ஆரம் பித்துவிட்டார்கள். அதனால் வாக் குறுதிப்படி நடப்பதாக ஒப்புக் கொள்வது இப்போது மிக மிக அவசியம்" என்றான் குட்டன்.

"அதென்ன, அப்பேர்ப்பட்ட வாக்குறுதி?"

"அப்படிப் பயப்படும்படி ஒன்றும் இல்லை. காங்கிரஸ் அபேட்சகராக உங்களைப் பொறுக்காவிட்டால் வேறு கட்சி அபேட்சகராக நீங்கள் நிற்பதில்லை என்று வாக்குறுதி கொடுத்தால் போதும்."

குட்டன் சர்வசகஜமாக இப்படிச் சொன்னாலும் எனக்கு இது சற்றுத் தூக்கிவாரித்தான் போட்டது.

"நான் காங்கிரஸ்காரனா, சோஷ லிஸ்டா, கம்யூனிஸ்டா என்ன வென்று எனக்கே புரியவில்லை. அப்படியிருக்கும்போது நான் எப் படி வாக்குறுதி கொடுப்பது?"

"அதைப்பற்றியெல்லாம் உங்க ளுக்குக் கவலையே வேண்டிய தில்லை. எந்தக் கட்சியைச் சேர்ந் தவர் என்று உங்களுக்கே புரியா விட்டால் சுலபமாகப் போச்சு! அப்படிக் காங்கிரசில் இடங் கொடுக்காவிட்டால் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் இப்படி ஒரு கட்சி யின் சார்பாக நிற்கலாம். அந்தக் கட்சிகளில் நிறைய இடம் இருக் கிறது. விண்ணப்பம் செய்துகொள் வதற்குக் கட்டணமும் அவர்கள் விதிக்கவில்லை."

வாக்குறுதி கொடுப்பது என்றால் அவ்வளவு லேசல்ல என்ற கருத்து உடையவன் நான். ஒரு தரம் வாக்குறுதி கொடுத்துவிட்டால் அவசியமாக இருந்தாலொழிய நான் அதை மீறவே மாட்டேன்.

"எப்படி வாக்குறுதி கொடுத்து விட்டு மீறுவது, எனக்குத் தெரிய வில்லையே!" என்றேன்.

குட்டன் இடி இடியென்று சிரித்துவிட்டு, "என்ன மாமா, சுத்த அசடாயிருக்கிறீர்களே! இந்த வாக்குறுதியே முரண் பாடாக இருக்கிறதே! ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியையும் கொடுக்கப்போகும் வாக்குறுதியை யும் இது மறுத்துவிடுகிறதில் லையா?" என்றான்.

"என்ன?"

"நீங்கள் வாக்குறுதியை மீறினால் யாருக்கும் தெரியப் போகிறதில்லை. இதைப் போய் விளம்பரப்படுத்த யாருக்கு அவ்வளவு அக்கறை? புதிய பத்திரிகை மசோதாப்படி கூடப் பத்திரிகைகள் அதை வெளியிட்டுத் தான் ஆகவேண்டும் என்ற கண்டிப் பில்லை."

"எனக்கென்னவோ வாக்குறுதி என்றால் லேசில்லை என்றுதான் படுகிறது, அப்பா."

"இதோ பாருங்கள். வேறு எந்தக் கட்சியின் சார்பாகவும் நிற்கக் கூடாது என்றுதானே சொல்லி யிருக்கிறது? சுயேச்சை அபேட்சக ராக நிற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது வாக் குறுதி என்னவாகும்?"

இதைச் சொல்லும்போது குட்ட னைப் பார்க்க வேண்டுமே; ஏதோ

ஜயித்துவிட்டதுபோல் ஒரு பெருமை அவன் பேச்சில் தொனித்தது. ஆனால் எனக்கென்னவோ இன்னும் விஷயம் சிக்கலாகத்தான் பட்டது.

"அது இல்லை. வேறு எந்தக் கட்சியும் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால்தானே காங்கிரஸ் பாரத்தில் கையெழுத்திடப் போகிறேன்? இப்படியிருக்கும்போது வாக்குறுதியை மீறி வேறு கட்சியின் சார்பாக எப்படி நிற்க முடியும்? எனக்குப் புரியவில்லையே!" என்றேன்.

"விஷயம் ரொம்ப ரொம்பச் சாதாரணம். இரண்டாம் வாக்குறுதியைக் கவனியுங்கள்."

"அதென்ன?"

"இதோ, பாரத்தைப் பாருங்கள். உங்களைத் தேர்ந்தெடுத்துவிட்டால் காரியக் கமிட்டி, அ. இ. கா. க., பார்லிமெண்டரி போர்டு, சட்டசபைக் கட்சி இப்படி எல்லாவற்றின் முடிவுகளுக்கும் அடங்கிப் போகவேண்டும்."

"அது நல்லதுதான்."

"இருக்கலாம். ஆனால் அதையெல்லாம் விடப் பெரிய வாக்குறுதி ஒன்று இருக்கிறதே!"

"அதென்ன அவ்வளவு பிரமாதமான வாக்குறுதி?"

"சட்டசபை அங்கத்தினராகும்போது விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்வதுதான். அது எல்லாவற்றையும் விட உயர்வானது."

"அப்படியானால் என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?" என்றேன்.

"ஒன்றுமில்லை. ஏதாவது தகராறு நேர்ந்தால் உங்கள் தொகுதி அல்லது சட்டசபையின் நன்மையையே முக்கியமாகக் கொள்ள வேண்டும். பார்லிமெண்டரி போர்டு, அது, இது என்று பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பேசாமல் எதிர்க் கட்சியில் போய் உட்கார்ந்துவிட வேண்டும்."

"இருக்கலாம். ஆனால் அது எனக்கு அவ்வளவாகத் திருப்திப் படவில்லையே!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? முதல் வாக்குறுதியைக் கவனியுங்கள்."

"அதென்ன?"

"அபேட்சகராகத் தேர்ந்தெடுத்த பிறகு பார்லிமெண்டரி போர்டு முதலியவற்றை மீறி நடக்கத் தயாராக இருக்கும்போது, கட்சிச் சார்பாக நிற்க முடியாவிட்டால் இவைகளையெல்லாம் மீறினால் தான் என்ன? நீங்கள் உங்கள் விஷயத்திலும் அக்கறை இல்லாமல் உங்களிடம் நம்பிக்கை வைத்து வோட்டளிக்க வரும் தொகுதியாளர்களையும் இப்படிக் கை தவற விடுவது சரியில்லை. பார்லிமெண்டிலும் உங்கள் வாசாலகம் முழங்க வேண்டாமா?" என்றான்.

நான் உடனே அந்தப் பாரத்தில் கையெழுத்திட்டேன்.

'குனியுங்கள், சீக்கிரம்'

சில ஸோல்ஜர்களுக்குப் புதிய துப்பாக்கிக் குண்டு ஒன்றின் சக்தியைப்பற்றி ஸார்ஜெண்ட் எடுத்துச் சொன்னார்:

"இந்தப் புதிய குண்டுக்கு அபரிமிதமான சக்தி. இரண்டடி கனமுள்ள கெட்டி மரக்கட்டையை இது துளைத்துச் சென்று விடும். ஆகையால், இந்தக் குண்டு வரும்போது, சட்டென்று தலையைக் குனிந்துகொள்ளுங்கள்."

—'ஸதர்ன் பார்மர்'

எத்தனை ஸ்தானங்கள்?

இந்திய யூனியன் பகுதிகளான ராஜ்ய அசெம்பிளிகளுக்கும் கவுன்ஸில்களுக்கும் சமீபத்தில் நடக்கும் பொதுத் தேர்தலில் எத்தனை அங்கத்தினர் ஸ்தானங்கள் இருக்கின்றன என்பதைக் காட்டும் அட்டவணை இது:

ராஜ்யங்கள்	அசெம்பிளி மொத்தம்	ஷெட்யூல் வகுப்பார்	ஷெட்யூல் மலைவாசிகள்	கவுன்சில்
ஏ. பிரிவு				
அஸ்ஸாம்	108	5	9	—
பிஹார்	330	44	35	72
பம்பாய்	315	27	29	72
மத்தியப் பிரதேசம்	232	32	23	—
சென்னை	375	62	4	72
ஒரிஸ்ஸா	140	21	28	—
பஞ்சாப்	126	21	—	40
ஐக்கிய மாகாணம்	430	83	—	72
மேற்கு வங்காளம்	238	40	12	51
	2294	335	140	379
பி. பிரிவு				
ஹைதராபாத்	175	31	2	—
ஜம்மு - காஷ்மீர்	—	—	—	—
மத்திய பாரதம்	99	17	12	—
மைசூர்	99	19	—	40
பெப்ஸு	60	10	—	—
ராஜஸ்தான்	160	16	5	—
சௌராஷ்டிரம்	60	4	1	—
திருவாங்கூர்-கொச்சி	108	11	—	—
	761	108	20	40
ஸி. பிரிவு				
ஆஜ்மீர்	30	6	—	—
போபால்	30	5	2	—
பிலாஸ்புர்	—	—	—	—
குடகு	24	3	3	—
ஹிமாசலப்பிரதேசம்	36	8	—	—
விந்தியப் பிரதேசம்	60	6	6	—
	180	28	11	—

கட்ச், மணிபுர், திரிபுரா } எலெக்ட்ரல் காலேஜ்கள் ஏற்படுவதற்காக இந்த மூன்று ராஜ்யங்கள் ஒவ்வொன்றும் 30 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும்.

கபட சந்நியாசி

★ ★ ★ ★

அங்கங்கள் அறுபட்டு அவமானமுற்ற சூர்ப்பணகை கர தூஷணர்களிடம் வந்து ராம லட்சுமணர்களை உடனே கொல்லும்படி சொன்னாள். அவர்களும் தங்கையின் வார்த்தையைக் கேட்டுக் கோபமுற்று ஏராளமான சேனைகளைத் திரட்டிக்கொண்டு ராமனை எதிர்க்கச் சென்றார்கள். லட்சுமணனிடம் ராமன் சீதையைக் காத்திருக்கும்படி கூறிவிட்டுத் தான் ஒருவனாகவே அவர்களை எதிர்த்து முதலில் அந்தச் சேனையையும் பிறகு தூஷணன், திரிசிரஸ், கரன் ஆகிய மூவரையும் கொன்றான்.

சூர்ப்பணகை தன் முயற்சி பலிக்காததால் வருத்தமுற்று எப்படியாவது ராமலட்சுமணர்களுக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்று தீர்மானித்தாள். உடனே ராவணனிடம் விரைந்து சென்றாள். மந்திரிகளுடன் சபையில் வீற்றிருந்தான் ராவணன். வருத்தமும் கோபமும் பொங்கிஎழ அவள், 'ராமலட்சுமணர் என்று இரண்டு க்ஷத்திரியர்கள் தண்டகாரணியத்தில் புகுந்து நம்மவர்களை அழிக்கிறார்கள். கரன் முதலிய உன் சகோதரர்களையும் அவர்கள் சேனையையும் அழித்துவிட்டார்கள். ரிஷிகளுக்கு அபயம் கொடுத்திருக்கிறார்கள். பெண்ணாயிற்றே என்று என் ஒருத்தியைமட்டும் அந்த ராமன் விட்டுவிட்டான். அவனுக்கு அகன்ற கண்களும், பூர்ணசந்திரன் போன்ற முகமும் படைத்த ஒரு மனைவி இருக்கிறாள். அழகிய கூந்தலும் எடுப்பான மூக்கும் உடைய அவள், வனதேவதை போல் விளங்குகிறாள். அவள் பெயர் சீதை. விதேக மன்னனின் மகள். தேவர், கந்தர்வர், யட்சர், கின்னரர்களிலுங்கூட இந்த

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

மாதிரி அழகை நான் கண்டதில்லை. சீதை யாருக்கு மனைவியோ, அவள் யாரை ஆனந்தமுற்று அணைத்துக் கொள்வாளோ, அவனே உலகில் இந்திரனை விடச் சிறந்தவன் என்பதில் சந்தேகமில்லை. அவள் உனக்கேற்ற மனைவி. அவளுக்கு நீ ஏற்ற புருஷன். ஆகவே, உனக்காக நான் அவளை எடுத்து வர முயன்றேன். அப்பொழுது ராமனின் தம்பி லட்சுமணன் என் அங்கங்களை அறுத்து அவமானப்படுத்திவிட்டான். அவளைக் கண்டால் நீ மன்மத பாணத்துக்கு வசப்பட்டு விடுவாய். உனக்கு அவள் மனைவியாக வேண்டும் என்ற ஆசையிருந்தால் இப்போதே புறப்படு. என் வார்த்தை உனக்குப் பிடித்ததானுல் தண்டகாரணியம் சென்று ராமலட்சுமணர்களைக் கொன்று அந்தச் சீதையைக் கைப்பற்றி இன்பமாக இரு'' என்ருள்.

இப்படிச் சூர்ப்பணகை கூறியதைக் கேட்டு ராவணன் தேரில் ஏறி மாரீசனிடம் சென்று அவனை உதவிக்கு வரும்படி வேண்டினன். அவன், "ராமனிடம் போக எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று கூறிமுதலில் வர மறுத்தான். பிறகு ராவணனுடைய நிர்ப்பந்தத்தால் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டான். பிறகு இருவரும் தேரில் ஏறி ராமன் இருக்கும் ஆசிரமத்தை அடைந்தார்கள். தேரை விட்டு இறங்கினர்கள். உடனே மாரீசன் ராவணனுடைய வேண்டுதலின்படி தங்க மானக ஆகி ஆசிரமத்தின் வாயிலில் மேய்ந்துகொண்டிருந்தான். பதுமராகம் போன்ற முகமும், இந்திர நீலம் போன்ற காதும், சிறிது உயர்ந்து நீண்ட கழுத்தும், மல்லிகைப் பூப் போல் வெளுத்த

வயிறும், வைடூரியம் போன்ற குளம்பும், வானவில் போல் பல வர்ணம் படைத்து உயர நோக்கி நிற்கும் வாலும் கொண்ட அந்த மான் சீதையின் கண்ணில் படும்படி இங்கும் அங்கும் தாவி ஓடிக்கொண்டிருந்தது.

மலர் கொய்துகொண்டிருந்த சீதை அதைக் கண்டு ஆச்சரியமுற்றுக் கணவனையும் லட்சுமணனையும் கூப்பிட்டு அதைக் காட்டினாள். லட்சுமணன் அதைப் பார்த்துச் சந்தேகத்துடன் ராமனோடு, "அதே மாரீசன்தான் இந்த மான் என்று எண்ணுகிறேன். இவன் பல அரசர்களைக் கொன்றிருக்கிறான். உலகில் இந்த மாதிரி மான் கிடையாதே!" என்றான்.

சீதை மாரீசனின் அந்த மாய உருவில் மனத்தைப் பறிகொடுத்து, "இதைப் பிடித்துக் கொடுங்களேன். இதோடு விளையாடுகிறேன். இந்த ஆசிரமத்தில் எவ்வளவோ மிருகங்கள் சுற்றி வருகின்றன. இவ்வளவு அழகிய மிருகத்தை நான் கண்டதே இல்லை. இந்த மான் உயிருடன் நமக்குக் கிடைத்தால் மிகவும் நல்லது. வனவாசம் முடிந்த பிறகு இதை அயோத்திக்குக் கொண்டு போய் அந்தப்புரத்தில் அலங்காரமாக வைத்துக்கொள்ளலாம். அப்படிப் பிடிக்கும்போது இறந்துவிட்டால் இதன் தோல் நமக்குக் கிடைக்கும். அதில் உட்கார்ந்து ஜபம் செய்யப் போகிறேன்" என்றாள்.

இதைக் கேட்டு ராமனுக்குக்கூட அதைப் பார்க்கப் பார்க்க ஆச்சரியமும் அதைப் பிடிக்கவேண்டுமென்ற ஆவலும் ஏற்பட்டன. "இந்த மாதிரி மான் பூமியிலும் தேவலோகத்திலும் எங்குமே இல்லை. இதன் தோலில் சீதை என்னுடன் உட்கார்ந்துகொள்ளுவாள். இது ராட்சசனுகத்தான் இருக்கட்டுமே; வாதாபியை அகஸ்தியர் கொன்றதுபோல் நான் இதைக் கொன்றுவிடுவேன். இந்த மானை நான் கொன்றோ பிடித்தோ வரும் வரையில் நீ சீதையைக் காத்துக் கொண்டிரு" என்று லட்சுமணனிடம் கூறிவிட்டு வில்லையும் அம்பறுத்தூணியையும் எடுத்துக் கொண்டு அந்த மானைத் தொடர்ந்தான்.

அந்த மான் ஓடியும் மறைந்தும் மறுபடியும் தோன்றியும் ராமனை வெகு தூரம் இழுத்துச் சென்றது. ராமன் அதைக் கொல்வதே சரி என்று எண்ணிப் பாணத்தை அதன் மேல் எய்தான். அது மானின் மார்பைப் பிளந்தது. அது பனைமர அளவு உயரம் துள்ளிக் கீழே விழுந்தது. மாரீசன் மான் உருவத்தை எடுத்துக்கொண்டு தரையில் புரண்டு கொண்டு இறக்கும் தருணத்தில் இருந்தான். அப்போது ராவணனிடம் தான் கொடுத்த வாக்கை எண்ணி ராமனுடைய குரலில், "ஹா சீதே! ஹா லட்சுமணா?" என்று கதறிவிட்டு உயிர் துறந்தான். ராமனுக்கு அப்போது லட்சுமணனின் நினைவு வந்தது. மாரீசன் இப்படிக் கூப்பிட்டதைக் கேட்டுச் சீதையும் லட்சுமணனும் என்ன எண்ணிக் கொள்வார்களோ என்று கவலையுடன் ராமன் மற்றொரு மானைக் கொன்று அதன் மாமிசத்தையும் எடுத்துக்கொண்டு ஆசிரமத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

காட்டில் தன் கணவனின் குரல் போல் வருந்திக் கூவும் அந்தக் குரலைக் கேட்டுச் சீதை லட்சுமணனைப் பார்த்து, "லட்சுமணா, போ! அவர் என்னவானார் என்று அறிந்து வா. என் மனசுக்கு என்னவோ போல் இருக்கிறது. ராட்ச

சர்களின் கையில் சிக்கித் துன்புறும் உன் தமையனைக் காப்பாற்று'' என்றாள். தமையனின் உத்தரவுக்கு அடங்கிச் சீதையைக் காப்பதே நினைவாக இருந்த லட்சுமணன் போகாமல் அங்கேயே இருந்தான். அதைக் கண்டு கோபமுற்று அவனுக்குத் தீய எண்ணம் இருப்பதாகச் சொன்னாள். "அவருக்கு ஆபத்து நேருவது உனக்கு இஷ்டந்தான்போல் இருக்கிறது'' என்றாள். பிறகு கண்ணீருடன் அவனைப் பார்த்து, "லட்சுமணா, ராமன் இல்லாவிட்டால் கோதாவரியில் விழுந்துவிடுவேன்; அல்லது தூக்கி விட்டுக் கொள்வேன். இல்லா விட்டால் விஷத்தைக் குடித்து உயிர் துறப்பேன். அக்கினியிலாவது பிரவேசிப்பேன். ராமன் இல்லாவிட்டால்மற்றொரு புருஷனை நான் காலாலும் தொடமாட்டேன்'' என்று வருத்தத்தோடு சீதை கூறிக் கைகளால் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாள்.

லட்சுமணன் சீதையின் கொடிய சொற்களைக் கேட்டுக் கோபமுற்று உடனே ராமன் சென்ற திசையை நோக்கிப் புறப்பட்டான். அந்தச் சமயம் பார்த்து ராவணன் துறவி வேஷம் பூண்டு சீதையை அணுகினான். அவனைக் கண்டு காட்டில் இருக்கும் மரங்கள், நதிகள், காற்று இவைகூட நடுங்கின.

அவன் உள்ளத்தில் மன்மத பாணம் தைத்தது. வெளியில் வேத கோஷம் செய்துகொண்டு சீதையை நெருங்கினான். அவளை உற்றுப் பார்த்து, அவள் ஒவ்வொரு அவயவத்தையும் வர்ணித்து, "நீ யார்? ருத்திரர்களைச் சேர்ந்தவளா? வசுக்களைச் சேர்ந்தவளா? இல்லாவிட்டால் மருத்துக்களைச் சேர்ந்தவளா? அரக்கர்கள் இருக்கும் இந்த இடத்துக்குக் கந்தர்வரும் தேவரும் கின்னரர்களுங்கூட வர மாட்டார்களே! நீ எப்படி வந்தாய்?'' என்று கேட்டான்.

சீதை ஒன்றுக்கும் பதில் சொல்லாமல் பாத்தியம், அர்க்கியம் முதலியவற்றைக் கொடுத்து அவனை உபசரித்து ஆசனத்தில் அமரச் செய்தாள். பிறகு கேட்டதற்குப் பதில் சொல்லாவிட்டால் சந்நியாசி சபிப்பாரே என்று பயந்துகொண்டு, தான் யார் என்பதையும் காட்டுக்கு வந்த வரலாற்றையும் கூறினாள்; "என் புருஷர் இதோ ஆகாரத்துக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு வந்துவிடுவார். தாங்கள் சற்று இளைப்பாறுங்கள். தாங்கள் யார்? எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்? எதற்காக இந்தக் காட்டில் சுற்றி வருகிறீர்கள்? தயை செய்து சொல்லவேண்டும்'' என்று கேட்டாள்.

அதற்கு ராவணன், "தேவாசுரர்களுடன் கூடிய இந்த மூன்று உலகத்தையும் நடுங்கச் செய்த அந்த ராவணன்தான் நான். தங்கம் போன்ற மேனியுள்ள உன்னை எண்ணி எண்ணி என் மனைவிமேல் கூட என் மனம் செல்லவில்லை. நான் பல இடங்களிலிருந்து பல சிறந்த பெண்களை அழைத்து வந்து வைத்திருக்கிறேன். என்னைப் புருஷனாக ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு நீ தலைவியாக இருக்கலாம். ஐயாயிரம் தாசிகள் உனக்குப் பணிவிடை செய்வார்கள். கடல் சூழ்ந்த இலங்கை என் ஊர். அதிலுள்ள அழகிய தோட்டங்களில் என்னுடன் உலாவி வந்தால் உனக்குக் காட்டில் சுற்றவேண்டும் என்ற ஆவலே உண்டாகாது'' என்றான்.

இதைக் கேட்டதும் சீதை கோபமுற்று அவனை இழித்துப் பேச

லானுள்: "என் கணவர் மலை போல் அசைக்க முடியாதவர். மகேந்திரனுக்கு ஒப்பானவர். பெரிய கடலைப்போல் கலக்கமுடியாதவர். அவரைப் பின்பற்றி வந்திருக்கிறேன். எல்லா லட்சணங்களும் பொருந்தியவர் அவர். நீயோ பெண் சிங்கத்தை நரி அடைய விரும்புவதுபோல் என்னை அடைய எண்ணுகிறாய். நீ என்னைத் தொட முடியாது. ராமனிடமிருந்து நீ என்னை அடைய விரும்புவது பசியுற்ற சிங்கத்தின் திறந்த வாயில் இருக்கும் பல்லைப் பிடுங்குவதுபோல் இருக்கிறது. மந்தர மலையை ஒரு கையால் எடுத்துச் செல்ல விரும்புகிறாயே! கண்ணை ஊசியின் நுனியால் துடைத்துக் கொள்ளுகிறாய். நாக்கால் கத்தியை நக்குகிறாய். கழுத்தில் கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தைக் கடக்க விரும்புகிறாய். சூரியனையும் சந்திரனையும் இரு கைகளாலும் இழுத்து எடுக்கப் பார்க்கிறாய்! எரியும் அக்கினியைத் துணியில் சுற்றி எடுத்துப் போகப் பார்க்கிறாய்! இரும்புச் சூலம் நாட்டி அதன்மேல் நடக்கப் பார்க்கிறாய்!"

ராவணனுக்குக் கோபம் கோபமாக வந்தது. புருவத்தை நெரித்துக்கொண்டு அவளைப் பார்த்து, "நான் குபேரனின் தம்பி, தெரியுமா? பத்துத் தலையுடையவன். குபேரனை வென்று அவன் விமானத்தைப் பறித்து வந்தவன்" என்றெல்லாம் தனது பெருமையைக் கூறி, "ராஜ்யத்தை இழந்து காட்டில் வாழும் ராமனால் நீ என்ன சுகமடையப் போகிறாய்! என் விரல் நுனிக்கு ராமன் சமமாக மாட்டான். சீதே, நீ மறுக்காதே! காமபாணத்தால் அடிபட்டுத் துன்புறுகிறேன். உன் பாக்கியவசத்தால் உன்னை வந்து அடைந்திருக்கிறேன். என்னைப் புறக்கணிக்காதே" என்றான்.

ராட்சச மன்னன் இவ்விதம் சொன்னதும், சீதை கோபத்தால் கண் சிவக்க, "அனைவரும் வணங்கும் குபேரனைச் சகோதரன் என்று சொல்லித் தவறான செயலைச் செய்ய விரும்புகிறாயே! கெட்ட புத்தியை உடைய உன்னை மன்னனாகக் கொண்ட அரக்கர்கள் நிச்சயமாக அழிந்துவிடப் போகிறார்கள். தேவேந்திரன் மனைவியை அபகரித்தால்கூட உயிர் வாழலாம். ராமனின் மனையாளை எடுத்தால் உயிர் வாழமுடியாது" என்று கொடிய சொற்களைப் பொழிந்தாள்.

இது தாங்காமல் ராவணன், "அடி பைத்தியக்காரி, என் தோள் வலிமையை நீ கேட்டதில்லையோ? நான் ஆகாயத்திலிருந்துகொண்டு பூமியைத் தூக்குவேன். சமுத்திரத்தைக் குடிப்பேன். எமனைப் போரில் வெல்வேன். சந்திரனையும் சூரியனையும் பாணத்தால் தகைவேன். என்னை உன் புருஷனாக ஏற்றுக் கொள்" என்று கூறித் தன் சுய ரூபத்தை எடுத்துக்கொண்டான். பின்பு, கதறும் சீதையை எடுத்துத் தேரில் வைத்துக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பினான்.

கடினமான வஸ்து

மனிதனுக்குத் தெரிந்த வஸ்துக்களுக்குள்ளே மகா கடினமானது வைரம்-அதைக் கொண்டவனிடமிருந்து திரும்ப வாங்குவது மகா கடினம்!

—ரோஸாலி பாலெர்மோ

ஆசிரியர் பேனா



இந்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாக இருந்து ரிடயர் ஆன ராஜாஜி, பத்திரிகைக்காரர்கள் என்றும் தம்மை மறவாதிருக்கும்படி ஒரு சட்டம் செய்துவிட்டே விலகினார்.

—சங்கர்ஸ் வீக்லி'

வலியை அறிவீர்களா?

★

கால் வலிக்கிறது, தலை வலிக்கிறது என்று தவிக்கிறோமே; அந்த வலி என்பது என்ன? அதன் தன்மைகள் எவை? இந்தக் கேள்விகளுக்குப் பதில் அடங்கிய இந்தக் கட்டுரை லூதர் பி. கொனான்ட் என்பவர் எழுதியுள்ள விஷயத்தை ஆதாரமாகக் கொண்டது.

வலியை நாம் எல்லாரும் அனுபவித்திருப்பதால் அது எப்படிப்பட்ட உணர்ச்சி என்று நமக்கு நன்றாய்த் தெரியும் என எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அதை முழுவதும் அறிந்தவர் யாருமே இல்லை. விஞ்ஞானிகள் வலியைப்பற்றி ஆராய்ந்து வெளியிட்டிருக்கும் முடிவுகளைப் பார்த்தால் நமக்கு வியப்பாக இருக்கும். கீழே சில அபிப்பிராயங்களையும் அவை சரியா தவறா என்ற விளக்கத்தையும் காணலாம்.

வலி தாங்காமல் சாவு நேரலாம்.

உண்மைதான். இருந்தாலும் எப்போதுமே இப்படி நேரும் என்று சொல்வதற்கில்லை. திடீரென்று பொறுக்க முடியாத வலி ஏற்பட்டால் அதிர்ச்சி காரணமாகச் சாவு நேரும். நீடித்த வலியால் உடலில் சோர்வு ஏற்பட்டும் இப்படி நேரலாம்.

இரா வேளையில் வலி அதிகமாகும் என்று எண்ணுவது வெறுங் கற்பனைதான்.

இல்லவேயில்லை. விடியற்காலை மூன்று மணி வேளைக்கு உண்மையிலேயே வலி சற்று அதிகமாகத்தான் ஆகிறது. அப்போது நம் உடலில் பிராணவாயு குறைந்துவிடுவதாலும் வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாதிருப்பதாலும் நரம்புகள் அதிக உணர்ச்சியுடன் வேலை செய்வதே இதற்குக் காரணம்.

தோண தோணவென்று யாராவது நம்மோடு பேசினால் (தலை வேதனை தாங்காமல்) கழுத்து இசிக்கும்.

உண்மைதான். அவர் பேசுவதைக் கேட்காமல் இருந்தால் என்ன எண்ணிக்கொள்வாரோ என்று வெகு ஆவலுடன் கேட்பது போல் நிமிர்ந்து கூர்ந்து கவனிப்போம். அதனால் தோள்பட்டையிலும் கழுத்திலும் நிஜமாகவே இசிவு ஏற்படும்.

ஆண்களைவிடப் பெண்களுக்கு வலியைப் பொறுக்கும் சக்தி அதிகம்.

உண்மைதான். எந்த வைத்தியரைக் கேட்டாலும், 'பெண்கள் ஆண்களைப்போல் அவ்வளவாக வலிக்கிறது என்று காபுரா செய்வதில்லை' என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அதற்குக் காரணந்தான் தெரியவில்லை.

வலியினால் நன்மையும் உண்டு.

உண்மைதான். உடலில் ஏதாவது வியாதியோ நோய்க் கிருமியோ உள் காயமோ மனக் கவலையோ இருந்தால் முன்னதாக வலி ஏற்படும். இதைக்கொண்டு டாக்டர்கள், 'என்ன செய்தால் நோய் தீரும்?' என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் இப்படி முதலில் வலி

ஏற்பட்டு அப்புறம் நீடிக்கும்படி விட்டால் பிரயோஜனமில்லை.

சூடாக ஒத்தடம் கொடுத்தாலும் சரி, குளுமையாக ஒத்தடம் கொடுத்தாலும் சரி, ஒரே விதமாகத்தான் அவை வலியை நீக்கும்.

இல்லவேயில்லை. ஒன்றுக்கு ஒன்று முரணான விதத்தில் பலன் அளிக்கும். வீக்கம் ஏற்படாமல் இருக்க ஆரம்பத்திலேயே பனிக் கட்டி ஒத்தடம் கொடுக்கவேண்டும். வீக்கம் ஏற்பட்டுவிட்டால் சூடாகத் தான் ஒத்தடம் கொடுக்க வேண்டும். வீக்கத்தில் சில 'அழுக்கு'களெல்லாம் சேர்ந்து நரம்பை அழுத்துகின்றன. சூடாக ஒத்தடம் கொடுப்பதால் ரத்தம் அந்த அழுக்குப் பாகத்தில் பரவி அதை உறிஞ்சிக்கொள்கிறது. ஆகவே, கன்றின இடத்தில் பனிக் கட்டி வைப்பதும், வீக்கம் கண்டவுடன் வெந்நீர் ஒத்தடம் கொடுப்பதுந்தான் சரி. ஆனால் வயிற்றுக்கு மட்டும் டாக்டரைக் கேட்காமல் எந்தவித ஒத்தடமும் கொடுக்கக்கூடாது.

இன்னும் ஓர் இடத்தில் வலி ஏற்படும்படி செய்தால் முதலில் இருந்த இடத்து வலி நீங்கும்.

உண்மைதான். அதனால்தான் கை விரலில் சூடு பட்டால் உதட்டைக் கடித்துக்கொள்கிறோம். இருந்தாலும் கொஞ்ச நேரந்தான் விரலில் வலி தெரியாமல் இருக்கும். ஆனால் ஒரு குழந்தையின் காலில் அடிபடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன் மேல் கட்டுக் கட்டிக் குழந்தையின் கையைப் பரபரவென்று தேயுங்கள். காலில் அடிபட்டதைக் குழந்தை மறந்துவிடக்கூடும்.

வலியை மறந்து விடுவோம்; ஆனால் பழைய இன்பத்தை மறப்பதில்லை.

உண்மைதான். ஏதோ சில சிடுமூஞ்சிகளைத் தவிர அநேகம் பேருடைய அநுபவமும் இதுதான். இதற்கு ஓர் உதாரணம்: ஒரு ஸ்திரீ பிரசவத்துக்காக ஆஸ்பத்திரிக்கு வருவாள். பிரசவ வேதனை தாங்காமல் ஒவ்வொரு தரமும், "இனி மேல் குழந்தையே பெறப்போகிற தில்லை, பாருங்கள்; போதும் அந்த அவஸ்தை!" என்பாள். ஆனால் அடுத்த வருஷமே மறுபடியும் பூரண கர்ப்பவதியாக ஆஸ்பத்திரிக்கு வந்து சேருவாள்.

காதல் வேதனை தரும்.

உண்மைதான். இதற்குக் காரணம் அந்தக் காதல் இன்பம் போய் விடுமோ என்ற திகில்தான். அந்தத் திகிலினால் தசைகளில் இசிவு ஏற்பட்டு அது நரம்புகளைப் பாதிக்கிறது. உடனே உடலில் ஒரு வேதனை தோன்றுகிறது.

பெரிய விபத்துக்களில் அந்தச் சமயத்துக்கு அதிக வலி இராது.

உண்மைதான். திடீரென்று பலமாகத் தாக்குண்டால் அதிர்ச்சி காரணமாக உணர்ச்சி மரத்து விடுகிறது. வலியைவிடக் கால் உடைந்து இப்படிக் கிடக்கிறோமே என்ற கவலைதான் அப்போது நமக்கு அதிகமாக இருக்கும்.

வலியைப் போக்கும் மருந்துகள் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் பலன் அளிக்கின்றன.

இது தவறு. சிலவகை மருந்துகள் பிரக்ஞை இழக்கச் செய்வதால் வலி தெரிவதில்லை. ஈதர், காஸ் இவை இந்த ரகத்தைச் சேர்ந்தவை. வேறுவகை மருந்துகள் நம் உணர்ச்சிகளை மரத்துவிடும்படி செய்வதால் வலி தெரிவதில்லை. மூன்றாவது வகை ஆஸ்பிரின் போன்றவை. இவை வலியைத் தாங்கும் சக்தியைக்

கொடுக்கும். தூக்க மாத்திரைகளால் வலி நீங்கிவிடும் என்று நினைப்பது தவறு. ஒருவித மயக்கம் ஏற்படும்; அந்த நிலையில் வலி இருப்பதாக நினைவு இராது. இதன் பலனாக எப்போதுமே தூக்க மாத்திரை போட்டுக்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டுவிடும். இதனால் உடலுக்குக் கெடுதல்தான்.

வயிற்றில் ஒன்றும் இல்லாவிட்டால் வலி அதிகமாக இருக்கும்.

உண்மைதான். நமக்குச் சில விஷயங்களில் சற்று அதிருப்தி ஏற்பட்டதும் வலியும் அதிகரிக்கும். திருப்தியோடும் சௌக்கியமாகவும் இருக்கிறோம் என்ற உணர்ச்சி வலியை அகற்றிவிடும். அதே மாதிரி, வலிக்குமே என்ற திகில் காரணமாகக் கவலை ஏற்படுவது சகஜம். உணர்ச்சி மிகுதியால் உடலில் பரபரப்பு ஏற்பட ஏற்பட அந்தக் கவலை பின்னும் அதிகரிக்கும்.

கவனத்தை வேறு விஷயங்களில் திருப்பினால் வலி தெரியாதபடி செய்யலாம்.

உண்மைதான். தகுந்தபடி சிகிச்சை செய்த பிறகு இப்படிச் செய்வது மிகவும் நல்லது.

உடம்பு முழுதும் எல்லா இடத்திலும் வலி தெரியும்.

இது தவறு. நம் தோலில் ஆயிரக்கணக்கான நரம்பு நுனிகள் உள்ளன. சூடோ குளிர்ச்சியோ பட்டால் மட்டுந்தான் சில இடங்களில் உறைக்கும். மற்ற எல்லா இடங்களிலும் வலி ஏற்பட்டால் நன்றாக உணர முடியும். புறங்கையில் ஊசியால் குத்திப் பாருங்கள். சில இடங்களில் உறைக்காது.

உணர்ச்சி காரணமாக மனத்தில் அதிர்ச்சி ஏற்பட்டால் வலி உண்டாகும்.

உண்மைதான். உடலில் அடிபட்டால் வலி ஏற்படுவதுபோலவே இப்போதும் இருக்கும். ஒரு பெண் ஒரு வாலிபனைக் காதலித்து வந்தாள். அவர்கள் காதல் கைகூடவில்லை. அது முதல் அவள் இடது கையில் தாங்க முடியாத வலி ஏற்பட்டு அவதிப்பட்டு வந்தாள். எவ்வளவு வைத்தியம் செய்தும் வலி நீங்கவேயில்லை. பல மாதங்கள் கழித்துத்தான் ஒரு மனத்தத்துவ நிபுணர் உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்தார். வாலிபன் தன்னை மணந்துகொள்வான் என்று எதிர்பார்த்திருந்தாளாம் அந்தப் பெண். ஆனால் கடைசியாக ஒரு நாள் அவன் அவள் கையைத் தொட்டுத் தான் ஊரைவிட்டுப் போய்விடுவதாகத் தெரிவித்தானாம். இத்தனை நாள் அவன் தொட்டால் இன்பமாக இருந்தது; ஆனால் அன்று முதல் அதுவே அவளைத் தீப்போல் சுட்டது.

நோயுற்ற இடத்தில்தான் வலி ஏற்படும்.

இது தவறு: பித்தப் பையில் ஏற்பட்ட நோய் காரணமாகத் தோளில் வலி ஏற்படலாம். நாக்கில் நோய் கண்டால் காதில் வலி எடுக்கும். சில சமயம் இருதய நோய் காரணமாக இடது கையில் தாங்க முடியாத வலி ஏற்படும்.

சாதாரண மனிதர்களுக்கு வலியினால் இன்பமும் ஏற்படலாம்.

இது உண்மைதான். கால் பந்தாடும்போது ஒருவன் இன்னொருவன்மேல் மோதிக்கொண்டு பந்தை உதைத்துவிடுகிறான் என்று வைத்துக் கொள்ளலாம். அப்போது மார்பில் தாக்குண்டாலும் அவன் முகத்தைப் பாருங்கள். அதில்தான்

எவ்வளவு மகிழ்ச்சி! அவ்வளவு சிரமப்பட்டு ஜயித்தோம் என்று ஒரு திருப்தி அவனுக்கு ஏற்படுகிறது. ஆனால், எங்காவது ஏணியிலிருந்து தவறி விழுந்து அடிபட்டால் அவன் படுகிற அவஸ்தையைப் பார்க்கவே நமக்குச் சகிக்காது.

கோபத்தை அடக்குவதால் தலைவலி ஏற்படலாம். உண்மைதான். அப்படி அடக்கும்போது ரத்தம் மூளைக்கு ஏறுகிறது. இதனால் ரத்தக் குழாய்கள் விரிவடைகின்றன. உடனே வலி ஏற்படுகிறது. இதற்கு ஒன்று செய்யலாம்: சற்று வெளிப் பக்கமாக வந்து ஏதாவது ஒரு பொருளை உதைத்துப் பாருங்கள்; தலைவலி ஒருவேளை தீர்ந்தாலும் தீரலாம்.

துணிவு வேண்டும்

இப்போது இங்கிலாந்தில் பிரதம மந்திரியாகிவிட்ட வின்ஸ்டன் சர்ச்சில்தான் சென்ற மகாயுத்த காலத்திலும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி. அப்போது அவர் காட்டிய துணிவை எல்லாரும் மெச்சினார்கள். ஆபத்துக் காலத்திலும் நம்பிக்கை தளராமல் நின்றார் சர்ச்சில். ஐரோப்பாமீது படையெடுப்பதாக இருந்தால் கப்பல்கள் தங்க 'மிதக்கும் ஹார்பர்கள்' வேண்டியிருக்கும் என்று அவருக்குத் தோன்றிற்று. உடனே இங்கிலாந்திலுள்ள சிறந்த எஞ்சினீர்களையெல்லாம் அழைத்து அந்த மாதிரி செய்து பார்க்கும்படி சொன்னார். அவர்கள், "அது சாத்தியமில்லையே!" என்றார்கள்.

சர்ச்சில் உரத்த குரலில், "வீண் பேச்செல்லாம் வேண்டியதில்லை! செய்து பாருங்கள். நீங்கள் மனசு வைத்தால் நிச்சயமாக அது முடியும்!" என்று கத்தினார்.

எஞ்சினீர்கள் அப்படியே 'மல்பெரி' என்ற ஒருவகை 'மிதக்கும் ஹார்பர்' செய்து முடித்தார்கள். பிரெஞ்சுக் கரையிலுள்ள நார்மண்டியின்மேல் படையெடுத்தபோது அது பெரிதும் பயன்பட்டது.

நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களில், 'அது சாத்தியமில்லை. இது சாத்தியமில்லை' என்று சொல்லுகிறோமே! ஒரு யோசனை சொல்லுகிறேன், கேளுங்கள்: கையில் ஒரு பென்விலும் ஒரு காகிதமும் எப்போதும் வைத்திருங்கள். ஒன்று 'முடியாத காரியம்' என்று தோன்றினால் உடனே அதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் காகிதத்தை அடிக்கடி கண்ணில் படும் இடமாகப் பார்த்து ஒட்டி வையுங்கள். ஒவ்வொரு நாளும் அதில் எந்த அம்சங்கள் கூடிய வரையில் சாத்தியம் என்று முயன்று பாருங்கள். நாலே நாளில் அதில் சில அம்சங்களையாவது செய்து முடித்திருப்பீர்கள். இதே மாதிரி சற்றுப் புத்தியைச் செலுத்தி முயன்று பார்த்தால் உங்களுக்கே எதுவும் சாத்தியம் என்ற உறுதி பிறக்கும்.

—என். வி. பீல்

உடம்புக்குமட்டும் அல்ல, மனத்துக்கும் நன்மை செய்வது பழ உணவு.

சில பழங்கள்

பி. வேங்கடராமையா

மனிதன் இயற்கைக்கு ஒத்தபடி தன் வாழ்க்கையை நடத்துவதால் உடல் வலிவும் ஊக்கமும் பெறுகிறான். மரக்கறிகள், கனி கிழங்குகள், உள்ளிப் பூண்டு, துவரை போன்ற பருப்புக்கள், ஜவ்வரிசி, பார்லி போன்ற அரிசிகள், பாதாம், பிஸ்தா, சாரை, வேர்க்கடலை முதலிய பருப்புக்கள் எல்லாம் இயற்கைக்கு ஒத்தவையே. இவற்றை உண்டு நூற்றுக்கணக்கான வருஷங்கள் ஆரோக்கியத்துடன் நம் முன்னோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பழங்களை ஆகாரமாகக் கொள்ளுவது மிக மிகச் சிறந்தது.

பழ ஆகாரத்துக்கும் ஆத்மிக சம்பந்தமான நியமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடம்பு பரிசுத்தமாய் நோய் இல்லாமல் இருப்பதோடு புலனடக்கம், தியானம், யோகாசனங்கள், மனச்சுத்தம் இவைகளில் ஈடுபடச் சுலபமாக மனிதனை இயக்குவது பழ ஆகாரமே. நம் முன்னோர் இதன் பெருமையை அறிந்தே சந்நியாசிகள், பிரம்மசாரிகள் முதலியவர்கள் பழங்களையே சாப்பிட வேண்டுமென்ற கட்டுப்பாடு விதித்திருந்தார்கள்.

நாம் தினசரி உபயோகிக்கக் கூடிய பழங்கள், சேமித்துவைக்கக் கூடிய பழங்கள் இவைகளைப்பற்றி இப்பொழுது ஆராய்வோம்.

நாரத்தம் பழம்: இதில் புளிப்பு, தித்திப்பு என்ற இரண்டு வகை இருக்கின்றன. மரத்திலேயே பழுத்த பின் பறித்த நாரத்தம் பழம் உடம்புக்குக் குளிர்ச்சியானது. மேக நோய்கள் எல்லாவற்றையும் போக்கும். பித்தத்தை நீக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். வயிற்றுக்கு நல்ல உரம் கொடுக்கும். பசி நன்றாய் எடுக்கும். உஷ்ணத்தால் உண்டாகிய இருமலையும், காங்கையையும் ஜுர தாகத்தையும் அடக்கும். ரத்தத்தைச் சுத்தி செய்யும். புளிப்பு நாரத்தை, உஷ்ணமான உடம்பு உள்ளவர்களுக்கு நன்மை செய்யும். குளிர்ச்சியான உடம்பு உள்ளவர்களுக்குச் சிலேஷ்மத்தை வளர்க்கும்; இருமலை உண்டாக்கும். நுரையீரலையும் கண்களையும் பாதிக்கும்.

கமலா, பத்தாய், கொளுமிச்சை, தித்திப்பு எலுமிச்சை இவைகளுக்கெல்லாங் கூட நாரத்தையின் குணம் அமைந்திருக்கிறது. ஆனால் இவற்றை உடல் சரியான நிலையில் இருப்பவர்கள் மட்டுமே அளவாக உபயோகித்தால் நன்மை செய்யும்.

வாத சிலேஷ்ம உடம்புள்ளவர்கள் இவைகளை உண்டால் நோய் அதிகரிக்கும். இந்தப் பழங்களில் எதைத் தின்றாலும் உடனே தண்ணீர் குடிக்கக் கூடாது. குடித்தால் வயிறு கெட்டுப் பேதியாகும்; ஜுரமும் வரும்.

மூலம்: பிரகிருதி (தெலுங்கு), விஜயவாடா.

மாதுளை: வாதம், பித்தம், கபம், கெட்ட ரத்தம் இவைகளைப் போக்கும். அதனால் இதற்குத் 'திரிதோஷ ஹரம்' என்று பெயர். வயிற்றுக்குப் பலம் கொடுத்துப் பசியை உண்டாக்கும். உடம்பை லேசாக்கும். ஆனால் சிலேஷ்ம உடம்புள்ளவர்களுக்கு இது உகந்த தன்று. ஜுரவேகத்தில் ஏற்படும் நா வறட்சியைத் தடுக்கும்.

தித்திப்பு மாதுளை உடலுக்குக் குளிர்ச்சியும், மார்புக்கு உரமும் தரும். மேகத்தையும் பித்தத்தையும் போக்கும். ரத்தக் கிராணியைக் கட்டுப்படுத்தும். மார்பு நோய், பித்த எதுக்களிப்பு, இருமல் இவற்றைக் குணப்படுத்தும். உஷ்ண உடம்புள்ளவர்களுக்கு வீரிய விருத்தியைக் கொடுக்கும். குரலில் இனிமையை வளர்க்கும். ரத்தபுஷ்டியும் சரீர புஷ்டியும் உண்டாக்கும். ரத்த சுத்தி செய்து சொறியைப் போக்கும். உணவைச் சாப்பிட்ட பிறகு தின்றால் ஜீரணம் செய்யும். இதை ஜுரத்தில் தின்னக் கூடாது. அதிகமாய்த் தின்றால் வாதநோய் உண்டாகும். ஜீரண சக்தியை உண்டாக்கி அதிக தாகத்தை உண்டுபண்ணும். புளிப்பு மாதுளை உடலுக்குக் குளிர்ச்சி தருவதோடு அடிவயிற்றுக்குப் பலம் தரும். அரோசகத்தைப் போக்கும். ரத்த பித்த நோயைப் போக்கும். ரத்த அதிசாரத்தையும் மேக நோயையும் போக்கும். நுரையீரலுக்கு ஊறு செய்யும். அதிக உஷ்ண உடம்புள்ளவர்களுக்கு நன்மை செய்யும். சைத்திய உடம்புள்ளவர்களுக்கு அஜீரணம் செய்யும். மலத்தைக் கட்டும். சிறிது வீரிய நஷ்டத்தையும் உண்டாக்கும்.

திராக்ஷை: இதைப்பற்றி எவ்வளவு சிபாரிசு செய்தாலும் தகும். இதன் நிழல் மன உல்லாசத்தையும் சுகத்தையும் தேஜஸ், வீரிய விருத்தி பலம் இவற்றையும் தரும். திராக்ஷைப் பழம் உஷ்ணத்தைச் செய்து நீரை வளர்க்கும். இது சீதளம் என்றும் சிலர் சொல்வார்கள். தித்திப்பு, புளிப்பு, துவர்ப்பு எல்லாம் திராக்ஷையில் இருக்கின்றன. ரத்தச் சோகை, ஜுரம், இழுப்பு, தாகம், தோஷ ஜுரம், வாதம், பித்தம், சிலேஷ்மம் எல்லாவற்றையும் போக்கி மதமதப்பை உண்டாக்கும். அரோசகத்தைப் போக்கும். ரத்தத்தையும் வீரியத்தையும் விருத்தி செய்யும். கண்ணுக்கு நன்மை செய்து மலமூத்திரங்களைப் பிரிக்கும். அதிமூத்திர நோயைப் போக்கும். ரத்த சுத்தி செய்து வயிற்றை மெத்தென்றாக்கும். மற்றப் பழங்களைவிடச் சிறந்தது. வாத, பித்த சிலேஷ்ம தோஷங்களை நீக்கும். சுவாசப் பைகளுக்கும், மூத்திரப் பைக்கும் நன்மை செய்யும். விதையோடு தின்றால் குடல், வயிறு, மூத்திரப்பை இவற்றில் வலியை நீக்கும். சீக்கிரத்தில் ஜீரணசக்தியை உண்டாக்கும். வாத உடம்புள்ளவர்களுக்கு வயிற்று நோய் உண்டாக்கும்; வாதத்தையும் அதிகமாக்கும். பசி மந்தம், சிலேஷ்மம் இவற்றையும் உண்டாக்கும்.

பச்சைத் திராக்ஷையில் இனிப்புள்ளது எளிதில் ஜீரணமாகும். உடலுக்குப் பலமும் புஷ்டியும் தரும். புத்தம் புதிய ரத்தத்தை உண்டாக்கும்.

புளிப்புத் திராக்ஷையால் கபமும் அரோசகமும் விருத்தியாகும். அது விபரீத தாகத்தையும் உண்டாக்கும்; பத்தியத்துக்கு உகந்தது அன்று. இருவகைத் திராக்ஷைகளும் சிலேஷ்மத்தை உண்டாக்கும்.

அஞ்ஜீர்: இது உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுத்து நீரை வளர்க்கும்; சுவாசப் பை, தொண்டை, கல்லீரல், மூத்திரப்பை, இருதயம் இவைகளுக்குப் பலம் கொடுக்கும். க்ஷயம், இருமல், அஜீர்ணம், கபம் இவற்றைப் போக்கும். வீரிய விருத்தி செய்து உடலுக்குப் புஷ்டி தரும். நல்ல ரத்தம் ஊறச்செய்யும். வேர்க்கும். இதன் சத்தோடு சர்க்கரையைக் கலந்து குழந்தைகளுக்கு வரும் இழுப்பு, இருமலுக்கு மருந்தாகக் கொடுக்கலாம். பெரியவர்களுடைய இருமலும் இதனால் குணப்படும். இதை நசுக்கிக் கோடைக் கட்டிகளுக்குக் கட்டினால் சீக்கிரத்தில் பழுத்து உடையும். இதன் இலைச் சாற்றை வெண்குஷ்டத்துக்கு ஆரம்பத்திலேயே தடவினால் நோய் நீங்கும்.

காய்ந்த அஞ்ஜீர்: இது உடலில் நீர் வற்றச் செய்து குளிர்ச்சி தரும். உணவை ஜீரணிக்கும். சுவாசப் பையில் வறட்சியைப் போக்கும். தொண்டைக்கும், சுவாசப் பைகளுக்கும் உறுதி தரும். ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். தாதுக்களுக்கும் இந்திரியங்களுக்கும் பலம் தரும். மயக்கம், பக்கவாதம் உள்ளவர்களுக்கு மிக நன்மை செய்யும். சூட்டையும் தாகத்தையும் தணிக்கும். வயிற்றில் தங்கிய சிலேஷ்மத்தை வெளியேற்றி வயிற்றை மிருதுவாக்கும். இதை 40 நாள் பெருஞ்சீரகத்துடன் தின்றால் இருதயத்துக்கு நல்லது; கவலை நீங்கி மகிழ்ச்சி ஏற்படும். இழுப்பு, இருமல், மார்பு சம்பந்தப்பட்ட நோய்கள் இவற்றை எல்லாம் போக்கும். கல்லீரலைப் பலப்படுத்திக் கட்டியைக் குணப்படுத்தும். மண்ணீரலின் வீக்கத்தைக் குறைத்துச் சிறுநீர் பிரியச் செய்யும். மூலநோயைப் போக்கும். மூத்திரக் காய்களைச் சீர்திருத்தும். இதோடு பாதாம், பிஸ்தாப் பருப்புகளையும் கலந்து தின்றால் இளைத்தவர்களுக்குப் பலம் தரும். மூளைக்குப் பலம் தந்து புத்தியைத் தெளிவாக்கும். அக்ரோட்டுடன் இதை 40 நாள் தின்றால் ஆண்மை மிகுதியாகும்; இடுப்பு நோய் நீங்கும்; விஷத்துக்கும் மாற்றாகும்.

தருப்பூசி: இது உருண்டையாகவோ, கோழி முட்டை வடிவாகவோ இருக்கும். தோலில் பச்சையும் வெள்ளையும் கலந்து மழமழவென்றிருக்கும். உள்ளே இருக்கும் விதைகள் கறுப்பாகவோ சற்றுச் சிவப்பாகவோ வெளுப்பாகவோ இருக்கும். இதில் தண்ணீர் அபரிமிதமாக இருக்கும். உடலுக்குக் குளிர்ச்சி தரும். இதிலுள்ள நீரை வெயில் வேளையில் உட்கொண்டால் உடம்புக்குச் சுகமாக இருக்கும். தாகத்தைத் தணித்து வழி நடந்த களைப்பைப் போக்கும். டைபாயிடு ஜுரத்தில் இதை உள்ளுக்குக் கொடுத்தால் வயிற்றில் புண் வராமல் தடுக்கும். ரத்தத்தின் அதிகச் சூட்டைத் தணிக்கும். சிறுநீரைப் பிரிக்கும். லேசான ரத்தத்தையும் லேசான சிலேஷ்மத்தையும் உண்டாக்கும். உடம்பைக் கறுப்பாக்கும். பித்த ஜுரத்தைப் போக்கும். வறண்ட உடம்புள்ளவர்களைச் சுகப்படுத்தும். பாலோடு கலந்து சாப்பிட்டால் மேகநோயை நீக்கும். மூத்திரப் பையில் தங்கிய கல்லைக் கரைக்கும்; ஆனால் குளிர்ச்சியும் வாதமும் உள்ளவர்களின் சுவாசப் பைகளுக்கும் வயிற்றுக்கும் கெடுதி விளைக்கும். இதற்கு மாற்று, தேனும் சர்க்கரையும்.

இப்படிப் பல பழங்கள் பலவிதத்தில் நமக்கு உதவுகின்றன.

பிந்திய அபேதவாதிகள்

—அவர்கள் கண்ட கனவு—

பிரெஞ்சு அபேதவாதிகள் சிலருடைய கருத்துக்களைச் சென்ற இதழ் 'மஞ்சரி'யில் ரா. ஸ்ரீ. தேசிகன் விவரித்தார். இங்கே இன்னும் சிலருடைய கருத்துக்களை விளக்குகிருர்.

செயின்ட் சைமன் கண்ட தத்துவத்தை அறிந்த நாம் பூரியே (Fourier) என்ற சோஷலிஸ்ட் வகுத்த கற்பனை உலகத்தைச் சித்திரிப்போம். இவர் துணி வியாபாரியின் மகன். 1772-ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டில் பிறந்தார். சிறு பிராயத்திலேயே முதிர்ந்த அறிவுக்குரிய அறிகுறிகள் இவரிடம் தென்பட்டன. பிரெஞ்சு, லத்தீன் மொழிகளில் 11-ஆம் வயதிலேயே சிறந்த புலமை காட்டிப் பரிசு வாங்கினுர். சங்கீதத்தில் மிகவும் ஈடுபாடுள்ளவர். மலர்களைக் கண்டு அவைகளின் வனப்பைப் பருகிப் பேருவகை கொள்ளுவார்.

தம் தந்தை இறந்த பின் அவர் நடத்திய தொழிலையே இவரும் மேற்கொண்டார். பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் நடந்த பயங்கர ஆட்சியில் (The Reign of Terror) இவருக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. சிறை புக நேர்ந்தது. இளவயதிலேயே சமுதாய அமைப்பில் காணும் ஊழல்களையும் சாக்கடைத் தேக்கத்தையும் கண்டு மனம் புழுங்கி, அதை மாற்ற அரும்பாடு பட்டார்.

உண்மை, நாணயம், பொருள் சிக்கனம், இயற்கையாய் அமைந்துள்ள உணர்ச்சிகளை வளர்த்தல் இந்த இயல்புகளைப் போற்றக் கூடிய சமுதாயத்தை நிறுவவேண்டுமென்பதே இவர் கனவாகும். ரூஸோ வகுத்த பாதையிலேயே இவரும் செல்லுகிருர். 'உணர்ச்சிகளை அடக்குவதில் பயனில்லை; அவைகள் ஓடுவதற்குத் தக்க வாய்க்கால்கள் அமைத்தல் நலமாகும். பன்னிரண்டு உணர்ச்சிகள் மனித உள்ளத்தில் பாய்கின்றன' என்பது இவருடைய கருத்து. இவைகளை மூன்று பிரிவுகளாக இவர் வகுத்திருக்கிருர்: (1) செவி, கண் முதலிய பொறிகளால் நுகரக் கூடிய உணர்ச்சிகள்; (2) ஆத்மாவைச் சார்ந்த நட்பு, அன்பு, குடும்ப உணர்ச்சி, ஆசையைத் தூண்டக் கூடிய உணர்ச்சி, அல்லது சேர்ந்து வாழும் தன்மை; (3) சதி செய்தல், திட்டம் போடுதல், அவற்றை உருவாக்குதல், முட்டிப் போராடும் உணர்ச்சிகளை ஒழுங்குக்குக் கொண்டு வருதல்.

எல்லாரையும் சேர்ந்து வாழும்படி தூண்டக்கூடிய ஐக்கிய உணர்ச்சி மனித உள்ளத்தில் வேரூன்றி நிற்கிறது. உணர்ச்சிகள் தட்டுத் தடங்கலின்றிப் பெருகியோடுவதற்குத் தகுந்த சூழ்நிலையை அமைத்தல் வேண்டும். உணர்ச்சிக்கேற்றவாறு மாந்தர்களைப் பிரித்துவிட்

டால், சமுதாயம் முன்னேறும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. ஒவ்வொரு பிரிவிலுமுள்ள தனித்த மனிதன் தனக்கேற்ற தொழிலைத் தேர்ந்து அதில் இறங்கலாம். கம்பனல்லா கொண்ட கொள்கையை இவரும் ஆமோதிக்கிறார்.

ஆற்றலுக்குத் தகுந்தவாறு, இயல்புக்குத் தகுந்தவாறு தொழிலை நாடுவதில்தான் இன்பம் திகழும். வகுத்துக்கொண்ட தொழிலில் திளைத்து இன்புறுதல் வேண்டும். எடுத்துக்கொண்ட தொழிலில் அயர்வு தோன்றுமானால் வேறொரு தொழிலை மேற்கொள்ளுதல் நன்மையைத் தரும். சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பன்னிரண்டு பாகங்கள் செய்ய வேண்டும். அதில் ஐந்து பாகங்களைத் தொழில் நிதிக்குச் செலுத்திவிடவேண்டும். கடினமான வேலைகளைச் செய்பவர்களுக்கோ அல்லது அருவருப்பான வேலை செய்பவர்களுக்கோ இந்த நிதியிலிருந்து அதிகச் சம்பளம் வழங்க வேண்டும். எத்தனைக்கு எத்தனை ஒரு தொழிலில் இன்பம் பெருகுகிறதோ அத்தனைக்கத்தனை அந்தத் தொழிலில் ஊதியம் குறைந்துகொண்டே போகும். ஓரளவில் தனித்த மனிதன் சொத்தைச் சேர்த்துக்கொள்ள வழியுண்டு.

பெண்களுக்கு முழுச் சுதந்தரமுண்டு. மணத்தளையை மேற்கொள்ளுவது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. வாழ்க்கைக்கு வேண்டிய இன்ப வசதிகளை அவர்கள் நுகர விரும்புவதால் அவர்கள் போகிற வழியே அவர்கள் செல்லலாம். நிரந்தர மணவாழ்க்கையை நடத்தலாம் அல்லது அவர்கள் இஷ்டப்படி ஆடவரைக் கூடிக் களிக்கலாம். உணர்ச்சி ஓடுகிற வழியே, அவர்களும் செல்லலாம். உணர்ச்சிகளுக்கு யாதொரு தளையும் தடங்கலும் ஏற்படக்கூடாது. இயற்கையாய் அமைந்துகிடக்கிற உணர்ச்சிகளுக்கு வழிகாட்டினால் சமுதாயம் முன்னேறும்.

இவர் கொண்ட இந்தக் கொள்கையில் குற்றமில்லை. ஆனால் இதற்கு அதிக இடங்கொடுத்தால் கேடு விளையக் கூடும்.

காபே (Cabet) என்ற பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கண்ட கனவைப் பார்ப்போம். இவர் 1788-ஆம் ஆண்டு பிறந்தார். தக்க படிப்பைப் பெற்றார். வக்கீல் தொழிலில் அமர்ந்தார். 1830-ஆம் ஆண்டில் நிகழ்ந்த புரட்சியில் இவர் கலந்துகொண்டார். தம் நாட்டை விட்டகன்று, லண்டன் நகரத்தில் வசிக்கலானார். ஸர் தாமஸ் மோர் எழுதிய 'யுடோப்பியா' என்ற கற்பனை உலகம் இவர் சிந்தையைக் கொள்ளை கொண்டது. ஓவனின் (Owen) உபந்நியாச மந்திரம் இவரை மயக்கிவிட்டது. இவர்களைப் போலவே தாமும் ஒரு நூல் இயற்றவேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உதயமாயிற்று. 1839-ஆம் ஆண்டு பாரிஸ் நகரத்துக்கு வந்தார். 'இக்கேரியா நாட்டுக் கப்பற் பிரயாணம்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். பாபியூவ் (Babeuf) என்ற பெரியாரின் அடிச்சுவட்டையே இவரும் பின்பற்றுகிறார். ஆனால் காபே தந்த உலகத்தில் ஓர் ஒளி, ஓர் உற்சாகம் திகழக் காண்கிறோம். பாபியூவ் அளித்த உலகத்தில் அத்தனை ஒளி தோன்றவில்லை. "வித்தியாசத்தை வேரோடு மாய்த்திடல் வேண்டும். எல்லாத் தொழில்களும் சமமே. வைத்தியனும் சக்கிலியும் சரிசமானந்தான். அச்சு, யந்திரம்,

கல்வி, மதம் இவை யாவும் இத்தகைய கொள்கையைப் பரப்ப வேண்டும். சமுதாயந்தான் புத்தகங்களைப் பிரசுரிக்கவேண்டும். சமுதாய வாழ்வுக்கு மாறான கொள்கைகளுக்கு இடந் தரக்கூடாது.”- இதே நிலையைத்தானே ருஷிய நாட்டில் பார்க்கிறோம். ஒரே பத்திரிகைதான் ஒரு மாகாணத்தில் உலாவவேண்டும்! பத்திரிகை ஆசிரியர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். பத்திரிகை ஆசிரியர்கள் மனம்போலப் போவதற்கில்லை. எந்தவிதமான விமரிசனமுமின்றி வெறும் செய்திகளை மட்டும் அவர்கள் குறிக்க வேண்டும்.

“கல்விதான் முக்கியமான அம்சமாகும். உடல்நலப் பயற்சி, அறிவு வளர்ச்சி, மனப் பண்பாடு, சமுதாயப் பொறுப்புணர்ச்சி - இவை யாவும் கல்வி மூலம் ஓங்க வேண்டும். ஐந்து பிராயம் வரையில் பெற்றோர்களின் பாதுகாப்பில் குழந்தைகள் இருப்பார்கள். பிறகு தேசியப் பள்ளிகளில் படிப்பார்கள். உபாத்தியாயர்களையும் அங்கே தேர்ந்தெடுப்பார்கள். சமுதாயத்தின் நன்மைக்குத் தகுந்தவாறே படிப்பும் அமைய வேண்டும். சமுதாயத்துக்கு ஒரே மதந்தான். மதக் கொள்கைகளை அரசியல்வாதிகள், பேராசிரியர்கள், தத்துவஞானிகள், படிப்பாளிகள் எல்லாரும் சேர்ந்து வகுப்பார்கள். கடவுளைத் தொழ வேண்டும். தோழமை, அன்பு, சுதந்தரம், சேர்ந்து வாழும் தன்மை, பொது உடைமை - இவை யாவும் அங்கே நிலவ வேண்டும்.” - உங்களுடைய பௌதிகம் எதற்காக? தோழமைக்கே! உங்களுடைய கொள்கையின் நோக்கமென்ன? தோழமையே! குற்றமில்லை. காவலாளிகளில்லை. சிறைச்சாலைகளில்லை. ஏழை மக்கள் விடுதிகளில்லை. இத்தகைய கொள்கைகளை இவர் போற்றினர். ஆனல் இவைகள் நிறைவேறவில்லை. வானளாவிய கொள்கைகள் தரையில் வேரூன்றி நின்ருல்தானே அவைகள் நிலைபெறும்.

பிளாங்கு (Blanc) இந்தக் கனவுகளுக்கு உருக்கொடுக்க முயன்ருர். இவர் ஒரு பத்திரிகை ஆசிரியர்; புத்தகமெழுதும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். அரசியல் துறையிலும் இறங்கினர். இவர் ஓர் அபேதவாதி. 1813-ஆம் ஆண்டில் ஸ்பெயினிலுள்ள மாட்ரிட் நகரில் பிறந்தார். 1848-ஆம் ஆண்டுப் புரட்சியில் இவர் கலந்துகொண்டார். எனவே, இவர் இங்கிலாந்துக்குப் போக நேர்ந்தது. தூய்மையான வாழ்க்கை நடத்திய செயிண்ட் சைமனின் கொள்கையைப் போற்றினர். சவனரோலாவைப் போலவே தாம் கண்ட கனவுகளைச் செயலில் அமைக்க முயன்ருர். ஒவ்வொருவருக்கும் தொழிலை அமைத்துத் தரவேண்டும். குடியானவர்களுக்கு நிலங்களும் தொழிலாளிகளுக்குத் தொழிற்சாலைகளும், வியாபாரிகளுக்குக் கடைகளும் அமைத்துத் தருவது சமுதாயத்தின் கடமையாகும். அரசியல், சர்க்கார் இவை யாவும் இன்றியமையாத கெடுதல்தான்; ஆனல் இந்தக் கெடுதலும் ஒரு காலத்தில் மறைந்து போய்விடும். அரசியல் எதற்காக என்ருல், இந்த அரசியல் ஒரு காலத்தில் மறைந்து போவதற்கே. அறிவு ஆற்றலுக்குத் தகுந்தபடி கூட்டங்கள் அமையும். தொழிலுக்குத் தகுந்தபடி ஊதியமென்று செயிண்ட் சைமன் சொன்னர். ‘சமத்துவம் என்பது மனிதன் தேவைக்குத் தகுந்தபடி

பகிர்ந்துகொள்ளுவதே' என்றார் பிளாங்கு. இவர் கண்ட பொருளாதாரக் கனவுலகம் மாய்ந்துவிட்டது. அதை நிறுவக்கூடிய ஞானம் நாட்டில் இல்லை.

ராபர்ட் ஓவன் (Robert Owen) கொண்ட லட்சியத்தைத் துருவி ஆராய்வோம். 1771-இல் இவர் பிறந்தார். பஞ்சாலையில் வேலைகள் கற்றுக்கொண்டார். பிறகு தம் பேருழைப்பால் அநேக யந்திரசாலைகளுக்கு இவர் எஜமானரானார். தொழிலாளர்களுக்குத் தக்க குடியிருப்பு வசதி அமைத்துத் தந்தார். இவர் ஆற்றலைக் கண்டு பல நாட்டுப் பெரியோர்கள் வியந்தார்கள். தொழிற்சாலைச் சட்டங்களைத் தோற்றச் செய்தவர் இவரே. வியாபாரம் ஓங்கியது. தொழிற்சாலைகள் விரிந்தன. ஆனால் தொழிலாளர்களுக்குத் தகுந்த வீடுகளில்லை. பெண்களும் சிறு குழந்தைகளும் வேலையில் அமர்ந்தார்கள். யந்திரங்கள் வந்த காரணத்தால் தொழிலின்மை தலைதூக்க ஆரம்பித்தது. எஜமானர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இருக்கவேண்டிய நல்ல தொடர்பு அற்றுப் போய்விட்டது. கோரப் பணப்பேயின் பலி பீடத்தின்மீது ஏழை மக்களை வதைத்தார்கள். ஆசைத்தீ அன்பு ஊற்றை வறண்டு போகும்படி செய்துவிட்டது. இத்தச் சூழ்நிலையில் ஓவன் தோன்றி அதை முற்றும் மாற்ற முயன்றார்.

"மனிதன் வாழப் பிறந்தான். இன்பமாய் அவன் காலங் கழிக்க வேண்டும். தனித்த மனிதனின் வாழ்வு இன்புறவேண்டும். இந்தத் தனித்த மனிதனின் இன்பம் சமுதாயத்தின் இன்பத்தோடு ஒன்று பட்டுக் கரைய வேண்டும். இந்த இன்பத்தைத் தவிர வேறு இறைவனில்லை; வேறு மதமில்லை. ஆண்டவனுக்குப் பணி ஆற்றுவது தக்க தொழிலில் அமர்வதே. மனிதன் இயற்கையில் நல்ல குணம் வாய்ந்தவன்; தக்க சூழ்நிலையை வகுத்துத் தந்தால் அவன் குணம் மாறும். தேசியப் படிப்பு வேண்டும்; படிப்பால் அனைவரும் குணமுள்ளவர்களாய்த் திகழ்வார்கள். கட்டாயப் படிப்பை வற்புறுத்த வேண்டும். குழந்தைப் பருவத்திலேயே, தோழமைத் தன்மையை அவர்கள் மனத்தில் பதியும்படி செய்தல் நலம். தொழிற் செயதி மன்றம் (Labour Bureau) ஒன்றை நிறுவ வேண்டும். படிப்பு, தொழில் இவைகளுக்குப் பஞ்சம் நேரக் கூடாது. மதுபானத்தை ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவரவேண்டும். 'ஏழைச் சட்டம்' என்ற சட்டத்தை அகற்ற வேண்டும்.

"மடங்கள் மதக் கோட்பாடுகளில் இறங்காது அன்பு நெறியைத்தான் எங்கும் பரப்ப வேண்டும். வேலையில்லாதவர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வேலையில்லாத் தன்மையை ஒழிக்க வழி தேட வேண்டும். விவசாயம், கைத்தொழில் இந்த இரண்டும் செழிக்க வழி தேடுவது மிகவும் நல்லது. நாட்டை அநேகம் பிரிவுகளாய்ப் பிரிக்க வேண்டும். 500 ஜனங்களிலிருந்து 2,000 ஜனங்கள் வரையில் ஒரு கிராமப் பிரிவில் வசிப்பார்கள். ஒவ்வொரு பிரிவின் நடுவிலும் வீடுகள் இருக்கும். அங்கே பொதுவாய்த் தூங்குமிடங்கள், பொதுச் சமையலறைகள், பொதுச் சாப்பாட்டு விடுதி, பொதுப்பள்ளிக்கூடங்கள், பொது நூல் நிலையங்கள், பொது விளையாடுமிடங்கள் - இவை யாவும் பொலிந்து விளங்கும். மக்கள்

விரும்பி அவரவர் சக்திக்கேற்ற வாறு தொழிலை நடத்துவார்கள். இந்தச் சிறிய பிரிவுகள் எல்லாம் சேர்ந்து இசைக் கருவிபோல் ஜன சமுதாயம் நிகழும். ஒவ்வொரு கிரா மப் பிரிவும் சமுதாய யாழில் ஒரு நரம்பாகும். எல்லா நரம்புகளும் சேர்ந்து இன்பமென்ற ஒரே சுருதியை எழுப்பவேண்டும்.'' இவையே ஓவனின் கொள்கை.

தாம் ஓர் எஜமானராயிருந்த போதிலும் தொழிலாளர்களின் இன்பக் கனவுதான் அவர் முன் எப் போதும் மிதந்துவரும். எஞ்செல்ஸ் (Engels) இவரைப்பற்றிக் கூறிய மொழிகள் போற்றத் தகுந்தவை: "தொழிலாளர்களின் நன்மையைக் குறித்து ஏதாவது ஒரு கிளர்ச்சி எழுமானல், ஓவன் பெரியாரைச் சொல்லிக்கொண்டே அது எழும்'' என்ருர்.

ஓவன் பழுத்த அநுபவமும் அறிவுமுள்ளவர். உள்ளமோ உல கத்தையே அன்புறத் தழுவும் உள் ளம்; கள்ளங் கபடில்லாத உள்ளம். உலகத்தை ஒரு பொன்னுலகமாக மாற்ற அவர் அரும்பாடு பட்டார்.

இந்த அபேதவாதிகள் ஒரே நோக்கமுடையவர்கள். வறுமையை மாய்த்து இன்பத்தைப் பெருக்க வேண்டுமென்பதே இவர்கள் நோக் கம். ஆனல் இவர்களிடையே அதை அடைகிற முறையில் அபிப்பிராய பேதங்கள் உண்டு. பாபியூவ், காபே இந்த இருவரும் எல்லாவற்றிலும் பேதமே கூடாது என்ருர்கள். பூரியே, செயிண்ட் சைமன் ஆகிய இருவரும் ஆற்றல்களில் வித் தியாசம் உண்டென்றும் அறிவு ஆற் றல்களுக்குத் தக்கவாறு ஊதியம் பெறவேண்டுமென்றும் கூறினர்கள். பிளாங்கு என்பவர் அறிவிலும் ஆற்றலிலும் வித்தியாசம் இருப்ப தாக ஏற்றுக்கொண்டாலும், 'அறி வாற்றலுக்குத் தகுந்தபடி' ஊதியம் அளிக்காமல், மனிதனின் தேவைக் குத் தகுந்தபடி வழங்கவேண்டும் என்ருர். ஆனல் இவர்கள் அனை வரின் முன்னும் சமுதாயமாகிய இன்பக் கோயில் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பற்பல பாதைகள் அமைக்கலாமல்லவா? ஒவ்வோர் அபேதவாதியும் தாம் கண்ட நல்லதைச் சொன்னர்கள். தாம் தாம் வகுத்த பாதையில் சென்ருர்கள். பாதைகள் பல உண்டு; ஆனல் சேணில் மிளிர் கிற அன்பு ஆலயம் ஒன்றுதானே!

கலைஞனின் கையெழுத்து

சரிவர உருத் தெரியாதபடி புதிர் போல் சித்திரம் வரைந்து உலகப்பிரசித்தி பெற்ற பிக்காஸோ என்ற கம்யூனிஸ்ட் ஓவியர், 1941-இல் தம்முடைய படங்களில் ஒன்றை ரோடின் என்ற பிரபல பிரெஞ்சுச் சிற்பியிடம் காட்டினர். "இது உங்க ளுக்குப் பிடிக்கிறதா? இதில் இன்னும் என் கையெழுத்தைப் போடவில்லை; உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்ட பின்பே போடவேண்டும் என்றிருக்கிறேன்...'' என்ருர்.

படத்தை ரோடின் தம் கையில் வாங்கினர். மேலும் கீழும் வலமும் இடமும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். கடைசியில், "போடுங்கள்; கட்டாயம் போடுங்கள். போட்டால்தான் படத்தை வாங்குகிறவர் அதை எப்படி மாட்டுகிறது என்பதையாவது தெரிந்துகொள்வார்'' என்ருர். 'காலிபான்', பாரிஸ்.

ஆகாயப் பிரயாணத்தில் வெகு ஆச்சரியமான அபிவிருத்தி ஏற்படுத்தியுள்ள விமான விவரம்.

லண்டனுக்கு ஒரே நாளில்

★

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளுக்கு முன் ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற சகோதரர்கள் பறக்கும் சாதனம் ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். அவர்களுடைய முதல் விமானம் 150 அடி உயரந்தான் பறக்கும்; அதுவும் சில விநாடிகள்தான்.

'டில்லியில் டீ அருந்திவிட்டு விமானத்தில் ஏறினால் மறுநாள் காலைச் சாப்பாட்டுக்கு லண்டன் போய்ச் சேர்ந்துவிடக்கூடிய அளவுக்கு அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குள் விமானப் போக்குவரத்து முன்னேற்றம் அடைந்து விடும்' என்று அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள். இப்படி இதுவரையில் நடைபெறவில்லையாயினும் 'பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷனை'ச் சேர்ந்த டிஹாவிலண்டு 'காமெட்' என்ற ஜெட் விமானத்தினால் இது முடியும் என்று தெரிகிறது.

பி. ஓ. ஏ. ஸி. யில் 'காமெட்' விமானப் பகுதியைச் சேர்ந்த காப்டன் ஏ. எம். மஜெண்டீ என்பவர், வேறு சில விமானச் சிப்பந்திகளுடன் அதை லண்டனிலிருந்து பன்னிரண்டே மணி நேரத்தில் கராச்சி வந்து சேரும்படி ஓட்டி வந்தார். இவர்கள் நடுவில் கெய்ரோவில் ஒன்றரை மணி நேரம் வேறு தங்கிவிட்டு வந்திருக்கிறார்கள். தூரக்கிழக்கை நோக்கி முதல்தரம் பரிசோதனைக்காக வந்த இந்த விமானத்தை டில்லியிலுள்ளவர்கள் காணச் சந்தர்ப்பம் வாய்த்தது. நடுப்பகல் படை பதைக்கும் வெயிலில் செப்டம்பர் முதல் தேதியன்று அது பாலம் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. போகும் தூரத்துக்குத் தகுந்தபடி அதில் 36 முதல் 48 ஆசனங்கள் வரையில் போட இடம் இருக்கிறது.

அன்று விமான நிலையத்தில் கூட்டம் ஆயிரம் பேருக்குமேல் இருக்கும். வெயில் கொளுத்தியது. விமானம் கடைசியாகக் கண்ணுக்குத் தெரிந்தது; அப்போது 10,000 அடி உயரத்தில் இருந்திருக்கும். சாதாரண டகோடா விமானமோ என்று எண்ணும்படி அது உடனே மறைந்துவிட்டது. கூட்டத்தினரின் பொறுமை எல்லை கடந்த சமயத்தில் அது கிரீச்சென்ற ஒரு விதச் சத்தத்துடன் ஒரு கட்டிடத்தின் மேலே தென்பட்டது. அடுத்த ஐந்து நிமிஷங்களில் அது விமானச் சுவட்டில் வந்து ஜம்மென்று இறங்கியது.

விமானம் தரையில் அமரச் சரியாகப் பதினைந்து நிமிஷங்கள் ஆயின. பனி மூட்டமும் நிலையம்

காப்பிரைட்: போரம் (ஆங்கிலம்: 16-9-'51), பம்பாய்.

கண்ணுக்குப் புலப்படாமலும் இருந்தால் எப்படி இறங்க வேண்டுமோ அதைப் போல எண்ணி யந்திர சாதனங்களின் உதவியால் இறங்கியதுதான் இவ்வளவு நேரமான தற்குக் காரணம். கீழே இறங்கும் போது இருக்கும் சத்தம் அது உயரத்தில் பறக்கும்போது இல்லை. இறங்கும்போது உள்ள வேகமும் சாதாரண வைகிங் டகோடா விமானங்களைவிடக் குறைவுதான். 'காமெட்' சகஜமாக 40,000 அடி உயரத்தில் பறக்குமாம். உயர்ந்த வேகம் மணிக்கு 490 மைல். இவ்வளவு உயரத்தில் பறக்கும்போதும் அவ்வளவாக அசைவு தெரியாது.

இந்த ஜெட் விமானத்துக்குப் பெட்ரோல் உபயோகிப்பதில்லை. மண்ணெண்ணெய்தான் உபயோகிக்கிறார்கள். நெருப்புப் பயம் அவ்வளவாக இல்லை. பெட்ரோலைப் போல மண்ணெண்ணெய் அவ்வளவு சீக்கிரத்தில் தீப் பிடித்துக்கொள்ளாது அல்லவா?

அன்று வந்த விமானம் பிரிட்டிஷ் சர்க்காருடைய விமானம் என்று பி. ஓ. ஏ. ஸி., பிரதேச மானேஜர் தெரிவித்தார். பத்திரிகை நிருபர்கள் தங்களை அலாகாபாது வரை ஏற்றிச் செல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அது ஒத்திகைக்காக வந்த விமானம் என்று சொல்லி அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஆர்ச்சி பால்டு நை, போக்குவரத்துக் காரிய தரிசி ஏ. வி. பாய் இவர்கள் இருவரையும் தவிர உள்ளே ஏறிச் சென்று பார்க்க வேறு யாரையும் அநுமதிக்கவில்லை. வெளியில் கீழே இருந்து அதைத் 'தரிசிக்க' ஏராளமான மக்கள் திரண்டிருந்தார்கள். போலீஸ் பந்தோபஸ்து இருந்தும் அந்தக் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை.

1952 - ஆம் வருஷத்தில் இந்தக் 'காமெட்' விமானப் போக்குவரத்துச் சர்விஸ் தொடங்குமாம். முதலில் லண்டனிலிருந்து கெய்ரோ வரையிலும்; பிறகு தென்னாப்பிரிக்கா வரையிலும்; அதற்குப் பிறகுதான் தூரக் கிழக்குப் பிரதேசங்களுக்குத் தொடங்குமாம். வழக்கமாக உள்ள வேகத்தை விட அதிகமாக ஆரம்பத்தில் விடப் போவதில்லையாம்.

ஆகாயத்தில் 'ஸ்ட்ராடோஸ்பியர்' என்ற இருள்வெளி மண்டலத்தில் இந்தக் காமெட் பறக்கிறது. இதில் புரொபல்லர் இல்லாதது ஒன்றுதான் வித்தியாசமே யொழிய மற்றப் பிஸ்டன் வைத்த எஞ்சினையுடைய விமானம்போலத் தான் இது தோற்றம் அளிக்கிறது. இதற்கும் பின் இறக்கைகள் உண்டு. உட்புறப் பகுதி ஒரே விதமாய் அமையவுமில்லை; கொஞ்சங்கூடச் சத்தம் கேட்காதபடி தயாரித்தது என்றும் சொல்வதற்கில்லை. மற்றச் சாதாரண விமானங்களுக்கு அடிப்பாகத்தில் நாலு சக்கரம் இருக்குமே; இதில் அந்த மாதிரி இல்லை. அவைகளுக்குப் பதில் ஒரே சக்கரந்தான் இருக்கிறது.

பி.ஓ.ஏ.ஸி., இலாகா மொத்தம் 14 காமெட்டுகளுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது. இவற்றில் ஒன்பதில் கோஸ்ட் எஞ்சின்களும் பாக்கி ஐந்தில் ரோல்ஸ் ராய்ஸ் ஏவன் எஞ்சின்களும் பொருத்தப்படுமாம். அந்த 14 காமெட்டுகளும் சீக்கிரத்திலேயே அவர்களுக்கு வந்துவிடுமாம். அவை தவிர இதே போன்ற இன்னும் 6 காமெட்டுகளுக்கு இப்போது ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷ ரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

விவேகானந்தர்

தற்காலக் கல்வி முறை: "தற்காலத்துச் சர்வகலாசாலை, குமாஸ்தா உத்தியோகத்துக்கு வேண்டிய ஆட்களைத் தயாரிக்கும் இயந்திரமாக மாறிவிட்டது. வெறும் ஏட்டுச் சுரைக்காய்க் கல்வி முறை என்றுதான் இதைச் சொல்லவேண்டும். இதோடு நின்றால் தேவலையே! நம் பக்தி, சிரத்தை எல்லாங்கூட இந்தக் கல்வி முறையால் அழிந்து வருகின்றன. கீதை இடைச்செருகலென்றும், வேத மந்திரங்கள் நாடோடிகள் பாட்டு என்றும் ஏளனம் செய்கிற மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது. ஆனால் மேல் நாட்டிலோ நம் பழைய நூல்களை



ஆராய்ந்து அவற்றிலிருந்து அரிய உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் பல அறிஞர்கள். அவர்கள் நம் முன்னோரின் அறிவைக் கண்டு வியக்கிறார்கள். உண்மையான ரிஷிகள் இன்று அங்கேதான் தோன்றியிருக்கிறார்கள். இங்கே உள்ள ஆஸ்திகம் வெறும் எலும்புக் கூடுதான். நாஸ்திகமோ சொந்த நாட்டுக் கலைப்பண்பையே குலைக்க முற்பட்டிருக்கிறது. இந்த நிலை அடியோடு மாறக் கல்விமுறை சீர்திருந்துவது அவசியமாகும்."

—(வாக்கு)

தியானத்தின் மகிமை: சுவாமி விவேகானந்தர் ஜெர்மனிக்குச் சென்றிருந்தபோது அங்கே பால் டேயஸ்ஸன் என்ற பேராசிரியரின் வீட்டில் தங்கினார். முதல் நாள் மேஜை மேல் புதிதாக வெளியான ஆங்கிலக் கவிதைத் தொகுதி ஒன்று இருப்பதைக் கண்டார் சுவாமி. அதை எடுத்து ஆவலுடன் படிக்கத் தொடங்கினார். டேயஸ்ஸனுக்கு இந்தியாவைப்பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசை. இரண்டு மூன்று தரம் ஏதேதோ கேட்டார். விவேகானந்தர், 'ஆமாம்', 'இல்லை

வாழ்வும் வாக்கும்

என்று அந்தக் கேள்விகளுக்குச் சுருக்கமாகப் பதில் கொடுத்து வந்தார். நாலாவது கேள்வியிலிருந்து பதிலே இல்லை. 'இந்தச் சந்நியாசி ஒரு வேளை செவிடனோ?' என்று எண்ணிக்கொண்டு யேஸ்ஸன் உரக்க அதையே திரும்பித் திரும்பிக் கேட்டார். விவேகானந்தரின் மனம் கவிதையின் சுவையில் ஈடுபட்டிருந்ததால் அவர் காதில் அது விழவேயில்லை. யேஸ்ஸனின் முகம் சிவந்தது. 'இந்தப் பக்கிரிக்கு எவ்வளவு திமிர் பார்!' என்று கோபத்தோடு அந்த இடத்தை விட்டு எழுந்து வெளியே போய்விட்டார்.

சற்று நேரங் சழித்து விவேகானந்தர் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து வெளியே வந்தார்; தோட்டத்தின் ஒரு மூலையில் யேஸ்ஸன் உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டு அவரிடம் சகஜமாகப் பேச வந்தார். யேஸ்ஸன் விவேகானந்தரை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. பேசசெடுத்தும் பழையபடியே யேஸ்ஸன் உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு விவேகானந்தர் அடக்கமான குரலில்,

"ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிக்கவேண்டும்...ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லையே!" என்றார்.

யேஸ்ஸன் தலைநிமிர்ந்து, "அது சரி. நான் அத்தனை தடவை கேட்டும் நீங்கள் ஏன் சும்மா இருந்தீர்களோ எனக்குத் தெரியவில்லையே!" என்று ஏளனக் குரலில் கேட்டார்.

விவேகானந்தர் திடுக்கிட்டார். "எப்போது?" என்றார்.

"ஏன் ஒன்றும் தெரியாததுபோல் நடிக்கிறீர்கள்?" என்று யேஸ்ஸன் கோபத்தோடு கேட்டார்.

அப்போது விவேகானந்தர் தாம்



படித்த கவிதைத் தொகுதியிலிருந்து, 'நண்பனை மன்னித்தருள்வாய்' என்ற ஒரு நீண்ட கவிதையை அருமையாக எடுத்துச் சொன்னார்.

யேஸ்ஸன் திகைத்து நின்றார். அவருக்கு இப்போதுதான் விவேகானந்தர் ஏன் தம்மோடு பேசாமல் இருந்தார் என்று தெரிந்தது. கவிதையின் நயத்தில் அவர் ஈடுபட்டிருந்ததே காரணம் என்று உணர்ந்தார். பணிவாக, "சுவாமிஜி, நானும் அந்தக் கவிதையை நெட்டுருப் போட வேண்டும் என்று நாலு நாளாய்ப் பார்க்கிறேன். முடியவில்லை. நீங்கள் எப்படி ஐந்தே நிமிஷத்தில் அதை மனப்பாடம் செய்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்.

விவேகானந்தர் தியானத்தின் மகிமையை அவருக்கு எடுத்து விளக்கினார். அது முதல் யேஸ்ஸன் அவருடைய முக்கிய ஐரோப்பியச் சிஷ்யர்களில் ஒருவர் ஆகிவிட்டார். பின்னால் விவேகானந்தர் அவரைத் 'தேவஸேன்' என்று அன்போடு அழைக்கத் தொடங்கினார்.

—(வாழ்வு)

மகா சமாதி: 1902-இல் ராமகிருஷ்ணருடைய பிறந்த நாள் கொண்டாட்டம் பேலூர் மடத்தில் வெகு விமரிசையாக நடந்தது. விவேகானந்தரின் உடல்நிலை சரியாக இராவிட்டாலும் அவர் அதில் கலந்துகொண்டு பக்தர்களுக்கு உற்சாக மூட்டினார். ஆனால் ஒரு வாரத்தில் உடல்நிலை மிக மோசமாகிவிட்டது. இருந்தாலும் தியானம் செய்வதை மட்டும் அவர் விடவேயில்லை. அடிக்கடி பஞ்சாங்கத்தைக் கொண்டுவரச் சொல்லி, "இன்றைக்கு என்ன திதி? அன்றைக்கு என்ன திதி?" என்று கேட்டுக்கொண்டேயிருந்தார். யாராவது சிஷ்யர் வரிசையாகப் படித்துக்கொண்டே போகும்போது ஓர் இடத்தில், "சரி, சரி, போதும்" என்று சொல்லிவிடுவார். அப்போது யாருக்கும் அதில் விசேஷம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒருநாள் அவருடைய பழைய நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, "தேவியின் மனோபீஷ்டம் நிறைவேறி விட்டது" என்றார் சுவாமிகள். நண்பருக்கு அதன் அர்த்தம் அன்று புரியவில்லை.

சமாதி அடைவதற்கு மூன்று நாள் முன் கங்கைக் கரையில் உலாவியபடி, "நான் போய்விட்டதும் இங்கே சமாதி கட்டினால் நன்றாக இராதா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். கூட வந்த சிஷ்யர்கள், 'தமாஷ் செய்கிறார் சுவாமிகள்' என்று எண்ணினார்கள். 1902 ஜுலை 4-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று இரவு தியானம் செய்துவிட்டுச் சுவாமிகள் படுக்கையில் படுத்துக்கொண்டார். அருகில் இருந்த ஒருவரைத் தலைப்பக்கம் விசிறச் சொன்னார். ஒன்பது மணி இருக்கும். விவேகானந்தர் அசையாமல் இருக்கவே, 'தியானம் செய்கிறார்போல் இருக்கிறது' என்று சிஷ்யர் வெளியில்

போய்ச் சற்று நேரம் கழித்துத் திரும்பினார். இன்னும் பழைய படியே இருப்பதைப் பார்த்து விவேகானந்தரின் உடலைத் தொட்டபோது அது சில்லென்றிருந்தது. விவேகானந்தர் மகாசமாதியானார் என்ற செய்தி உலகம் முழுதும் பரவியது. இவ்வளவு இளவயதில் அவர் காலமாவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை; ஆகையால் எல்லாருக்குமே இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. (வாழ்வு)

—'காரவான்'

பாம்பு கடித்தால் மனங் கலங்கிவிடாமல், உடனே கையாளவேண்டிய சில சிகிச்சை முறைகள் இவை.

பாம்பு விஷம்

★

பாம்பு கடி மூலம் வருஷந்தோறும் நமது நாட்டில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் உயிர் இழக்கிறார்கள். விஷம் ஏறினதும் முதலுதவி அளிப்பது சம்பந்தமாகப் பெரும்பாலான மக்களுக்கு எதுவும் தெரியாதிருப்பதே இதற்குக் காரணம். இது சம்பந்தமாக இந்திய சர்க்காரின் சுகாதார இலாகா டைரக்டர் ஆபீஸ் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் சில விஷயங்கள் பொதுஜனங்களுக்குப் பயன்படும்:

ஒருவனைப் பாம்பு தீண்டினதும் அதற்குத் தகுந்த பரிகாரந் தேடக் காலதாமதம் ஆகக்கூடாது. அவன் ஓடக்கூடாது. ஓடினால் ரத்த ஓட்டம் துரிதமாகி, விஷம் உடல் முழுவதும் வெகு விரைவில் பரவிவிடும். யாரையாவது ஒத்தாசைக்கு அழைக்கவேண்டும்; சமீபத்தில் ஒருவரும் இல்லாமலிருந்தால், ஒத்தாசை பெறக்கூடிய இடத்துக்கு மெதுவாக நடந்து செல்ல வேண்டும். கூடுமானால் பாம்பைக் கொல்வது நல்லது. அந்தப் பாம்பு விஷமுள்ளதா இல்லையா என்று அறிய இது உதவியாக இருக்கும். உடலின் எந்தப் பாகத்தில் தீண்டியதோ அதற்குப் பொருத்தமாகச் சிகிச்சை செய்யவேண்டும்.

கைகால்களில் தீண்டினால், (1) கடிபட்ட இடத்துக்குமேல் உடனே பலமாக ஒரு கட்டுப் போடவேண்டும். கனமான ஒரு துண்டுக் கயிற்றையோ, நூலையோ, துணித் துண்டையோ உபயோகிக்கலாம். ரத்த ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தும்படி வரிந்து கட்டி முடியில் ஒரு குச்சியைச் செருகித் திருகுவது நல்லது. ஆனால் 20 நிமிஷங்களுக்கு ஒரு தடவை கொஞ்ச நேரத்துக்குக் கட்டைச் சிறிது தளர்த்திவிடவேண்டும். கைவிரல்களிலோ, அல்லது கால்விரல்களிலோ தீண்டியிருந்தால் அந்த இடத்துக்குச் சற்று மேலே கட்டவேண்டும். (2) கடிபட்ட இடத்தைத் தண்ணீரோ, லோஷன் போட்டோ நன்றாகக் கழுவவேண்டும். தோலிலும், கடிகாயத்திலும் ஒட்டியிருக்கும் விஷத்தை அகற்ற இது உதவியாயிருக்கும். தண்ணீர் கிடைக்காமலிருந்தால் மூத்திரம் விட்டுக் கழுவவேண்டும். (3) கடிகாயத்தை அரை அங்குலம் நீளத்திலும், கால் அங்குலம் ஆழத்திலும் கீறவேண்டும். ரத்த வடி குழாய் (Veins) வெட்டுப் படாதபடி, கீழும் மேலும் வெட்டுகள் போடவேண்டும். காயத்தில் விஷப்பல்லின் முறிந்த பாகங்கள் இருந்தால் அவற்றை அகற்ற வேண்டும். ரத்த ஓட்டம் முழுதும் தடைப்படும்படி கட்டுப் போட்டால் காயத்தின் வழியாக ரத்தம் பாயாது. அதனால் கட்டைச் சிறிது தளர்த்தி ரத்தம் பாயும் குழாய் வழியாக (Artery) அதை ஓடச் செய்ய வேண்டும்.

மூலம்: திருவிதாங்கூர் - கொச்சிச் செய்தி (தமிழ்: 1-10-'51), திருவனந்தபுரம்.

காயத்தின் வழியாக ரத்தம் வெளியே வரும்போது அதோடு விஷமும் கலந்து வெளியே வந்து விடும். தடையில்லாமல் ரத்தம் ஓடுகிறது என்று தெரிந்ததும் கட்டைத் திரும்பவும் இறுக்கி, ரத்த ஓட்டத்தைத் தடை செய்யவேண்டும். (4) வாயில் காயமோ, புண்ணோ இல்லாதிருந்தால் வாயினுல் விஷத்தை உறிஞ்சிஎடுப்பது நல்லது. 'பிரஸ் பம்பு' போன்ற ஏதாவது கருவி கிடைக்குமானுல் அதை உபயோகித்து விஷத்தை இழுத்தெடுக்கலாம். ஒரு குப்பியில் கொஞ்சம் துணியையோ, காகிதத்தையோ போட்டுத் தீயில் எரித்துச் சூடாக்கிய பின் அதன் திறந்த பாகத்தைக் காயத்தின்மேல் அமுக்கி வைத்து, விஷத்தை இழுத்தெடுக்கலாம். பாம்பு தீண்டி மூன்று முதல் எட்டு மணிநேரம் வரை ஆனுலுங்கூட விஷத்தில் பெரும் பகுதியை இழுத்தெடுக்க முடியும். காயத்தின்மேல் வீக்கம் கண்டால் குறுக்கே வெட்டிக் கீறிய பின் விஷத்தை இழுத்தெடுக்க வேண்டும்.

உடலிலோ அல்லது முகத்திலோ தீண்டினுல் கட்டுக் கட்டுவது சாத்தியமில்லை. அந்த மாதிரி சந்தர்ப்பங்களில், (1) கடிகாயத்தையும் அதன் அருகிலுள்ள பாகத்தையும் நன்ருகக் கழுவவேண்டும். அதனுல் காயத்திலும் தோலிலும் ஒட்டியிருக்கும் விஷம் நீங்கும். தண்ணீர் கிடைக்காமலிருந்தால் மூத்திரம் உபயோகித்துக் கழுவலாம்; (2) கடி காயத்திலிருந்து அரை அங்குல நீளத்திலும் கால் அங்குல ஆழத்திலும் மேலும் கீழுமாகக் கீறி ரத்தத்தையும் நீரையும் வெளியே தள்ளவேண்டும்; (3) முன் சொன்னதுபோல் வாயால் உறிஞ்சியோ சூடேற்றிய குப்பியை உபயோகித்தோ விஷத்தை வெளியே இழுத்தெடுக்க வேண்டும்.

பாம்பு தீண்டியவனைத் தைரியப்படுத்தி அவனுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். பாம்புகளில் அநேகம் விஷம் இல்லாதவை. விஷமுள்ள பாம்புகள் கடித்தாலும் உயிர் போய்விடும் என்று சொல்லக் கூடிய அளவு விஷம் அநேகருடைய உடலுக்குள் செல்வதில்லை. கெட்டியான வஸ்திரங்களின்மேல் கடிபட்டால் தோலின் மேல்பாகத்தை மட்டுந்தான் பாதிக்கும். அப்போது ரத்தத்தில் விஷக் கலப்பு ஏற்படாது. கடிபட்டவனுக்கு லாகிரி வஸ்துக்களைக் கொடுக்கக்கூடாது. அதனுல் ரத்த ஓட்டம் துரிதப்பட்டு விஷம் உடலெங்கும் பரவிவிடும். காயத்தில் பொட்டாஸியம் பெர்மாங்கனேட் என்ற மருந்தைப் போடக்கூடாது. இது பாம்பு கடியால் ஏற்படும் அபாயத்தை விடக் கெடுதல்.

கடித்த பாம்பு அகப்படாவிட்டால் அது எந்த இனத்தைச் சேர்ந்ததென்று கண்டுபிடிக்கக் கடிவாயைக் கவனிக்கலாம். பற்களின் அடையாளங்கள் அடுத்தடுத்துத் தெரிந்தால் கடித்தது விஷமுள்ள பாம்பு இல்லை என்று அறிந்து கொள்ளலாம். இரண்டு பற்களின் அடையாளம் தெரிந்தால், கடித்தது விஷமுள்ள பாம்பு என்று தீர்மானிக்கலாம். பற்களின் இடையிலுள்ள அகலத்துக்குத் தக்கதாகப் பாம்பு சிறிதாகவும் இருக்கும்; பெரிதாகவும் இருக்கும். ஓர் அடையாளம் மட்டும் இருந்தால் ஒரு பல்லால் உண்டான காயமென்றும், மூன்ருே நான்கோ இருந்தால் ஒன்று தவிர மற்றவை பின் வரிசை நச்சுப் பற்களால் உண்டான காயம் என்றும் ஊகிக்கலாம்.

மண்டையை முகமாக்கும் சிற்பி

ஆண்ட்ரூ ஸ்டீகர்

★★★

'எலும்பு பெண்ணுருவான' அற்புதத்தை நம்பாதவர் இருக்கலாம். இன்று இந்த ருஷிய விஞ்ஞானி புரியும் அதிசயச் செயல் எவருக்கும் வியப்பளிப்பது. மிலான் நகரத்து 'எபிகா' என்ற பத்திரிகையில் வெளியானது இந்தக் கட்டுரை.

★★★

மிக்கேல் எம். ஜெராஸிமாவ் என்பவர் மிகவும் புது மாதிரியான ஒரு சிற்பி. மனிதர்களின் உருவங்களைத் தத்ரூபமாய் ஓவியம் வரைவதே அவருடைய விசேஷத் திறமை; ஆனால், அவர் வரைவது சித்திரக் கண்காட்சிகளில் வைப்பதற்காக வரையும் ஓவியம் அல்ல. அவர் நடுத்தர வயதுக்காரர். மனிதர்களின் மனம், உடல் கூறு இவைகளையும் பழக்க வழக்க வரலாறுகளையும் ஆராயும் சாஸ்திர (Anthropology) அறிவில் பெரும் புகழ் பெற்றவர். அவரிடம் ஒரு மனிதனின் மண்டையோட்டைக் கொடுத்துவிட்டால் போதும்; அதைப் பார்த்தே, அந்த மனிதனின் முகத் தோற்றத்தைப் போட்டோ எடுத்தது மாதிரி அவர் ஓவியம் வரைந்துவிடுவார்; அவர் கையின் மந்திர சக்தியால் மண்டையோடு மறைந்து, மீண்டும் உயிருள்ள முகம் தோன்றிவிடும்.

1949-இல் அவர் 50,000 ரூபிள் ஸ்டாலின் பரிசைப் பெற்றார். பிராணி சாஸ்திரத்தில் அவர் செய்துள்ள விசேஷ ஆராய்ச்சிக்காகத்தான் அந்தப் பரிசு அவருக்குக் கிடைத்தது; அவருடைய சிற்பம் அல்லது ஓவியக் கலைக்காக அல்ல.

இருபத்தைந்து வருஷகாலமாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த விஷயங்களின் பலனாக அவர் இந்தத் திறமை பெற்றிருக்கிறார்; அவர் எத்தனையோ மனிதர்களின் மண்டையோடுகளை வெகு நுட்பமாக அளந்து பார்த்திருக்கிறார்; இடுகாட்டிலும் பிரேத பரிசீலனை அறையிலும் பல மண்டைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கிறார்; ஏராளமான பேரின் மண்டைகளை எக்ஸ்-ரே படம் எடுத்துக் கூர்ந்து கவனித்திருக்கிறார். மண்டையோட்டுக்கும் முக அமைப்புக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதைத் தமது இருபத்தைந்து வருஷ ஆராய்ச்சியின் பயனாக அவர் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒரு கொலை வழக்கில் துப்பறிவதற்கு அதிகாரிகள் அவருடைய உதவியை நாடினார்கள். 1940 ஏப்ரல் மாதத்தில் ஒரு வாலிபப் பெண் காணாமல் போய்விட்டாள். அவளை அவளுடைய கணவனே கொலை புரிந்திருக்க வேண்டும் என்று சந்தேகித்து அவனைப் போலீஸார் கைது செய்தார்கள். ஆனால், போதிய சாட்சியம் கிடைக்கவில்லை. இதனால் அவனை விடுதலை செய்துவிட்டார்கள்.

உருக்குலைந்த ஒரு பெண்ணின் பிரேதம் சில நாளைக்கெல்லாம் அகப்பட்டது. பழைய கணவனை மறுபடியும் கைது செய்தார்கள். ஆயினும், அந்தப் பிரேதம் அவனுடைய மனைவியின் உடம்புதான் என்று நிரூபிக்கத் தேவையான ருசுக் கிடைக்கவில்லை. கணவனை மீண்டும் விடுதலை செய்ய வேண்டியதாயிற்று.

விடாப்பிடியாக இந்த வழக்கில் உளவு விசாரித்துக்கொண்டிருந்த ஒரு துப்பாளிக்கு ஒரு யுக்தி தோன்றியது. அவர் அந்தப் பெண்ணின் மண்டையோட்டை எடுத்தார்; ஜெராஸிமாவ் என்ற நம் சிற்பியிடம் அனுப்பினார். அந்த மண்டையோட்டை வைத்துக் கொண்டு அதற்குரிய முகத்தைச் சிற்பி வரைந்து தந்தார். அதையும் காணாமற்போன பெண்ணின் பழைய போட்டோ ஒன்றையும் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். இரண்டும் முற்றும் ஒற்றுமையாயிருந்தன. பிரேதத்தின் மண்டையோடு, காணாமற்போன பெண்ணின் மண்டையோடுதான் என்று சந்தேகமறப் புலனாயிற்று.

ஆனால், சிற்பி ஜெராஸிமாவ் புதிதாய் அமைத்த முகம் சிறிது கிழடு தட்டியிருந்தது. அதனால் ருசு இன்னும் உறுதிப்பட்டதேயொழியப் பலவீனமாகவில்லை. ஏனென்றால், போட்டோ ஆறு வருஷங்களுக்கு முன் எடுத்தது. தவிர, கொலை நடந்த காலத்தில் அந்தப் பெண் எட்டு மாதக் கர்ப்பிணி; அதனால் வேறு அவள் உடல் இளைத்திருந்தது.

சிற்பி ஜெராஸிமாவின் ஆராய்ச்சிகளைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் மனித பரிணாம ஆராய்ச்சிக்காரர்களும் மிக அதிகமாய்ப் பாராட்டுகிறார்கள். கல், வெண்கலம், இரும்புக் காலங்களில் இருந்த ஆதிமனிதர்களின் மண்டையோடுகள், பூமிக்குள்ளிருந்து ஆராய்ச்சிக்காரர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் புதைந்த அவைகளை வைத்துக்கொண்டு, அந்தக் கால மனிதர்களின் உயிருள்ள முகங்களைத் தத்ரூபமாய்ச் சிற்பி ஜெராஸிமாவ் செதுக்கித் தந்திருக்கிறார். இப்படி அவர் செதுக்கித் தந்த முகங்களை ருஷியாவெங்கும் பல கண்காட்சிசாலைகளிலும் ஆராய்ச்சிக்கூடங்களிலும் வைத்திருக்கிறார்கள்.

மண்டையோட்டின் அமைப்புக்கும் முகத்தோற்றத்துக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தம்பற்றிச் சிற்பி ஜெராஸிமாவ் கண்டு பிடித்துள்ள சில உண்மைகள், உலகெங்கும் உள்ள கலைஞர்களுக்குப் பிரயோஜனப்படும். உதாரணமாக, மெலிந்து உறுதியாயிருக்கும் முகத்துக்குள் இருக்கும் மண்டையோட்டில் தனித்தனி எலும்புகள் நன்றாய் வளர்ச்சியுற்றுப் புடைத்திருக்குமாம்; மேலே மூடியிருக்கும் சர்மம் பளபள என்று இருக்குமாம்; அதிகமாகச் சதை மூடியிராதாம். மெலிந்து தனித் தனி எலும்புகளெல்லாம் குன்றி ஏறக்குறைய ஒரே மட்டமாக இருக்கும் மண்டையோடுள்ளவரின் முகமோ, சதை விழுந்து தளதளவென்று உப்பியிருக்குமாம். மண்டையோட்டில் உள்ள கோளாறுகள், மாறுபாடுகள் அனைத்தும் முகத்திலும் கட்டாயம் பிரதிபலிக்குமாம்.

★

பிரிட்டிஷ் - ஈரான் என்
ணெய்த் தகராறில் ஈரான்
பிரதம மந்திரி மொஸாடெக்,
மந்திரம் செய்து புட்டிப்
பேயை எழுப்புகிருர்; புட்டியி
லிருந்து என்ன கிளம்புமோ?

★



1

2



4

5

—'பம்பாய் கிரானிக்கிள்'

மறுபடியும் வருவார்களா?

லிலியன் பெர்னார்டி

உறவினர்களுடைய வீடுகளுக்கு விருந்தாளிகளாகப் போவது பெரியவர்களுக்கு உல்லாசம்; சிறுவர்களுக்கோ? பெரும்பாலும் தொல்லைதான். இதைப் பெரியவர் உணர்வதில்லை. போகுமிடங்களில் சிறுவரையும் களிப்பிக்க இந்தப் பெண்மணி கடைப்பிடித்த யுக்தியை இங்கே விளக்குகிறாள்.

"நாம் இன்று எங்கே போகப் போகிறோம் தெரியுமா? அத்தை வீட்டுக்கு!" என்று என் குழந்தைகளைப் பார்த்து உற்சாகமாய்ச் சொன்னேன். ஸூஸனுக்கு ஏழு வயது. லாரிக்கு இன்னும் ஐந்து வயது பூர்த்தியாகவில்லை.

"ஊஉம், வேண்டாம்" என்றார்கள் அவர்கள் இருவரும். அவர்கள் முகத்தில் விளங்கிய ஏமாற்றத்தை என்ன என்று சொல்வது?

என் கணவருக்கு இது பொறுக்கவில்லை. "ஏன் வேண்டாம்?" என்று கேட்டார்.

"அங்கே போய் என்ன செய்கிறது?" என்று ஸூஸன் சலிப்புடன் சொன்னான்.

"அங்கே விளையாடுவதற்கு ஒருத்தருமில்லை. அங்கே போனால் பொழுதே போகாதே" என்றான் லாரி அழாக்குறையாக.

இதைக் கேட்ட நாங்கள் திகைத்தவிட்டோம். இந்த மாதிரி சொற்களை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. அத்தை ரூத் வீட்டில் சுகமாகப் பொழுது போகவில்லை என்றால், யார் நம்புவார்கள்? நாங்கள் எப்பொழுது போனாலும் ரூத் எங்களை அங்கே சாப்பிடச் சொல்லிவிடுவாள். முதல்தரமான விருந்து தயாரித்திருப்பாள். சாப்பாடானதும் புருஷர்கள் தங்கள் இஷ்டப்படி பேசி வம்பளக்க வேறு அறைக்குச் சென்றுவிடுவார்கள். நான் சமையலறையில் ரூத்துக்கு உதவியாக ஏதாவது செய்துகொண்டிருப்பேன். அப்படியே இருவரும் ஏதாவது பேசிக்கொண்டிருப்போம்.

குழந்தைகள் ஸூஸனும் லாரியும் எப்படிப் பொழுது போக்குகிறார்கள் என்பதை என்ன காரணத்தாலோ எனக்குக் கவனிக்கத் தோன்றியதில்லை. அவர்களும் உற்சாகமாய் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நாங்கள் நினைத்துக்கொண்டிருந்தோம்.

"இன்றைக்குப் பார்; எவ்வளவு வேடிக்கையாகப் பொழுது போகப் போகிறது!" என்றேன்.

யாராவது ஏதாவது சொன்னால் பொறுமையாகக் கேட்கக்கூடிய சுபாவம் எனக்கு உண்டு. என் கணவருக்கும் அது உண்டு. எங்கள் குழந்தைகளே ஏதாவது சொன்னால் கூட நாங்கள் நிதானமாய்க் கேட்போம். எவ்வளவோ ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் சிநேகிதர், உறவினர் வீடு

காப்பிரைட்: பேரண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஜூலை '51), 4600, டைவர்ஸி அவென்யூ, சிகாகோ 39, யு. எஸ். ஏ.

களுக்கு நாங்கள் போய் வருவோம். அப்பொழுதெல்லாம் எங்கள் மனத்தில் படாத சில விஷயங்கள் இப்பொழுது சரேலென்று தெளிவாய் விளங்கின. எல்லார் வீடுகளுக்கும் போவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. ஹில்டா அத்தையின் வீட்டுக்குப் போவதென்றால், அவர்களுக்கு வெகு சந்தோஷம். ஏனென்றால், அங்கே அவர்களைப்போல இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். ஆனால் என் பிறந்த வீட்டுக்கோ, என் கணவரின் தாய் வீட்டுக்கோ போவதென்றால், அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் எங்களுக்கோ அவர்களையெல்லாம் போய்ப் பார்த்து வர வேண்டும் என்றிருந்தது. குழந்தைகளையும் எங்களுடன் அழைத்துச் செல்ல விரும்பினோம். என்ன செய்வது? இதற்கு ஓர் உபாயம் செய்தோம்.

குழந்தைகளுடன் அவர்களுடைய விளையாட்டுச் சாமான்கள் சிலவற்றையும் எடுத்துச் சென்றோம். குழந்தைகள் வைத்துக்கொண்டு விளையாடுவதோடு பெரியவர்களிலும் யாராவது கலந்துகொள்ளக்கூடியவை அவை. வீடு கட்டி விளையாடும் மரக் கட்டைகளையும் வேறு சில விளையாட்டுச் சாமான்களையுந்தான் குறிப்பிடுகிறேன். குழந்தைகளோ வர்ணப் பென்ஸில்கள், வர்ணம் கொடுக்கும் புத்தகங்கள் இவைகளை எடுத்துக்கொண்டார்கள். அவர்களுடைய அத்தையின் வீட்டுக்குச் சென்றோம்.

சமையல் அறைக் காரியம் முடிந்ததும், ஸூஸனுடன் கிண்ணத்தில் கோலி வீசி விளையாடலாம் என்று என் நாத்தியிடம் சொன்னேன். இந்த யோசனை பலித்தது. அவர்கள் இரண்டு பேரும் அதை விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது என் கணவர், அவர் தங்கையின் கணவர், லாரி இந்த மூன்று பேரும் ஏரோப்ளேன், கப்பல் முதலியவைகளைப் பொம்மை மரக் கட்டைகளால் கட்டி விளையாடினார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு மணி என்ன ஆயிற்று என்று பார்க்கும்பொழுது ஒன்றரை மணி நேரம் விளையாட்டில் கழிந்திருக்கிறது என்று தெரிந்தது. நாங்கள் பிரமித்துப் போனோம்.

இதற்குப் பிறகு யார் வீட்டுக்காவது சென்றால் குழந்தைகளை இந்த மாதிரி விளையாடச் சொல்லுவது எங்களுக்கு மிகவும் சுலபமாகி விட்டது. வர்ணப் பென்ஸில்கள், வர்ணப் புத்தகங்கள் ஆகியவை இருந்துவிட்டால் அவர்கள் நிம்மதியாய்ப் பொழுது போக்கத் தொடங்குவார்கள். ஆகவே, இனிமேல் என்ன செய்வதென்ற கவலை நீங்கிற்று. இதற்குப் பிறகு சிநேகிதர் வீடுகளுக்கோ உறவினர் வீடுகளுக்கோ போகும்பொழுதெல்லாம் குழந்தைகளுக்கு வேண்டிய பொருள்களை அவர்களே எடுத்து வரும்படி நான் சொல்லிவிட்டேன். இப்பொழுதெல்லாம் அவர்கள் பழம் பத்திரிகைகளை ஜாக்கிரதையாய் எடுத்து வைத்திருந்து போகுமிடங்களுக்குக் கொண்டுபோய் அவற்றிலிருந்து நல்ல படங்களை அழகாய்க் கத்தரித்து எடுப்பார்கள். இது அவர்களுக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு. பெரிய அட்டைகளைத் தேடி எடுத்து அதில் அந்தப் படங்களை அவர்கள் ஒட்டி வைப்பார்கள். என்னிடமிருக்கும் கார்பன் பேப்

பரை வைத்துப் பத்திரிகையி லுள்ள படங்களை வேறு காகிதத்தில் எப்படி வரைவது என்பதை அவர்களுக்குக் காண்பித்தேன். இதில் மணிக்கணக்காய் அவர்களுக்குப் பொழுது போகும். அவர்கள் தாமாகவே ஒரு விளையாட்டைக் கண்டு பிடித்து விளையாடினார்கள். ஒரு பழம் பத்திரிகை, கார்பன் பேப்பர், பென்ஸில், வெள்ளைக் காகிதங்கள் இவைகளை வைத்துக் கொண்டு ஒரு சித்திரக் கதையே அவர்கள் தயாரித்துவிடுவார்கள். உதாரணமாகக் கடற்கரை, கிறிஸ்துமஸ் பொம்மைகள், சிற்றுண்டி விடுதியில் சாப்பிடுவது போன்ற சங்கதிகளில் ஒன்றைக் கதைக்கு விஷயமாக எடுத்துக்கொள்வார்கள். அதற்குப் பொருத்தமான படங்கள் உள்ள பத்திரிகைகளைப் பார்த்து எடுக்க வேண்டும். கடற்கரை பற்றிய கதை என்று வைத்துக்கொள்ளலாம். ஸ்நான உடை, உயிர் தப்பும் ரப்பர் வளையம் இவைகளில் ஒன்றை அணிந்த ஒருவருடைய படத்தையோ, படகில் செல்லும் ஒருவருடைய படத்தையோ ஒரு குழந்தை முதலில் தேடிக் கண்டுபிடிக்கும். இதிலிருந்து கதை தொடர்ந்து செல்லுவதற்கு ஏற்ற அடுத்த படத்தை மறு குழந்தை கண்டு பிடிக்கும். இப்படியே மாற்றி மாற்றி இருவரும் ஏழெட்டுப் படங்கள் பொறுக்கிய பிறகு, அவைகளைக் கார்பன் பேப்பர் வைத்து நோட்டுப் புத்தகத்தில் வரைவார்கள். படங்களுக்குக் கீழே பொருத்தமான வாசகங்களை எழுதுவார்கள். படங்களுக்கு வர்ணம் கொடுப்பதும் உண்டு.

அவர்கள் இரண்டு பேரும் இப்படிச் சேகரித்து வரைந்ததைப் பார்க்கும்பொழுது ஏழெட்டுப் பக்கங்கள் கொண்ட சித்திரக் கதைப் புத்தகமாக அது விளங்கும். இந்த மாதிரி தயாரித்த பல கதைகளை ஸூஸன் கோவையாக அடுக்கி இரண்டு அட்டைகளுக்கு நடுவில் வைத்து மேல் அட்டையில் ஒரு நல்ல படம் வரைந்து விடுவான். இப்படியாக அவர்களுடைய முயற்சியால் அழகான ஒரு படப் புத்தகமே தயாராகிவிடும். எப்பொழுதாவது நாங்கள் ஆஸ்பத்திரியில் குழந்தைகள் படுத்திருக்கும் இடம் சென்று அந்தப் புத்தகத்தை மற்றக் குழந்தைகளுக்குக் காட்டி அவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்போம்.

ஹில்டா, ஜாக் இவர்கள் வீட்டுக்குப் போனுல் அங்கே குழந்தைகளுக்கு என்ன உற்சாகம் தெரியுமா? அவர்கள் போடும் கொம்மாளத்தில் வீடே இடிந்து விழுந்துவிடும் போல் தோன்றும். தான் சந்தா கட்டி வரவழைக்கும் சிறுவர் பத்திரிகைகளை அவர்களுடைய பிறந்த நாளன்று ஹில்டா கொண்டு வந்தாள். ஸூஸன், லாரி இவர்களுடைய பெயர்கள் எழுதி ஹில்டாவின் விலாசத்துக்கு அவை வந்திருந்தன.

ஆகவே, நாங்கள் ஹில்டாவின் வீட்டுக்குப் போகும்பொழுதெல்லாம் அவளுடைய குழந்தைகளான டொராதி, கென்னி இவர்களுடன் விளையாடுவதோடு, புதிதாய்த் தங்கள் பெயருக்கு வந்த பத்திரிகைகளைப் படிக்கும் உற்சாகமும் எங்கள் குழந்தைகளுக்கு அளவு கடந்திருந்தது.

அப்புறம் அவர்களுடைய பாட்டிகளின் வீடுகளுக்குப் போனுல் என்ன செய்வது என்று யோசித்

தோம். குழந்தைகளுக்கு வேண்டிய படப் பத்திரிகைகளோ வேறு விளையாட்டுச் சாமான்களோ பாட்டி களிடம் இல்லை. ஆனால் அப்போ தப்போது எடுத்த போட்டோக் கள் ஒட்டின ஆல்பங்கள் இருந்தன. பெட்டி நிறையப் பித்தான்கள், நூல்கண்டுகள், வேறு துணிமணி கள், என்ன என்னவோ சில்லறைச் சாமான்கள் இவையெல்லாம் இருந் தன. என் மாமி வீட்டுக்குத்தான் முதலில் சென்றோம். அப்போது திடீரென்று எனக்கு ஒரு நிதி அகப்பட்டதுபோல் இருந்தது. என் பெண் ஒரு பொம்மையைக் கொண்டு வந்திருந்தாள். அதற்குப் பாட்டி யைக் கேட்டு ஒரு பாவாடை, சொக்காய் தைத்துப் போடலாம் என்றேன். பாட்டியும் சந்தோஷத் துடன் ஏற்றுக்கொண்டு தன் தையல் பெட்டியிலுள்ள சாமான் களை எடுத்துக்கொள்ளும் படி சொன்னாள். லாரியும் அவன் தந்தையும் ஏதோ கட்டம் விளை யாடிக்கொண்டு இருந்தபொழுது, ஸூஸன் தன் பாட்டியின் தையல் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அதிலிருந்து பளபளப்பான ஒரு மஞ்சள் பட்டுத்துண்டை வெளியில் எடுத்ததும் பாட்டிக்குப் பழைய ஞாபகம் வந்துவிட்டது. ஏதோ பழங்கதையைச் சுவாரஸ்யமாய்ச் சொல்லத் தொடங்கிவிட்டாள். குழந்தைகளும் உற்சாகத்துடன் கேட்க ஆரம்பித்தார்கள். எங் களுக்கு மிகவும் வியப்பாயிருந்தது.

என் அம்மாவின் அகத்தில் வேறுவிதமாகப் பொழுது போகும். அவளுக்குப் பட்சணங்கள் செய்யப் பிடிக்கும். தனக்கு உதவியாகக் குழந்தைகளுக்குச் சிறு சிறு வேலை கள் இட்டுச் செய்யச் சொல்வாள். போகும் இடங்களிலெல்லாம் முன் கூட்டியே யோசித்துப் பொழுது போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடு களை இந்த விதமாகச் செய்து கொண்டோம். எங்களிடம் டெலி விஷன் செட் இல்லை. என் கண வரின் சகோதரி எல்லன் வீட்டில் இருந்ததால் அங்கே அது குழந்தை களுக்குப் பெரிய உற்சாகத்தை அளித்தது.

எங்கள் நண்பர்கள் இரண்டு பேருடைய வீட்டில் கிராமபோன் ரிகார்டு எடுக்கும் மெஷின் இருந் தது. அவர்களுக்கு நேரமும் இருந் தது; பொறுமையும் இருந்தது. ஆகவே, நாங்கள் அங்கே போனால் எங்கள் குழந்தைகள் பேசி அதை ரிகார்டு எடுக்கும்படி சொல்லுவார் கள். அந்த நண்பர்களும் சந்தோஷ மாய் ஒப்புக்கொண்டு அப்படியே செய்வார்கள். ஆகவே, அடுத்த தடவை அங்கே போகும்பொழுது குழந்தைகளுக்குத் தாங்கள் பேசி யதையே வைத்துக் கேட்கும் சந் தோஷம் உண்டாகும்.

இப்பொழுதெல்லாம் நாங்கள் எங்கே போனாலும் எங்களுக்குச் சந்தோஷமாய்த்தான் பொழுது போகிறது. ஆகவே, எப்பொழு தாவது எதிர்பார்த்தபடி அவ்வளவு உற்சாகமாகப் பொழுது போகா விட்டால்கூடக் குழந்தைகள் அவ் வளவாகக் கஷ்டப்படுவதில்லை. உண்மையில் அப்படி நேரும் பொழுது அடுத்த தடவை என்ன செய்யலாம், எப்படி உற்சாகமாய்ப் பொழுது போக்கலாம் என்று யோசிப்பதில் அவர்கள் ஈடுபடுவார் கள். அதற்கு முன் தடவை சென்ற பொழுது எவ்வளவு உற்சாகமாய்ப் பொழுது சென்றது என்று நினைத்து அவர்கள் உள்ளம் ஆனந்த மடையும்.

சிறுகதை:

வருங்காலக் கவிஞன்

வில்லியம் ஸரோயன்

நகைச்சுவை ததும்ப எழுதும் தற்கால அமெரிக்க ஆசிரியர் ஸரோயன். இவருடைய நகைச்சுவை அலாதி ரகம். 'பச்சை வெட்டு'ச் சிரிப்பு அல்ல இவருடையது. சமூக முரண்பாடுகளையும் மனித இயல்பின் மூளிகளையும் கேலிச் சித்திரமாக வரைபவர் இவர். அதிலே ஒரு தத்துவ தர்சனமும், மனித குலத்திடம் அபரிமிதமான அநுதாபமும் கலந்திருக்கும். ஏழை மக்களும் மற்றவரைப்போல் மனித வர்க்கமே என்றெண்ணாமல் தப்பபிப்பிராயம் வைத்திருப்பவரைப் பரிகசிக்கும் இது, இவர் பல வருஷங்களுக்குமுன் எழுதிய ஒரு கதை.

எமெர்ஸன் பள்ளிக்கூடத்தில் மூன்றாவது வகுப்பில் நாங்கள் பதினைந்து பையன்கள் படித்துக்கொண்டிருந்தோம். அதில் பதினாலாவது சிறந்த புத்திசாலிப் பையன் நான்தான். கல்வி போர்டார் ஒரு நாள் எங்களைப் பரீட்சிக்க விரும்பினார்கள்.

இதெல்லாம் நடந்து வெகு வருஷங்கள் ஆகின்றன.

எனக்கு வயது எட்டு நிறைந்து ஒன்பதோ, ஒன்பது நிறைந்து பத்தோ ஆகியிருந்தது. நல்ல சுபாவம்.

அந்தக் காலத்தில் சின்னஞ்சிறு நகரம் ஒன்றின் குழந்தைகளைப் பற்றிக் கல்வி போர்டார் அதிக தடபுடல் செய்வதில்லை. சில குழந்தைகள் மட்டிகளாயிருந்தால் அது வெகு சகஜம் என்று அவர்கள் விட்டுவிடுவது வழக்கம்.

ஆனால், பாதிரிகள் சில பேர் சமுத்திர வெள்ளம் போன்ற பல வாலிப முகங்களைப் பார்க்கும்போது, "நீங்களே அமெரிக்காவின் வருங்காலத் தலைவர்கள்; வருங்கால ஆலை முதலாளிகள்; வருங்கால ராஜதந்திர நிபுணர்கள்; வருங்காலக் கவிஞர்கள்" என்றெல்லாம் பிரசங்கிப்பார்கள். இந்தப் பிரசங்கத்தைக் கேட்கும்போதெல்லாம் எனக்கு வெகு குஷியாயிருக்கும். ஏனென்றால், என் நண்பர்களான ஜிம்மி, சூஸா இரண்டு பேரும் எந்த மாதிரி ஆலை முதலாளிகளாக இருக்கப் போகிறார்களோ என்பதை அறிய எனக்கு மெத்த ஆவல்.

இந்தப் பையன்களை எனக்குத் தெரியும். இவர்கள் மிகச் சிறந்த பந்தாட்டக்காரர்கள்; ஆனால் சுத்த மடையர்கள். ஆரோக்கியம், பலம், உற்சாகம் மூன்றும் நிறைந்தவர்கள். இவர்கள் பெரிய முதலாளிகள் ஆகப் போவதாக நான் நினைக்கவில்லை. இவர்கள் அப்படி ஆகவும் இல்லை. "உங்களுக்கு வாழ்க்கையிலே என்ன துறையில் இறங்க உத்தேசம்?" என்று இவர்களை யாராவது கேட்டு, இவர்களும் நாணயமாகப் பதில் சொல்வதாக இருந்தால், "எனக்குத் தெரியாது; எதிலும் எனக்கு உத்தேசம் இல்லை" என்றே சொல்லியிருப்பார்கள்.

ஆனால், பாதிரிகளைப்போல் இல்லை கல்வி போர்டார்; அவர்களுக்கு இந்த மாதிரியெல்லாம் பையன்களின் வருங்காலம்பற்றிப் பிரமாதமான நம்பிக்கை கிடையாது. சின்னப் 'பசங்'கள் குறும்பு செய்யாதபடி அவர்களை மடக்கிப் போட்டு, இரண்டு வார்த்தை எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாம் என்பதுதான் அவர்கள் நோக்கம்.

என்றாலும், என்னவோ ஒரு நாள் எங்களை அவர்கள் மெத்த அமைதியாகப் பரீட்சிக்கத் தொடங்கினார்கள். எழு மணி நேரம் மந்திராலோசனை செய்து அவர்கள் ஒரு விஷயத்தை முடிவு செய்திருந்தார்கள். சகல பள்ளிக்கூடங்களிலும் ஒவ்வொரு பையனின் தேகாரோக்கியத்தையும் சுத்தமாய்ப் பரிசோதனை செய்து, சேரிச் சிறுவர்களின் உடல் நலத்தை உயர்த்த என்ன வழி என்று கண்டு பிடிக்க வேண்டும் என்பதே போர்டாரின் முடிவு.

பிரசுரமான புள்ளி விவரங்களைச் சேகரித்து அட்டவணை செய்துள்ள தஸ்தாவேஜிகளின்படி, என் அக்கம் பக்கத்து மக்கள் எல்லாருமே குரூபமான தலை, உட் குழிந்த மார்பு, கோணல் எலும்பு, கட்டைத் தொண்டை, பலவீனம், முரட்டுச் சுபாவம், இன்னும் ஆறேழு உடல் கோளாறுகள் இத்தனை அவலட்சணங்களும் பொருந்தியவர்களாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வாத்தியார்களுக்குக் கிடைத்துள்ள பிரத்தியட்ச ருசுவின்படியோ, இந்தச் சேரி முரடர்களுக்கு நேர்த்தியான தலை, சுகமான மார்பு, அழகான உடல், உரத்த குரல், நல்ல பலம், ஓயாத குறும்பு இந்த லட்சணங்களெல்லாம் பொருந்தியிருந்தன.

எங்கேயோ ஏதோ பிசகு நேர்ந்திருக்க வேண்டும். அதைக் கண்டு பிடிக்க முயன்றார்கள் கல்வி போர்டார்.

கண்டுபிடித்தே விட்டார்கள்.

பிரசுரமான புள்ளி விவரங்களைச் சேகரித்து அட்டவணை செய்துள்ள தஸ்தாவேஜிகள் தான் பிசகு என்பதே அவர்கள் கண்டு பிடித்த ரகசியம்.

இந்தச் சமயத்தில்தான் நான் ஒரு கவிஞன் என்பதை அறிந்து கொண்டேன். அதில் எனக்கு ஒரு புறம் ஆத்திரம்; மறுபுறம் ஆனந்தம். எங்களூர் நகர சபையின் தியேட்டரில் சரியாக உச்சி வேளையில், நானும் வருங்கால ராஜ தந்திரிகள் அறுநூறு பேரும் கூடியிருந்தோம். அப்போது ஏதோ பாட்டுப் பாடுகிற மாதிரி ஜன்னி பிடித்த உச்சஸ்தாயியில் என் பெயரை மிஸ் ஆகில்வீ கூவினாள். அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

பதினேழு படிகளை ஏறிக் கடந்து, தியேட்டர் மேடையின் நடுவே போய் நின்று, என் சட்டையைக் கழற்றி, மார்பை விம்மி, மூச்சை உள்ளிழுத்து, 'தம்' அடக்கி, பிறகு வெளியே விட்டு, உடல் அளவுகள் கொடுக்க வேண்டிய தருணம் இதோ வந்துவிட்டது.

எனக்கு ஒரு கணம் ஒரே கலவரமாய்ப் போயிற்று; ஒன்றும் புரியவில்லை. பிறகு அமானுஷ்ய உணர்ச்சி ஒன்று 'ஸ்டை'லாக நடந்துகொள்ளும்படி என் பிடரியைப் பிடித்து உந்தவே, அப்படியே நான் நடந்துகொண்டேன். அதைக் கண்டு கல்வி போர்டார், மூன்று முதிய டாக்டர்கள், அரை

டஜன் ரெஜிஸ்டர்டு நர்ஸ்கள், அறுநூறு வருங்கால ஆலை முதலாளிகள் அத்தனை பேரும் திடுக்கிட்டு அரண்டு போனார்கள்.

பதினேழு படிகளையும் ஒன்றொன்றாக அடிவைத்து ஏறிக் கடப்பதற்குப் பதிலாக, நான் ஒரே தாவாகத் தாவி மேடையின் நடு மத்தியிலே போய்க் குதித்தேன்.

மிஸ் ஆகில்வீ திரும்பி, சூப்பரின்டெண்டு ரிக்கன்பாக்கரைப் பார்த்து, பயத்துடன் கிசுகிசுத்த குரலில், "இவன் யார், தெரியுமோ? இவன்தான் காரோக்லேயன்; நம் வருங்காலக் கவிஞர்களில் ஒருவன் என்றே நான் சொல்வேன்" என்றாள்.

ரிக்கன்பாக்கர் 'டக்' என்று என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "யாரிடம் இவனுக்கு மன எரிச்சல்?" என்று கேட்டார்.

"சமூகத்திடந்தான்" என்றாள் மிஸ் ஆகில்வீப் பாட்டி.

"ஓ! சரிதான். எனக்குந்தான் அப்படி. ஆனால், இவன் மாதிரி தாண்டிக் குதிக்க என்னால் ஆகாது. போதும்; இதுபற்றிப் பேசவேண்டாம்" என்றார் ரிக்கன்பாக்கர்.

இதற்குள்ளே நான் என் சட்டையைக் கழற்றி ஒரு சுருளாகச் சுருட்டி வீசினேன். மார்பைத் திறந்து கொண்டு விம்மினேன். அதிலே அடர்த்தியாக இருந்த ரோமம் 'ஜிவ்' என்று சிலிர்த்து நின்றது.

"பார்த்தீர்களா? நூலாசிரியன்" என்றாள் மிஸ் ஆகில்வீ.

"மூச்சை இழு" என்றார் ரிக்கன்பாக்கர்.

"எவ்வளவு நேரம்?" என்று கேட்டேன்.

"முடிந்த நேரம் வரைக்கும் இழு" என்றார் ரிக்கன்பாக்கர்.

நான் மூச்சை இழுக்கத் தொடங்கினேன். நாலு நிமிஷ நேரம் சென்றது. நான் இன்னும் இழுத்துக்கொண்டே இருந்தேன். கல்வி போர்டாருக்கு ஒரே பிரமிப்பாய்ப் போயிற்று. நான் மூச்சை இழுத்துக்கொண்டே இருக்கும் போது, அவர்கள் ஓர் அவசரக் கூட்டம் நடத்தினார்கள். இரண்டு நிமிஷநேர உக்கிரமான விவாதத்துக்குப் பிறகு, என்னை நிறுத்தச் சொல்லத் தீர்மானித்தார்கள். "அவனை நீங்கள் நிறுத்தச் சொல்லவில்லையோ, இன்று அஸ்தமிக்கிற வரையில் அவன் மூச்சிழுத்துக் கொண்டேயிருப்பான், பார்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் மிஸ் ஆகில்வீ.

"போதும்; நிறுத்து" என்றார் ரிக்கன்பாக்கர்.

"என்ன? அதற்குள்ளா? நான் இன்னும் சரியாக ஆரம்பிக்கவே இல்லையே!" என்றேன்.

"இப்போது மூச்சை விடு" என்றார் ரிக்கன்பாக்கர்.

"எவ்வளவு நேரம்?" என்று கேட்டேன்.

"அட ஆண்டவனே!" என்றார் ரிக்கன்பாக்கர்.

"நண்பரே, சொல்லிவிடுங்கள்: அவனுக்கு ஒரு நேரம் குறிப்பிட்டுச் சொல்லிவிடுவதே நல்லது. இல்லையோ, அஸ்தமிக்கிற வரையில் மூச்சை விட்டுக்கொண்டேயிருப்பான்" என்றாள் மிஸ் ஆகில்வீ.

"நாலைந்து நிமிஷம் இழு" என்றார் ரிக்கன்பாக்கர்.

நாலு நிமிஷம் மூச்சிழுத்தேன். அதன் பின், "உன் ஷர்ட்டை மாட்டிக்கொண்டு போ" என்றார்கள்.

"என் விஷயம் எப்படி? ஆரோக்கியமாயிருக்கிறேனா?" என்று கேட்டேன்.

"போதும்; இதுபற்றிப் பேச வேண்டாம். நீ போகலாம்" என்றார் ரிக்கன்பாக்கர்.

அடுத்த வருஷம் எங்கள் கல்வி போர்டார், பள்ளிப் 'பசங்'களின் தேகாரோக்கியப் பரிசோதனை நடத்த வேண்டாம் என்று முடிவு செய்தார்கள். வருங்கால ஆலை முதலாளிகளையும் வருங்கால ராஜ தந்திரிகளையும் பரிசோதனை செய்தவரையில் எல்லாம் சரியாக நடந்தது; வருங்காலக் கவிஞனைப் பரிசோதிக்கத் தொடங்கியவுடனே ஒரே கலவரமும் அவந்தரையுமாய்ப் போயிற்று. ஆகவே, எவருக்குமே என்ன செய்வதென்று புரியவில்லை; மிரண்டு போனார்கள்.

ஈ ஸர்க்கஸ்

ஈ ஸர்க்கஸ் காட்சி நூறு வருஷங்களுக்கு மேலாகப் பிரான்ஸில் பிரபலமாயிருந்து வருகிறது. 1846-இல் முதல் முதலாக லூயி பிலிப் என்ற அரசர்தான் இந்தக் காட்சியைத் தொடங்கி வைத்தார்.

ஐக்கிய அமெரிக்காவின் பிரபல நகரமான நியூ யார்க்கில் இன்று ஒரே ஓர் ஈ ஸர்க்கஸ் காட்சி நடந்துவருகிறது. மிகச் சிறு ஜந்துக்களான ஈக்களுக்கு முதலில் என்ன கற்றுத் தருகிறார்கள் தெரியுமோ? தாண்டிக் குதிப்பதை விட்டு நடக்கத்தான் கற்றுத் தருகிறார்கள். அப்புறம் மிகச் சிறு வண்டிகள், டிரக்குகள், தீயணைக்கும் எஞ்சின்கள் இவைகளை இழுக்கப் பயிற்சி அளிக்கிறார்கள். கடைசியில் தங்கள் உடல் நிறையைப்போல் 500 மடங்கு பாரத்தை ஈக்கள் இழுத்துவிடுகின்றன!

—'காப்பர்ஸ் பார்மர்'

கால்பந்து அபாயக் கணக்கு

1951-இல் கால் பந்து விளையாட்டால் ஐக்கிய அமெரிக்காவில் நேரிட்ட அபாய விகிதங்களைக் காட்டும் பின்வரும் புள்ளி விவரம் 'ஸயின்ஸ் டைஜெஸ்ட்' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

கால்பந்து விளையாடியவர்களில் 4,000 பேரை எடுத்துக் கொண்டதில், 1000 பேருக்கு அபாயம் நேர்ந்த விகிதங்கள் இவை:

பல் போனவர்	180	பேர்
கணுக்கால் பிசகியவர்	120	,,
முழங்கால் பிசகியவர்	110	,,
சதை திருகிப் போனவர்	110	,,
ஊமைக்காயம் அடைந்தவர்	60	,,
தோள் பட்டை நழுவியவர்	40	,,
கணுக்கால் முறிந்தவர்	6	,,
கால் முறிந்தவர்	5	,,
புஜம் முறிந்தவர்	4	,,
முதுகு முறிந்தவர்	1	,,

ஆனந்த மடம்

மூலம்: ***பங்கிம் சந்திரர்***

மொழிபெயர்ப்பு: ***த. நா. குமாரஸ்வாமி***

அறுபது ஆண்டுகளாக இந்தியாவில் நடந்து வந்த சுதந்தரக் கிளர்ச்சிக்கு 'வந்தேமாதர' கீதந்தான் தாரக மந்திரமாக இருந்திருக்கிறது; இன்னுங்கூட அது எல்லார் உள்ளத்திலும் தேசபக்தியை ஊட்டி வருகிறது. 1775-இல் முதல் முதலாக அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த 'சந்நியாசிக் கலகம்' என்ற சுதந்தரக் கிளர்ச்சியின் போது இந்தக் கீதத்தைப் பாடுவதாக பங்கிம் கற்பனையில் வரைந்தார். சென்ற நூற்றாண்டின் இடையில் ஆங்கில ஆட்சியில் ஜில்லா மாஜிஸ்திரேட்டாக இருந்த ஒருவர் இப்படிப்பட்ட ஒரு நாவலை எழுதினார் என்றால் ஆச்சரியமாக இல்லையா? ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அற்புதமான நாவல்கள் எழுதியது போலவே வங்காளத்தில் - ஏன், இந்தியாவிலேயே-முதல் முதலாக அருமையான பல நாவல்களை எழுதிப் பிரசித்தி பெற்றவர் பங்கிம். அவைகளில் பல, தமிழிலும் பிற மொழிகளிலும் வெளியாகியிருக்கின்றன.

காப்பிரைட்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூ. 3-0-0.

ஆனந்த மடம்

கி. பி. 1773-ஆம் ஆண்டு. வங்க நாடெங்கும் மழையின்மையால் பஞ்சம் தாண்டவமாடியது. மக்கள் நோயினால் வேறு மடிய ஆரம்பித்தார்கள்.

பதசின்ன கிராமத்தில் **மகேந்திர சிம்மன்** ஒரு பெரிய தனவந்தன். ஆனால் அன்று தனவானும் தரித்திரனும் ஒரே மாதிரிதான் இருந்தார்கள். பசிப்பிணி பீடிக்கவே, அவனும் அவன் மனைவி **கல்யாணி**யும் அருமைச் செல்வமான பெண் குழந்தையை அணைத்துக்கொண்டு பட்டணத்தை நோக்கிப் புறப்படுவதென்று தீர்மானித்தார்கள். பிரயாணம் தொடங்குமுன், "வழி மிகவும் அபாயகரமானது. நம் பின்னாலேயே கொள்ளைக்காரர்கள் வருவார்கள். வெறுங் கையுடன் போவது உசிதமல்ல" என்று மகேந்திரன் தன் வீட்டுக்குத் திரும்பி, துப்பாக்கி, ரவை, வெடி மருந்து இவற்றை எடுத்து வந்தான். கல்யாணியும் உள்ளே சென்று ஏதோ எடுத்து வந்தாள்.

மாலை மங்குவதற்கு முந்தியே அவர்கள் ஒரு சத்திரத்தை அடைந்தார்கள். அது பாழடைந்து கிடந்தது. மகேந்திரன் கல்யாணியிடம், "நீ சிறிது நேரம் தைரியத்தோடு தனியாக இரு; ஊரில் எங்காவது பசு இருந்தால் நான் பால் கறந்துகொண்டு வருகிறேன்" என்று சொல்லி அங்கே விழுந்து கிடந்த மண் குடுவை ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

இருளடைந்த அந்த வீட்டில் கல்யாணி நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது கதவின் அருகில் நிழல் போன்ற ஏதோ ஒன்று தென்பட்டது. அது மனித உருவத்தைப்போல் இருந்தாலும் எலும்பும் தோலுமாய் விளங்கியது; சுருங்கிய கையின் நீண்டு மெலிந்த விரலினால் யாரையோ சைகை காட்டி அழைத்தது. அதைப் பார்த்ததும் கல்யாணிக்கு உயிரே குன்றிவிட்டது போல் இருந்தது. பிறகு அதைப்போன்ற பல உருவங்கள் சந்தடி செய்யாமல் வந்து அவளைச் சூழ்ந்துகொண்டன. கல்யாணி அநேகமாய் மூர்ச்சித்தே போனாள். அந்தப் பேய்வடிவங்கள் அப்போது கல்யாணியையும் அவள் குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஒரு காட்டினுள் புகுந்தன.

சில கணம் கழித்துக் குடுவையில் பால் எடுத்துக்கொண்டு மகேந்திரன் அங்கே வந்தான். வீட்டில் யாருமே இல்லை. எவ்வளவு கூப்பிட்டும் பதிலே இல்லை. அவர்கள் போன சுவடும் அவனுக்குத் தெரியவில்லை.

மூர்ச்சையுற்ற கல்யாணியின் உடலில் இருந்த ஆபரணங்களைக் கள்வர்கள் முன்னதாகவே அபகரித்துக்கொண்டார்கள். இருந்தாலும், "பொன்னும் வெள்ளியும் வைத்துக்கொண்டு என்ன செய்வதடா நாம்? இந்த நகைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டு யாராவது எனக்குப் பிடி சாதம் போடுங்களடா; பசியால் என் பிராணன் போகிறது" என்றான் அவர்களில் ஒருவன்.

"அரிசி தா", "அரிசி.. அரிசி" என்று கள்வர் தலைவனைப் பார்த்து

எல்லாரும் கூவினார்கள். அவன் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றான். ஆனால், அவன் பேச்சை அவர்கள் கேட்டால் தானே? வரவரப் பேச்சின்மேல் பேச்சு முற்றவே அவன்மேல் எல்லாரும் பாய்ந்து அவனைத் தீர்த்துவிட்டார்கள். பசி மிகுதியால் அவனையே தின்பது என்று அவர்கள் தீர்மானித்தபோது ஒருவன், "இந்தக் கிழப்பயலின் சத்தில்லாத மாமிசத்தை ஏன் தின்னவேண்டும்? அந்தப் பெண்பிள்ளையைப் பொசுக்கித் தின்போமடா" என்றான்.

எல்லாரும் நாக்கில் நீர் ஊற, கல்யாணி படுத்திருந்த இடத்தை நோக்கினார்கள். ஆனால் அங்கே குழந்தையும் இல்லை; தாயும் இல்லை! கள்வர் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டிருக்கும்போது அவள் இது தான் சமயமென்று குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு அதற்குப் பால் கொடுத்துக்கொண்டே காட்டினுள் மறைந்து போனாள். திருடர்கள், "அடி பிடி" என்று கூவிக்கொண்டே நாலு புறமும் அவளைத் தேட ஆரம்பித்தார்கள்.

கல்யாணி உடலில் முள் கீறி ரத்தம் பெருகும் கோலத்துடன் காட்டில் வெகு தூரம் வந்துவிட்டாள்.

சந்திரோதயமாயிற்று. திருடர்கள் நாலு திசைகளிலிருந்தும் ஓடி வந்தார்கள். அவர்களின் விகாரக் கூச்சலைக் கேட்டுக் குழந்தை அதிகமாகக் கதறத் தொடங்கியது. அதற்குமேல் ஓடக் கல்யாணியால் முடியவில்லை. சக்தியற்று அப்படியே நின்றுவிட்டாள். ஒரு பெரிய மரத்தின் அடியில் முள் இராத புல் தரைமீது உட்கார்ந்து, குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு, "ஹே மதுசூதனா! நீ எங்கே?" என்று பகவானை அழைத்தாள். அதே சமயம்,

"ஹரே முராரே மதுகைடபாரே!
கோபால கோவிந்த முகுந்த சௌரே!"

என்ற திவ்விய கானம் அவள் செவியில் விழுந்தது.

தேவ முனிவர் நாரதர் ஆகாய மார்க்கத்தில் வீணை வாசித்து ஹரி நாமத்தைப் பஜித்துக்கொண்டு மூவுலகும் சஞ்சரிக்கிறார் என்று கல்யாணி சிறுவயதிலிருந்து கேட்டிருந்தாள். அவர்தானோ என்று பிரமை கொள்ளும்படி வெண் தாடியும் சிகையும் உள்ள ஒரு மகானின் உருவம் அவள் கண்ணெதிரில் தோன்றியது.

அந்த உருவத்தை அவள் வணங்கப் போனாள். அப்போது ஸ்மரணை தப்பிக் கீழே சாய்ந்தாள்.

அந்தக் காட்டினுள் ஒரு பெரிய மடம் உண்டு. அதில் பல கோயில்களும், முன்னணியில் ஒரு நடன சபையும் இருந்தன. சுற்றிலும் அடர்ந்து நிற்கும் பெரிய மரங்கள். சமீபமாக வந்து பார்ப்பவர்களுக்குக் கூட அது அங்கே இருப்பதாகத் தெரியாது.

அந்த மடத்தைச் சேர்ந்த ஓர் அறையில் கொள்ளிக் கட்டை எரிந்துகொண்டிருந்தது. கல்யாணி தன் நினைவு வந்ததும் கண் திறந்து பார்த்தாள். முன் தோன்றிய மகான் கருணை ததும்பும் குரலுடன், "இந்தப் பாலைக் குடித்துச் சற்றுக் களைப்பாறு. குழந்தைக்கும் கொடு, அம்மா" என்றார். பிரமை நீங்கிக் கல்யாணி பெருமூச்சு விட்டாள். பிறகு, "தாங்கள் தெய்வத்துக்குச் சமானம்; தங்களுடன் சொல்வதற்கென்ன? என் புருஷரைக் காணவில்லை. அவர் சங்கதி தெரிந்தால் தான் நான் சாப்பிடுவேன்" என்றாள்.

அவர் ஒவ்வொரு கேள்வியாய்க் கேட்டு, அவளைப்பற்றி அறிந்துகொண்டார்.

"மகேந்திரன் மனைவியா நீ?" என்றார் அவர். பிறகு அவர் கொடுத்த ஜலத்தை அவள் குடித்தாள். அவர் மகேந்திரனைத் தேடப் புறப்பட்டார்.

இரவு வெகு நேரமாயிற்று. அருகில் ஒரு மைதானத்தின் மூலமாக முர்ஷிதாபாதிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் பாட்டை இருந்தது. பாட்டையின் மருங்கில் மரமடர்ந்த ஒரு சிறு குன்று.

சத்தியானந்தர் என்ற அந்த மகான் குன்றின் உச்சியில் ஏறி நின்று எதையோ செவி சாய்த்துக் கேட்கலானார்.

என்ன சத்தம் உண்டாயிற்றோ தெரியாது; அது வரும் திசையையே நோக்கிச் சென்றார். இருள் அடர்ந்த ஒரு காட்டில் அவர் நுழைந்தார். அங்கே மரங்களின் கீழ் அணி அணியாக ஆயுதம் தாங்கி அநேகம் பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒவ்வொருவனையும் கூர்ந்து பார்த்துக்கொண்டே கடைசியில் ஒருவன் முன் நின்று அவனைத் தொட்டார். காவி உடுத்துத் தாடி மீசையோடிருந்த அந்த இளைஞனைப் பார்த்து, "**பவானந்தா**, மகேந்திரசிம்மனைப் பற்றி ஏதாவது உனக்குச் செய்தி தெரியுமா?" என்றார். பவானந்தன் சத்திரத்தில் நடந்த வரையில் சொல்லி, "யாரோ பட்டிக்காட்டு ஜனங்கள்போல் இருக்கிறது. வயிற்றின் கொடுமை தாங்காமல் வழிப்பறிக் கள்வர்களாகிவிட்டார்கள். இந்தக் காலத்தில் எவன்தான் திருடனாகவில்லை? நாங்களும் இன்று கொள்ளை அடித்துத்தான் தின்றோம். கொத்தவால் துரைக்கு இரண்டு மணங்கு அரிசி போய்க்கொண்டிருந்தது. அதை அபகரித்து நம் வைஷ்ணவ சமாராதனைக்கு உபயோகித்துக்கொண்டோம்" என்றான்.

சத்தியானந்தர் சிரித்துக்கொண்டே, "திருடர்கள் கையிலிருந்து மகேந்திரனுடைய மனைவியையும் குழந்தையையும் தப்புவித்தேன். இனி மகேந்திரனைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு உன்னுடையது. இங்கே ஜீவானந்தன் கவனித்துக்கொள்வான்" என்றார். பவானந்தனும் அவரும் வெவ்வேறு திசையே சென்றார்கள்.

வங்காளத்தின் வரும்படியை ஆங்கிலக் கும்பினியார் அநுபவிக்க அதிகாரமும் அமலும் மட்டும் நவாபு மீர்ஜாபரிடம் இருந்தன. மகேந்திரன் கல்யாணியையும் குழந்தையையும் தேடிக்கொண்டே பாட்டையருகில் வரும்போது கும்பினிச் சிப்பாய்க் கூட்டம் ஒன்று கஜானாவுக்குச் சொந்தமான பணத்தைக் கல்கத்தாவுக்கு எடுத்துப் போய்க்கொண்டிருந்தது. அதைக் கண்டு சற்று ஒதுங்கி நின்றான் மகேந்திரன். அவன் திருடன் என்று எண்ணி ஒரு சிப்பாய் அவனைப் பிடித்தான். முதலில் மகேந்திரன் திமிறினான். ஆனால் பல பேர் வந்து பிடித்துக்கொள்ளவே அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனை அவர்கள் ஒரு வண்டியில் கட்டிப் போட்டுவிட்டார்கள்.

பவானந்தனும் சற்றுத் தொலைவில் அதே மாதிரி நின்றிருந்தான். அந்தப் பக்கமாக வண்டிகள் வந்தன. பாட்டையை விட்டு அவனும் சற்று ஒதுங்கி நின்றான்.

இதைக் கண்டதும், பணத்தைக் கொள்ளை அடிப்பதற்காகவே ஒரு வழிப்பறிக் கூட்டத்தார் முயன்று கொண்டிருக்கிறார்களென்று எல்லாச் சிப்பாய்களுக்கும் சகஜமாகவே எண்ணம் உண்டாயிற்று. போதாக் குறைக்கு வழியில் ஒரு 'பக்காத் திருட'னையும் பிடித்துவிட்டார்களல்லவா? ஆகவே, ஒரு சிப்பாய் பவானந்தன் கழுத்தைப் பிடித்து இழுத்தான். அந்த நள்ளிரவில் பவானந்தனுடைய கண்கள் சிவந்து ஜொலித்தன. ஆனாலும் அவன் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் பணிவாக, "எஜமானே, என்ன செய்யவேண்டும்? கட்டளையிடுங்கள்!" என்றான்.

சிப்பாய் பவானந்தனுடைய அடக்கத்தைக் கண்டு அகமகிழ்ந்து, "எடுத்துக்கொள்ளடா, திருட்டுப் படவா, தலைமேலே இந்த மூட்டையை" என்று சொல்லி ஒரு பளுவான மூட்டையை அவன் தலைமேல் இருத்தினான். அப்போது வேறொரு சிப்பாய் வந்து, "வேண்டாம்! ஓடிப் போய் விடுவான். இன்னொருத்தனைக் கட்டிய வண்டியிலேயே இவனையும் கட்டிவிடுவது நல்லது" என்றான். வண்டியில் வேறு யாரைக் கட்டியிருக்கிறார்களென்று அறியப் பவானந்தனுக்கு ஆவல் மூண்டது. உடனே அவன் தன் தலையிலுள்ள சுமையைக் கீழே தள்ளிவிட்டு, அதை வைத்த சிப்பாயின் கன்னம் புளிக்கும்படி ஓர் அறை விட்டான். அதன்மேல் அந்தச் சிப்பாய் அவனையும் பிடித்துக்கட்டி வண்டியில் மகேந்திரனுக்குப் பக்கமாகக் கிடத்தினான். வண்டியில் கட்டுண்டு கிடக்கும் ஆள் மகேந்திரன் என்று தெரிந்து கொண்டான் பவானந்தன்.

சிப்பாய்கள் மீண்டும் அட்டஹாஸத்துடன் நடந்து சென்றார்கள். அப்போது பவானந்தன் மகேந்திரன் செவிக்கு மட்டும் கேட்கக் கூடியபடி, "மகேந்திர சிம்மா, உனக்கு உதவி செய்யவே இங்கே வந்திருக்கிறேன். நான் யாரென்று உனக்கு இப்போது தெரிவிப்பது அவசியமில்லை. உன் கையைப் பிணைத்திருக்கும் கயிற்றை வண்டிச் சக்கரத்தின் மேல் வை" என்றான்.

மகேந்திரன் அதைக் கேட்டு வியப்படைந்தான். ஆனால், வேறொன்றும் பேசாமல் பவானந்தன் சொன்ன விதமே செய்தான். சக்கரம் உராய்வதனால் கயிறு அறுபட்டது. பிறகு காலில் கட்டியிருந்த தும்பையும் அதுமாதிரியே அறுத்துக்கொண்டான். பவானந்தனும் அவ்விதமே செய்து கட்டுகளை அறுத்துக்கொண்டான். இருந்தாலும் அப்படியே இருவரும் அசைவற்றுக் கிடந்தார்கள்.

அந்தச் சமயத்தில் திடீரென்று கைத்துப்பாக்கி சுட்ட ஓசை கேட்டது. அந்தக் கணமே, "ஹரி! ஹரி! ஹரி!" என்று கோஷித்துக் கொண்டே ஆயுதபாணிகள் இருநூறு பேர் அங்கே தோன்றிச் சிப்பாய்களை வளைத்துக்கொண்டார்கள். சிப்பாய்கள் அநேகம் பேர் அவர்களின் வாளுக்கு இரையானார்கள். பிறகு கொள்ளையில் கிடைத்த பொருளைக் காஷாயம் தரித்த ஜீவானந்தன் என்ற இன்னொரு வாலிப சந்நியாசி வேறிடத்துக்கு எடுத்துச் சென்றான். பவானந்தன் மட்டுமே அங்கே இருந்தான்.

முதலில் மகேந்திரன் வண்டியிலிருந்து இறங்கி ஒரு சிப்பாயின் படைக்கலத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்தப் போரில் தானும் கலந்து கொள்ளத் தயாராயிருந்தான். ஆனால், 'இவர்கள் திருடர்கள்.

பணத்தைப் பறிப்பதற்கே சிப்பாய்களை எதிர்க்கிறார்கள்' என்று தோன்றியதும் விலகி ஒரு புறமாய் நின்றான். பவானந்தன் அவனருகில் வந்தான்.

"நீங்கள் யாரையா?" என்று மகேந்திரன் கேட்டான்.

பவானந்தன்:—நான் யாராயிருந்தால் உமக்கென்ன? கையில் கத்தியிருந்தும் தூர அல்லவோ விலகி நின்றீர்? ஜமீன்தார் மகன் அல்லவா? நீங்கள் பாலும் நெய்யும் சாப்பிடுவதில்தான் கெட்டிக்காரர்; சமயம் வரும்போது எந்தக் காரியத்துக்கும் உதவமாட்டீர்.

மகேந்: நீங்கள் செய்வது யோக்கியமான காரியமாயில்லையே!

பவா: சரி; இருக்கட்டுமே. நாங்கள் ஏதோ கொஞ்சம் சகாயமாவது செய்திருக்கிறோமல்லவா? இன்னமும் செய்வோம்.

மகேந்: அது சரி. இன்னும் என்ன உதவி செய்யப் போகிறீர்களோ? திருடர்களிடம் உதவி பெறுவதைவிடப் பெருமலிருப்பதே நல்லது.

பவா: நீங்கள் என்னுடன் வந்தால் உங்களுடைய மனைவியையும் பெண்ணையும் பார்க்கலாம். அப்புறம் உங்கள் இஷ்டம்.

மகேந்திரன், "என்ன, என்ன?" என்றான். பவானந்தன் அதற்குப் பதிலே சொல்லாமல் நடந்து செல்லலானான். விதியில்லாமல் மகேந்திரன் அவனைப் பின் தொடர்ந்தான். 'எப்படிப்பட்ட திருடர்களப்பா இவர்கள்!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

வெண்ணிலவு பொழியும் அந்த இரவிலே இருவரும் மௌனமாகவே அந்தப் பரந்த வெளியைக் கடந்து சென்றார்கள். மறுபடியும் பவானந்தனின் முகத்தில் பொலிவும் உற்சாகமும் தோன்றின. மகேந்திரனுடன் பேச முயன்றான். ஆனால் அவன் உதட்டைக்கூட அசைக்கவில்லை. வேறு வழியின்றிப் பவானந்தன் தனக்குத்தானே பாடத் தொடங்கினான்:

"ஸுஜலாம் ஸுபலாம்
மலயஜ சீதலாம்
சஸ்ய ச்யாமலாம் மாதரம்!
சுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ருமதல சோபிநீம்
ஸுஹாஸிநீம் ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம் வரதாம் மாதரம்!
ஸப்தகோடி கண்ட கலகல
நிநாத கராலே
த்விஸப்த கோடி புஜைர் த்ருத
கரகர வாலே
கே பலே மா துமி அபலே?
பஹுபல தாரிணீம் நமாமி தாரிணீம்
ரிபுதல வாரிணீம் மாதரம்!
வந்தே மாதரம்!

மகேந்திரனுக்கு இதன் பொருள் புரியவில்லை. அவனுக்கு இது வியப்பாக இருந்தது. "இது தேசந்தானே? மாதா எப்படியாகும்?" என்றான். பவானந்தன், "நாங்கள் வேறு மாதாவை ஒப்புவதில்லை. பிறந்த நாட்டையே நாங்கள் தாயாகப் போற்றுகிறோம். எங்களுக்கு வேறு அன்னை இல்லை; அப்பன் இல்லை; உடன் பிறந்தவர் இல்லை; மனைவி இல்லை; மக்கள் இல்லை; வீடில்லை; வாசலில்லை.

இனியநீர்ப் பெருக்கினள்
இன்கனி வளத்தினள்
தனிநறு மலயத்
தண்காற் சிறப்பினள்
பைந்நிறப் பழனம்
பரவிய வடிவினள்

ஆகிய தாய் நாடே எங்களுக்கு அன்னை, பிதா எல்லாம்."

மகேந்திரனுக்குப் பாட்டின்

கருத்து விளங்கியது; "அப்படியானால் திரும்பவும் பாடு" என்றான்.

பவானந்தன் மீண்டும் பாடினான்.

அந்த அதிசயமான கள்வன், பாடிக் கண்ணீர் மல்குவதை மகேந்திரன் கவனித்தான். அவன் ஆச்சரியமுற்று, "நீங்கள் யார்?" என்று கேட்டான். "நாங்கள் சந்தானர்கள்" என்றான் பவானந்தன்.

மகேந்: சந்தானர்கள் என்றால் யாருடைய சந்தானர்கள் (குழந்தைகள்)?

பவா: மாதாவின் சந்தானர்கள். நாங்கள் சந்நியாசிகள். அந்நியர் கையிலிருந்து நாட்டை மீட்கவே இந்த விரதத்தை மேற்கொண்டோம். அது கைகூடி விட்டால் நாங்கள் மறுபடியும் சம்சாரிகளாவோம். எங்களுக்கும் மனைவி, மக்கள் உண்டு.

மகேந்: சம்சார பந்தத்தை உங்களால் எப்படி அறுக்க முடிந்தது?

பவா: சந்தானர்கள் பொய் சொல்லக்கூடாது. உங்களிடத்தில் பொய் சொல்லி வீண் ஜம்பம் அடித்துக்கொள்ளுவானேன்? நாங்கள் மாயாபாசத்தை அறுத்துவிடவில்லை. நாங்கள் கொண்ட விரதத்தைத்தான் கடைப்பிடிக்கிறோம். நீங்களும் எங்கள் சந்தானக் கூட்டத்தில் சேருகிறீர்களா?

மகேந்: என் மனைவியையும் குழந்தையையும்பற்றி ஏதாவது தெரிந்தாலொழிய நான் ஒன்றும் சொல்ல முடியாது.

பவா: ஆனால் சரி; உங்களுடைய மனைவியையும் குழந்தையையும் பார்ப்பீர்கள், வாருங்கள்.

ஆனந்தமயமான அந்த உதய வேளையில், ஆனந்த மடத்தில் சத்தியானந்தர் மான் தோல்மீது அமர்ந்து காலைக்கடன்களைச் செய்துகொண்டிருந்தார். அருகில் ஜீவானந்தன் உட்கார்ந்திருந்தான். அப்போது பவானந்தன் மகேந்திரனுடன் அங்கே தோன்றினான். கடன்கள் முடிந்ததும், மகேந்திரனை நோக்கி அவர், "அப்பா! உனக்கு ஏற்பட்ட துக்கத்தைப் பற்றி நான் மிகவும் வருந்துகிறேன்; கடவுள் கிருபையினாலேயே உன் மனைவியையும் குழந்தையையும் நேற்றிரவு காப்பாற்ற முடிந்தது" என்று நடந்ததை விரிவாகச் சொன்னார்.

பிறகு இருவரும் கோயிலில் நுழைந்தார்கள். மகேந்திரன் அங்கே இருந்த விஷ்ணுமூர்த்தியையும் பயங்கரக் காளியின் உருவையும் பார்த்த பிறகு ஓர் இடத்தில் சலவைக் கல்லால் செய்த மகாசக்தியின் பதுமை ஒன்று இளஞ்சூரிய கிரணம் பட்டு ஜோதிமயமாய் மந்தஹாஸம் புரிந்துகொண்டிருப்பதைக் கண்டான்.

தேவியைத் துதித்து இருவரும் அன்புடன் அடிபணிந்து எழுந்தார்கள். மகேந்திரன் தழுதழுத்த குரலில், "அன்னையின் இந்தத் திவ்விய ரூபத்தை நாம் எப்போது நேரில் காண்போம்?" என்றான். சத்தியானந்தர், "என்றைக்கு மாதாவின் எல்லாச் சந்தானர்களும் அவளைத் தாயென்று அழைப்பார்களோ அன்றைக்குத்தான் அவள் மனமுவந்து பிரசன்னமாவாள்" என்றார்.

மகேந்திரன் சட்டென்று, "என் மனைவியும் மகளும் எங்கே?" என்றான்.

"வந்த வழியே திரும்பிக் கோயிலுக்கு வெளியே போனால் அவர்களைக் காணலாம். அப்போது எங்களில் யாரையும் பார்க்க

முடியாது. இப்படியே உன் மனம் அன்னையிடம் ஈடுபட்டிருந்தால் உரிய சமயத்தில் உன்னை வந்து பார்ப்பேன்" என்று சொல்லி, அவர் ஏதோ ஒரு ரகசிய வழியில் மறைந்துவிட்டார். மகேந்திரன் அப்படியே போய்ப் பார்க்கும்போது, நாட்டிய மண்டபத்தில் கல்யாணி குழந்தையுடன் இருப்பதைக் கண்டான்.

பிறகு இருவரும் சத்தியானந்தரின் ஆள் கொண்டுவந்த தந்த பழத்தையும் பாலையும் அருந்தினார்கள். களைத்துப்போய்க் கண்ணயர்ந்தார்கள். நித்திரை கலைந்து எழுந்ததும் இருவரும் பதசின்னத்துக்கே திரும்புவதென்று தீர்மானித்தார்கள். ஆனால் பதசின்னத்துக்குப் போகும் வழி எதுவென்று அந்த அடர்ந்த காட்டிலே அவர்களுக்குப் புரியவில்லை. கடைசியில் அவர்கள் இதுவரை பார்க்காத சந்தான வீரன் ஒருவன் அவர்களைக் காட்டிலிருந்து ஒரு சிற்றாற்றின் கரையில் கொண்டு விட்டான்.

பசுமையான பலவகை மரங்கள் ஆற்று நீரின்மேல் தம் நிழலைப் பரப்பின. பற்பல இனமான பட்சிகள் கூவின. கல்யாணி மனத்தில் ஏதோ பாரத்துடன் ஆற்றங்கரையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து புருஷனையும் தன் பக்கத்தில் அமரச் சொன்னாள்.

மகேந்திரன் பெருமூச்சு விட்டு, "இனி நான் என் சுவாதீனத்தில் இல்லை. இன்னது செய்யவேண்டுமென்றே தெரியவில்லை" என்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான். அப்போது கல்யாணி, "நான் நேற்று விடியற்காலையில் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு கனாக் கண்டேன். ஓர் அபூர்வமான இடத்துக்குப் போனேன். அங்கே ஒரு பீடத்தில், கொழுந்துவிட்டு உள்ளுக்குள்ளேயே மெதுவாக ஜொலிக்கும் நீல மலைபோல் நான்கு கைகளுடன் ஒருவர் காட்சியளித்தார். அவரெதிரே ஒரு பெண் உருவம் நின்றது. நாலு பக்கமும் மேகங்கள் கவிந்திருந்தபடியால் அவளுடைய காந்தி நன்றாக வெளிக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு மனவேதனையினால் அவள் அழுதுகொண்டிருப்பதாகத் தோன்றிற்று. அப்போது மேகம் சூழ்ந்த அந்த மெலிந்த மேனியாள் என்னைச் சுட்டிக்காட்டி, 'இவள்தான்! இவளால்தான் என் மகன் மகேந்திரன் என்னிடம் வரத் தயங்குகிறான்' என்றாள். உடனே நாலு கைகளையுடைய அந்த மூர்த்தி என்னைப் பார்த்து, 'நீ உன் கணவனை விட்டு என்னிடம் வா. இவள்தான் உங்களுக்கெல்லாம் தாய். உன் புருஷன் இவளுக்குச் சேவை புரியவேண்டும்' என்றார். அழுதுகொண்டே நான், 'என் புருஷரை விட்டு எப்படி வருவேன்?' என்றேன். மறுபடியும் வேணுகானம் போன்ற குரலில், 'நானே புருஷன்; நானே தாய்; நானே தந்தை; நானே மகன்; நானே மகளும். என்னிடம் வா!' என்றார் அவர். அதற்கு நான் என்ன சொன்னேனோ கவனம் இல்லை. அதற்குள் விழித்துக்கொண்டேன். நீங்கள் தேவர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள்; இந்தாருங்கள் குழந்தை" என்றாள்.

பிறகு தான் கொண்டு வந்திருந்த ஒரு குப்பியை மடியிலிருந்து எடுத்தாள். மகேந்திரன் வியப்படைந்து, "என்ன! விஷத்தையா தின்னப் போகிறாய்?" என்றான்.

"முதலில் விஷத்தை விழுங்கி

விடுவதென்றுதான் எண்ணினேன். ஆனால் உங்களையும் சுகுமாரியையும் விட்டு வைகுண்டம் போவதற்குக் கூட எனக்கு இஷ்டமில்லை. நான் சாகமாட்டேன்'' என்று சொல்லிக் கல்யாணி விஷக்குப்பியைத் தரையில் வைத்துவிட்டாள். பிறகு இருவரும் தங்கள் தங்கள் வாழ்வில் நடந்ததையும் நடக்கப் போவதையும்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். குழந்தை விளையாடிக்கொண்டே குப்பியைக் கையில் எடுத்தது; சற்று ஆட்டினதும் அது திறந்து கொண்டது. இதை அவர்கள் கவனிக்கவேயில்லை.

சற்று நேரங் கழித்து விஷக் குப்பி திறந்திருப்பதைப் பார்த்ததும் இருவருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

"ஐயோ, எதைத் தின்று விட்டாய்? எதைத் தின்றுவிட்டாயடீ? குடி முழுகிப்போச்சே!" என்று அலறிக்கொண்டே கல்யாணி குழந்தையின் வாய்க்குள் விரலை விட்டாள். குழந்தைக்கு ஏதோ சங்கடம் செய்தது. சற்று நேரம் புரண்டு விகாரமாக அழுது, கடைசியில் துவண்டு விழுந்துவிட்டது. கல்யாணி தன் கணவனைப் பார்த்து, "இனி என்ன இருக்கிறது? தெய்வம் அழைத்த இடத்துக்குச் சுகுமாரி நமக்கு முன்னே போய் விட்டாள்'' என்று சொல்லிக் கொண்டே விஷ மாத்திரை ஒன்றை வாயில் போட்டுக் கொண்டு நொடிப் பொழுதில் விழுங்கிவிட்டாள்.

மகேந்திரன், "அடி என் கண் மணி, கல்யாணி! என்னடி செய்து விட்டாய்?'' என்று கதறினான்.

அப்போது காட்டின் நடுவிலிருந்த,

"ஹரே முராரே மதுகைடபாரே''

என்று யாரோ பாடுவது கேட்டது.

கல்யாணிக்கு விஷம் தலைக் கேறிக்கொண்டிருந்தது. நினைவு தப்பிக்கொண்டே வந்தது. இருந்தும் பக்திபரவசமாகித் தானும் அதைப் பாடலானாள்; மகேந்திரனையும் பாடச் சொன்னாள்.

மகேந்திரன் சோகதாபங்களை மறந்து உன்மத்தம் பிடித்தவன் போல் கல்யாணியுடன் ஒரே குரலாய்,

"ஹரே முராரே மதுகைடபாரே!''

என்று பகவானை அழைத்தான். அப்போது யாரோ ஒருவர் வந்து அவனைத் தழுவிக்கொண்டு, அவனுடன் சேர்ந்து,

"ஹரே முராரே மதுகைடபாரே!''

என்று கூவியழைத்தார். அவர் வேறு யாருமல்ல; சத்தியானந்தர் தான்.

மெல்லோசையுடன் ஊர்ந்து செல்லும் அந்தச் சிற்றாற்றின் கரையில் பாதையின் ஓரமாக மரத்தடியில் கல்யாணி விழுந்து கிடந்தாள். மகேந்திரனும் சத்தியானந்தரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு கண்களில் நீர் அரும்ப, பகவந் நாமத்தை ஜபித்துக்கொண்டிருக்கும்போது நஜாரத்தி ஜமேதார் என்ற தளபதி சில சிப்பாய்களுடன் அங்கே தோன்றினான். அவன் சிறிதும் தயக்கமின்றிச் சத்தியானந்தரின் கழுத்தில் கை போட்டு, "இந்தப் பயல் ஒரு சந்நியாசி!'' என்றான். இன்னொருவன் அதே சமயம் மகேந்திரனைப் பிடித்துக்கொண்டான். மகேந்திரன் தன் இரு கைகளையும் பலமாக இழுத்துத் திமிறிக்கொண்டான். பிறகு அவன் ஜமேதார் சாகேபை ஒரே உதையில் தரையில் விழும்படி

செய்து சிப்பாய் ஒருவன்மீது பாய்ந்தான். உடனே மற்றச் சிப்பாய்கள் அவனை மூன்று பக்க மாக வந்து பிடித்துக்கொண்டு அடக்கிவிட்டார்கள். மகேந்திரனுக் குத் துக்கம் தாங்கவில்லை. "ஜக தீசன் எங்கும் இருந்து காப்பாற்று வான், பயப்படாதே" என்று சத்தி யானந்தர் அவனுக்கு ஆறுதல் சொன்னார்.

பிறகு, "ஹரிநாம ஸ்மரணம் செய் கிறேன். அதற்குத் தடை இராதே?" என்று ஜமேதாரைக் கேட்டார். சத்தியானந்தர் ஒரு நல்ல மனிதரென்று ஜமேதாருக்குத் தோன்றிற்று. அவன், "உன் இஷ்டப்படியே செய். பாவம், நீ கிழப் பக்கிரி. உன்னை விட்டுவிடுவ தற்கு அநேகமாய் உத்தரவு ஆகும். ஆனால் இந்தத் திருட்டுப் பயல் இருக்கிறானே, இவனைக் கட்டாயம் தூக்கிவிடுவார்கள்; சந்தேகமில்லை" என்றான்.

"காவில் தென்றல் வீசநதிக்
கரையில் உள்ளாள் இளநங்கை;
மேவச் சிறிதே பாணித்தால்
வில்லோய் நெஞ்சம் வேவாள்காண்!"

என்று சத்தியானந்தர் பாடத் தொடங்கினார்.

நகரத்தை அடைந்ததும் அவரை யும் மகேந்திரனையும் காவலில் வைத்தார்கள்.

சத்தியானந்தரின் பாட்டு ஜீவா னந்தன் காதில் விழுந்தது:

"காவில் தென்றல் வீசநதிக்
கரையில் உள்ளாள் இளநங்கை."

'நதியின் கரையில் இன்னும் எவள் பட்டினியாக விழுந்து கிடக் கிறாள்?' என்று யோசித்தவனாய், ஆற்றங்கரை ஓரமாகவே அவன் புறப்பட்டுச் சென்றான். சத்தியா னந்தரைச் சிப்பாய்கள் பிடித்துக் கொண்டு போவதைப் பார்த்தாலும் அவருடைய கட்டளையே முக்கியம் என்று உணர்ந்தான்.

ஆற்றங்கரையோரம் ஒரு மரத் தடியில் ஒரு பெண்மணியின் சவம் கிடந்தது. அங்கே உயி ருடன் ஒரு குழந்தையும் இருப்பதைக் கண்டான். 'இவர் கள் ஒருவேளை மகேந்திரனுடைய மனைவியும் பெண்ணுமாக இருக்க லாம். தாய் இறந்துவிட்டாள். குழந்தையைக் காப்பாற்ற வேண்டி யது நம் முதல் கடமை' என்று எண்ணி அதைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

பைரவிபுரத்தில் மாந்தோப் பிடையே ஒரு சிறு வீடு. அதை யொட்டி நான்கு சிறு குடிசைகள் இருந்தன. அங்கேதான் அவன் தங்கை **நிமாயிமணி** என்பவள் வசித்து வந்தாள். உள்ளே வந்ததும் கூடத்திலிருந்த சர்க்காவைக் 'கர் கர்' என்று சுற்ற ஆரம்பித்தான் ஜீவானந்தன். சர்க்கா சுற்றும் ஓசை கேட்டுக் குழந்தை வீரிடத் தொடங் கியது. அப்போது ஓர் அறையி லிருந்து பதினேழு அல்லது பதினெட்டு வயதுடைய ஒரு பெண் மணி வெளியே வந்தாள். "இதென்ன அண்ணா! சர்க்காவை ஏன் இப்படிச் சுற்றுகிறாய்?...இந் தக் குழந்தை எங்கிருந்து கிடைத் தது? உன்னுடையதா? மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கொண்டாயா என்ன?" என்றாள்.

ஜீவானந்தன் அவளை அடிக் கப்போகிற மாதிரி எழுந்து, "அடி குரங்கே, எனக்கேதடி குழந்தை? ஏது, என்னிடத்தி லேயே அதிகப்பிரசங்கத்துக்கு ஆரம்பித்துவிட்டாயோ!...உள்ளே பால் இருக்கிறதா? போய்ப் பார்" என்றான்.

அப்பொழுது அவள், "பாலுக்கென்ன குறைவு? சாப்பிடுகிறாயா?" என்றாள்.

"ஆகட்டும்; சாப்பிடுகிறேன்" என்றான் ஜீவானந்தன்.

குழந்தையை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு அவன் தங்கை நிமாயிமணி சமையலறைக்குச் சென்றாள். குழந்தைக்குப் பால் புகட்டியதும் ஜீவானந்தனுக்கு இலை போட்டுப் பரிமாறினாள். அவனும் வயிறு புடைக்க உண்டான். அவன் கை அலம்ப வரும்போது அவள், "அண்ணா, ஒரு சங்கதி" என்றாள். அவன், "என்ன?" என்றான். அதற்கு அவள், "மன்னியை ஒரு தரம் கூப்பிடுகிறேன்" என்றாள்.

"இதோ நான் போய்விடுகிறேன்" என்று சொல்லிக் கோபத்தோடு அவன் வெளியே போக யத்தனித்தான். நிமாயிமணி கதவைத் தாழிட்டுவிட்டு அதன்மேல் சாய்ந்த வண்ணம் வழிமறித்து, "என்னை முதலில் கொன்று போட்டுவிட்டு அப்புறம் போ. மன்னியைப் பாராமல் போகவே கூடாது" என்றாள்.

ஜீவானந்தன் சிரித்துவிட்டான். "சரி போ, அந்தத் தரித்திரத்தை அழைத்துக்கொண்டு வா" என்றான். நிமாயிமணி உள்ளே போய், "மன்னி, மன்னி, சீக்கிரம் எழுந்திரு" என்றாள்.

நிமாயிமணியின் மதனி சாந்திக்கு வயது ஏறக்குறைய இருபத்தைந்து இருக்கும். ஆயினும், பார்வைக்கு நிமியைக் காட்டிலும் வயதில் அதிகமானவளாகத் தோன்றவில்லை. அழுக்கடைந்த கந்தல் புடைவையுடன் அவள் வீட்டில் நுழைந்தபோது, வீடே அவளுடைய அழகால் பிரகாசம் அடைந்ததுபோல் இருந்தது; பன்னீர்ப்புட்டியைச் சட்டென்று திறந்ததும் வாசனை கம்மென்று வீசுவது போல் இருந்தது.

வீட்டின் புழைக்கடையில் ஒரு மாமரத்தின் கிளையில் தலையைச் சாய்த்துக்கொண்டு ஜீவானந்தன் அழுதுகொண்டிருந்தான். அந்த அழகி மெல்ல மெல்ல அவனை அணுகி அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவள் கண்களிலிருந்தும் நீர் பெருகவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கண்ணீர் வெள்ளம் தடையுறாமல் பெருகியிருக்குமானால், அது ஜீவானந்தனையே அடித்துக்கொண்டு போயிருக்கும். "உங்களுடைய விரதத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதா?" என்றாள் சாந்தி.

ஜீவானந்தன் தலை நிமிர்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டு மனைவியைப் பார்த்தான்; "விரத பங்கமானால் போகட்டும்; அதற்குப் பிராயச்சித்தம் இருக்கிறது. ஆனால் உன்னை ஒரு தரம் பார்த்த பிறகு என்னால் திரும்பிப் போக முடியாதே என்றுதான் கலங்குகிறேன்" என்றான்.

சாந்தி சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு மெதுவாக, "சே, இது உங்களுக்குத் தகாது! நீங்கள் வீரர். ஒரு வீரரின் பத்தினியாக இருப்பதே இந்த உலகில் நான் அடையும் பெருமை. என்மேல் நீங்கள் ஆசை கொள்ளவேண்டாம். அந்தச் சுகம் எனக்கு வேண்டியதில்லை. ஆனால் நீங்கள் மட்டும் வீரருக்குரிய தர்மத்தைக் கைவிடாமல் நில்லுங்கள். இதோ, எனக்கு உறுதிமொழி தரவேண்டும். இந்த விரத பங்கத்துக்குப் பிராயச்சித்தம் என்ன?" என்றாள்.

"பிராயச்சித்தமா? தானம், உபவாசம், பன்னிரண்டு பலகறை தட்சிணை" என்றான் ஜீவானந்தன்.

சாந்தி புன்னகை அரும்பக் கூறு வாள்: "பிராயச்சித்தம் இன்ன தென்பது தெரியும். ஒரு குற்றத் துக்கு என்ன பிராயச்சித்தமோ, நூறு குற்றங்களுக்கும் அதுவே தானு?"

ஜீவானந்தன் திடுக்கிட்டு விசன மடைந்தவனுய், "ஏன் இப்படி யெல்லாம் கேட்கிருய்?" என்ருன்.

சாந்தி: நான் உங்களிடம் ஒரு பிச்சை கேட்கிறேன்: நீங்கள் என்னை மறுபடியும் பாராமல் பிராயச்சித்தம் செய்துகொள்ளக் கூடாது.

அப்பொழுது ஜீவானந்தன் நகைத்து, "அதற்காக நீ கவலைப் படவேண்டாம். உன்னைப் பாராமல் நான் சாகமாட்டேன்" என்ருன்.

சாந்தி: நீங்கள் இப்பொழுது எங்கே போகிறீர்கள்?

ஜீவா: சத்தியானந்தரைத் தேடு வதற்காக மடத்துக்குப் போகி றேன்.

சத்தியானந்தர் சிறைப்பட்டது தெரிந்ததும் பவானந்தன், மொகலா யனைப் போல் வேஷம் புனைந்து ஆயுதபாணியாய்க் குதிரையேறி மடத்திலிருந்து நகரை நோக்கிப் புறப்பட்டான். அப்போது பாதை யோரத்தில் ஆற்றங்கரையில் ஓர் அழகி விழுந்து கிடப்பதைக் கண் டான். அவளுக்கு உயிர் இருப்பதன் அறிகுறி சிறிதும் தென்படவில்லை. பக்கத்தில் தரைமீது காலி விஷக் குப்பி ஒன்று கிடப்பதையும் பார்த் தான். பவானந்தனை முதலில் வியப்பும் கலவரமும் பயமும் ஒருங்கே பிடித்துக்கொண்டன. ஏதோ யோசனை தோன்றவே காட்டில் சென்று ஒரு மரத்தின் இலையைக் கொண்டுவந்து கையால் கசக்கி அதன் ரசத்தை அவள் உதட்டை நீக்கி வாயில் பிழிந்தான். நாசித் துவாரங்களிலும் அதைத் தடவினுன். மெல்ல மெல்லக் கீழ்த் திசையில் புலரும் வைகறையின் மலர்ச்சியைப் போலவும், அதிகாலை யில் இதழ் விரிக்கும் அரவிந்த மலர் போலவும், உள்ளத்தில் எழும் முதல் காதல் இன்பம் போலவும் அவள் கண்களைத் திறக்கலானுள். பவா னந்தன் பாதி உயிர் வந்திருக்கும் அந்தப் பெண்மணியைக் குதிரை மேல் ஏற்றி வைத்துக்கொண்டு நகரை நோக்கிக் கடுவேகமாகப் போனுன். அதற்குள் சந்தான வீரர்களெல்லாரும் ஆயுதபாணி களாய் வந்து சத்தியானந்தரையும் மகேந்திரனையும் சிறைக்கூடத்தி லிருந்து விடுவித்தார்கள்.

சத்தியானந்தர் மூலம் தன் பெண் பிழைத்திருப்பதாகவும் சுக மாக ஓர் இடத்தில் வளர்ந்து வருவ தாகவும் அறிந்து மகேந்திரன் திருப்தியடைந்தான். சந்தான விரதத்தில் தீட்சை செய்துவைக் கும்படி அவரை வேண்டினுன்.

அதே சமயம் புதிதாக ஓர் அழகிய பிராம்மண வாலிபன் அங்கே வந்து சேர்ந்தான். அவனும் தீட்சை பெற விரும்பினுன். இருவரையும் சத்தியானந்தர் சந்தானர்களாக ஏற்றுக்கொண்டார்.

தீட்சை செய்து வைத்தானதும் அவர் மகேந்திரனிடம் ஏராளமான பொருள் கொடுத்து, "பல இடங்களி லிருந்து கைதேர்ந்த சிற்பிகளை அழைத்து வருகிறேன். சிற்பிகள் வந்தவுடன் நீ பதசின்னத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி, அங்கே பீரங்கிகள், குண்டுகள், வெடி மருந்து, துப்பாக்கி யாவும் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

மகேந்திரன் சத்தியானந்தரின் பாதங்களை வணங்கி உத்தரவு பெற் றுச் சென்றபின், அவனுடன் அன்று

தீட்சைபெற்ற இரண்டாம் சிஷ்யன் அங்கே தோன்றி அவரை வணங்கினன். சத்தியானந்தர் அவனை ஆசீர்வதித்து, "உன்னுடைய இள வயதைப் பார்த்து உனக்கு நவீனுனந்தனென்று பெயர் வைக்கிறேன். ஒன்று கேட்கிறேன்: உனக்குப் பூர்வாசிரமத்தில் என்ன பெயர்? அதைச் சொல்வதற்கு ஏதாவது தடையிருந்தாலும் நீ சொல்ல வேண்டும். என்னிடம் சொன்னுல் பிறர் காதுக்கு அது எட்டாது. எந்த ரகசியமாயிருந்தாலும் குருவிடம் சொல்லியாகவேண்டும்" என்ருர்.

சிஷ்யன்:—என் பெயர் சாந்திராம் தேவசர்மா.

உடனே அவர் சிஷ்யனுடைய குச்சி குச்சியாக இருக்கும் கறுத்து நீண்ட தாடியை இடது கையால் பிடித்திழுத்தார். அந்தப் பொய்த் தாடி கழன்றுவிட்டது. அப்போது அவர், "சே குழந்தாய்! என்னிடங்கூடவா இந்த வேடிக்கை? என்னை ஏமாற்றப் பார்த்தாலும் இவ்வளவு இள வயதில் இவ்வளவு பெரிய தாடியை ஏனம்மா தொங்க விட்டுக்கொண்டாய்? தாடியைச் சிறிதாக வெட்டிக்கொண்டாலும் அந்தக் குரலேயும் பார்வையையும் மறைக்க முடியுமா? அவ்வளவு புத்தி கூடவா இல்லை எனக்கு!" என்ருர்.

தடிச்சிறுக்கி சாந்தி, உடனே தன் இரு கண்களையும் கையால் மூடிக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள். ஆனுல் மறுகணமே கண்களினின்று கையையெடுத்து, "சந்தானர்களின் தோள் வலியைத் தாங்கள் எப்போதாவது சோதிப்பதுண்டோ?" என்ருள்.

சத்தி:—உண்டு.

இதைக் கூறியதும், அங்கே இருந்த ஓர் எஃகு வில்லேயும் சில இரும்புக் கம்பிகளையும் காட்டி, "இந்த எஃகு வில்லில் இரும்புநாணை அவர்கள் பூட்டவேண்டும். நாணின் நீளம் இரண்டே முழம். நாணைப் பூட்டும்போது வில் எழும்பும். நாண் பூட்டி வளைக்க முயற்சி எடுப்பவனை அடித்துத் தள்ளிவிடும். இப்படிப்பட்ட வில்லே எவன் சரியாக வளைக்கிருனே அவனே உண்மையான பலவான். நாலு பேரே இதில் தேர்ந்திருக்கிருேம். நான், ஜீவானந்தன், பவானந்தன், ஞானனந்தன்" என்ருர். உடனே சாந்தி வில்லேயும் நாணையும் எடுத்து அலட்சியமாய் வில்லே வளைத்தாள். சத்தியானந்தரின் காலடியில் போய் விழுமாறு அம்பை எய்தாள்.

சத்தியானந்தர் பயந்து ஸ்தம்பித்து நின்ருர். சிறிது நேரம் கழித்தே அவர், "இது என்ன? நீ தெய்வப்பெண்ணு அல்லது சாதாரண ஸ்திரீயா?" என்ருர்.

சாந்தி இரண்டு கையையும் கூப்பி, "நான் சாமானியமான ஸ்திரீ தான். நான் சுமங்கலி. ஆனுலும் பிரம்மசாரிணியாகவே இருக்கிறேன்" என்ருள்.

"உன் புருஷனைத் தேடிப்பிடிக்க முடியாதோ?"

"முடியும். அதற்காகவே வந்திருக்கிறேன்."

திடீரென்று மேகத்தினின்று வெடித்து வரும் வெயில்போல் சத்தியானந்தர் மனத்தில் பளிச்சென்று ஒரு பழைய நினைவு வந்தது. "நீ ஜீவானந்தனுடைய சம்சாரமா?" என்ருர்.

இந்தத் தடவை நவீனுனந்தனுடைய முகம் ஜடாபாரத்தில் மறைந்துவிட்டது.

"இந்தப் பாவத்தைச் செய்ய ஏன் வந்தாய்?" என்ருர் சத்தியானந்தர்.

உடனே சாந்தி ஜடாபாரத்தை

முதுகுப்புறமாகத் தள்ளிக்கொண்டு தலை நிமிர்ந்து, "இதில் என்ன பாவமோ? ஸ்வாமி! எந்த மகா வீரன், மனைவி இல்லாமல் வீரனானன்? சீதை இல்லாவிட்டால் ஸ்ரீ ராமன் வீரனாயிருப்பானா? அர்ஜுனன் எத்தனை பேர்களை மணந்து கொண்டான்? எண்ணிப் பார்த்தீர்களா? பீமனுக்கு எவ்வளவு பலமோ அவ்வளவு பத்தினிகளாம். இன்னும் எத்தனை பேரைக் குறிப்பிடலாம்? தேவரீருக்குத் தெரியாத விஷயம் என்ன இருக்கிறது?" என்றாள்.

அன்றிரவு சாந்தி மடத்தில் தங்கியிருக்க அநுமதி பெற்றாள். அவள் ஜீவானந்தனின் அறைக்குச் சென்றாள். அப்போது அவன் அங்கே இல்லை. அவன் உபயோகிக்கும் கிருஷ்ணாஜினத்தை விரித்து அதில் உட்கார்ந்தாள். விளக்கைத் தூண்டிவிட்டு அவனுடைய புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரம் கழித்து ஜீவானந்தன் அங்கே வந்து சேர்ந்தான். சாந்தி ஆண்வேஷத்தில் இருந்த போதிலும் ஜீவானந்தன் அவளைத் தெரிந்துகொண்டு, "இதென்ன? சாந்தியா?" என்றான்.

சாந்தி நிதானமாகவே புத்தகத்தை வைத்துவிட்டு ஜீவானந்தனை நோக்கி, "யாரையா சாந்தி? நான் நவீனானந்த கோஸ்வாமி" என்றாள்.

ஜீவானந்தன் உரக்கச் சிரித்து, "இதென்ன புது வேடிக்கை?.. நல்லது; நவீனானந்தரே, இப்போது என்ன செய்யவேண்டும்......?" என்று அவளை நெருங்கினான்.

"நீர் தனியாக வேறு இடத்தில் உட்காரவேண்டும். என்னுடன் பேசுவதுகூட உசிதமல்ல" என்று சொல்லிக்கொண்டே சாந்தி மறுபடியும் புத்தகத்தில் தன் மனத்தைச் செலுத்தினாள். தன் பிடி ஒன்றும் சாயாதிருப்பதைக் கண்டு ஜீவானந்தன் வேறொரு படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டான்.

அப்போது வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்தான். காப்டன் தாமஸ் என்ற சாமர்த்தியம் வாய்ந்த ஒருவனைத் தளவாயாக நியமித்து அவன் கீழ்க் கும்பினிச் சிப்பாய்ப் பட்டாளமொன்றைச் சந்தானர்களை அடக்க அனுப்பினான்.

காப்டன் தாமஸ் அங்கே போய்ச் சேர்ந்ததும், புரட்சியை நசுக்க மிகச் சிறந்த பந்தோபஸ்துகளை வெகு விரைவில் செய்யத் தொடங்கினான். நவாபு அரசாங்கத்தாரின் படைகளுடன் ஜமீன்தார்களின் படைகளை ஒன்றாகத் திரட்டி, கம்பெனிக்குச் சொந்தமான பயிற்சி பெற்ற வீரர்களையும் சேர்த்துப் பெரும்படை யொன்றைத் தயாரித்தான்.

இதற்கிடையே வழக்கம்போல் பவானந்தன் ஒரு நாள் கல்யாணி இருந்த வீட்டுக்கு வந்தான். "கல்யாணி, எப்படி இருக்கிறாய்? உடம்பு சௌக்கியந்தானே?" என்றான்.

கல்: என் தேக சௌக்கியத்தைப் பற்றி உங்களுக்கென்ன அக்கறை? எனக்குந்தான் என்ன கவலை?

பவா: எவன் மரம் வைக்கிறானோ அவனுக்கு அது வளர்ந்துவருவதைப் பார்ப்பதிலே ஒரு சந்தோஷம். செத்துப்போன உனக்கு நான் உயிரைக் கொடுக்கவில்லையா?

கல்: அது சரி; என் புருஷரைப் பற்றி ஏதாவது சமாசாரம் தெரியுமா?

பவா: அடிக்கடி அதைப்பற்றி

என் என்னைக் கேட்கிறாய்? அவன் என்னவோ உன் வரைக்கும் செத்துப்போன மாதிரியே.

கல்: நான்தான் அவர் வரைக்கும் செத்த மாதிரி; அவர் எனக்கு அப்படி இல்லை. என் சுகுமாரி எப்படி இருக்கிறாள் தெரியுமா?

பவா: வெகு நாளாக அவளைப் பற்றி ஒரு செய்தியும் தெரிய வில்லை. ஜீவானந்தனும் அந்தப் பக்கம் போய் அநேக தினங்களாகி விட்டன. சரி; உன் குழந்தையைக் கொண்டு வந்து விடுகிறேன். அதற்கப்புறம்?

கல்: அதற்கப்புறம் என்ன?

பவா: நீ மறுபடியும் விவாகம் செய்துகொள்வாயா?

கல்: உன்னைத்தானே?

பவா: அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.

கல்: இந்த மகாவிரதம்?

பவா: அது எக்கேடு கெட்டால் என்ன?

கல்: எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்?

பவா: உனக்காகவே, கல்யாணி! நாலு வருஷமாய்ச் சகித்துக் கொண்டு வந்தேன்; இனி முடியாது; நீ என்னுடையவள் ஆவாயா?

கல்: இந்திரியத்துக்கு எவன் வசமாகிறானோ அவனுக்குப் பிராயச் சித்தம் சந்தான தர்மத்தின்படி மரணமே என்று நீயே சொல்லி யிருக்கிறாய்; அது நிஜந்தானே?

பவா: நிஜந்தான்.

கல்: அப்படியானால் உனக்குப் பிராயச்சித்தம் மரணமா?

பவா: ஆம்; மரணம் ஒன்றுதான் எனக்குப் பிராயச்சித்தம்!

கல்: நான் உன் கோரிக்கைக்கு இணங்கமாட்டேன். நீ எப்போது சாவாய்?

பவா: வரப்போகும் யுத்தத்தில்.

கல்: அப்படியானால் போய்விடு. என் குழந்தையை அனுப்பிவிடு.

பவானந்தன் சிறிது நேரம் ஒரே நிலையாக நின்றான்; கடைசியில் கண்களில் நீர் பெருக, "அனுப்புகிறேன்... நான் இறந்த பிறகாவது என்னைப்பற்றி நினைப்பாயா?" என்றான்.

கல்: அப்படியே நினைத்துக் கொள்வேன் - நெறி தவறிய பாவி யென்றுதான்!

பவானந்தன் அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

ஆங்கிலேயரின் குண்டுகள் காட்டின் மத்தியில் சந்தானர்களின் மீது நெருப்பு மழையெனப் பொழிந்தன. பாடிக்கொண்டே சிலர் தலை அறுந்தும், கரம் சிதைந்தும், மார்பு பிளந்தும் தரைமீது உருண்டார்கள். ஆயினும் ஒருவராவது பாடுவதை நிறுத்தவில்லை; "ஜய ஜகதீச ஹரே" என்று பாடிக் கொண்டிருந்தார்கள். பவானந்தனும் ஜீவானந்தனும் முன் நின்று போரிட்டதுதான் இதற்குக் காரணம். சந்தான வீரர்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் சண்டையில் மும்முரமாக ஈடுபட்டார்கள். காப்டன் தாமஸ் அவர்கள் கையில் சிக்கினான். பவானந்தன், "அந்தத் தடியனை என் எதிரே கொண்டு வந்து நிறுத்துங்கள். முன்னால் அவனைக் கொன்றுவிட்டு அப்புறம் நான் சாகிறேன்" என்று கட்டளையிட்டான்.

ஆனாலும் தாமஸ், "இவன் கையால் சாகும்படி விடாதீர்கள். என்னை முதலில் கொன்று இவனைக் கொல்லுங்கள்" என்று வெள்ளைக்காரப் படைவீரர்களைப் பார்த்துக் கூவினான்.

அப்போது ஓர் ஜரிஷ்காரனின் குண்டு விர் என்று தாமஸின் நெற்றியில் வந்து பாய்ந்தது. அதே சமயம் பவானந்தனை வெள்ளையர் படை சூழ்ந்துகொண்டது. ஆனாலும் அவர்களின் பீரங்கிகளைச் சந்தானர்கள் பிடித்துக்கொண்டார்கள். இதற்கிடையே பவானந்தனின் கையை ஒரு சிப்பாய் துண்டித்தான். இருந்தாலும் பவானந்தன் இன்னொரு கையால் அநேகம் பேரைக் கொன்று வீழ்த்தினான். கடைசியில் அந்தக் கையும் அறுபடவே கீழே விழுந்தான். அதற்குள் சந்தான சைனியம் வெள்ளைப்படை வீரர்களை முறியடித்துவிட்டது. பவானந்தன், "வந்தேமாதரம்" என்று பாடிக்கொண்டே உள்ளத்தில் ஹரியின் ஸ்ரீசரண கமலங்களை இருத்தி உயிர் நீத்தான். அவனுடைய பிராயச்சித்தம் நிறைவேறிவிட்டது!

வெற்றி பெற்றும் அவன் போய்விட்டதால் சத்தியானந்தருக்கு மிகவும் வருத்தம். இருந்தாலும் மேற்கொண்டு ஆட்சிப்பொறுப்பைக் கவனிக்கும்படி சந்தானர்களுக்குக் கட்டளையிட்டார்.

பிறகு மகேந்திரனை அழைத்து, "இனி நீ சம்சார காரியங்களைக் கவனிக்கலாம்" என்றார். மகேந்திரன், "என் குழந்தை எங்கே? என் மனைவியோ போய்விட்டாள். இனி என்ன செய்வது?" என்று உள்ளம் நைந்து சொன்னான். சத்தியானந்தர் நவீனனந்தனை அழைத்து அவனுடன் மகேந்திரனை அனுப்பி, "இவன் உன் பெண்ணைப்பற்றி எல்லா விஷயமும் தெரிவிப்பான்" என்றார்.

எல்லாரும் சென்ற பிறகு அவர் தனியாகப் பூமியில் தலையைத் தாழ்த்தித் தம் மனத்திடையே கடவுளைத் தியானிக்கத் தொடங்கினார்.

இரவு கொஞ்சங் கொஞ்சமாக வைகறையாக மாறிக்கொண்டே வந்தது. அந்தச் சமயம் யாரோ ஒருவர் தோன்றி அவரது தலையைத் தொட்டு, "நான் வந்திருக்கிறேன்" என்றார்.

சத்தியானந்தர் திடுக்கிட்டு எழுந்து மிகவும் கவலை தோய்ந்த குரலில், "தேவரீர் வந்தது ஏனோ?" என்றார். வந்தவர், "உன் காலம் ஆகிவிட்டது" என்றார்.

"பிரபுவே! இன்று அடியேனை மன்னித்தருள வேண்டும். வருகிற மாசிப்பூர்ணிமையன்று அடியேன் தேவரீரது ஆக்ஞையின்படி நடந்துகொள்ளுகிறேன்" என்றார் சத்தியானந்தர்.

சந்தானர்கள் ஜயித்துவிட்டார்கள் என்று கேட்டதும் அன்று நள்ளிரவிலேயே கல்யாணி படுக்கையை விட்டு எழுந்தாள்; புழைக்கடைக் கதவைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்து ஒருவரும் இல்லாதிருக்கக் கண்டு, சந்தடி செய்யாமல் தான் இருந்த வீட்டை விட்டு நழுவி ராஜவீதிக்கு வந்தாள். தன் இஷ்ட தெய்வத்தை நினைத்து, "கருணை செய்ய வேண்டும், தெய்வமே! நான் அவரை இன்றே பதசின்னத்தில் தரிசிக்கும்படி அருள வேண்டும்" என்றாள். வழியில் ஒரு போக்கிரிக் கூட்டத்தாரின் கையில் அகப்பட்டுக்கொண்டாள். அவர்களில் ஒருவன் விகாரமாகக் கூவிக்கொண்டே அவளைப் பிடிக்க வந்தான். அதே சமயம் யாரோ ஒருவன் தெய்வாதீனமாய் அங்கே தோன்றி, அந்த முரடனைத் தடியால் நையப் புடைத்தான். அடியை வாங்கிக்கொண்டு அவன் மற்றவர்

களோடு ஓட்டம் பிடித்தான். வந்தவன் ஓர் இளஞ் சந்நியாசி. அவன் கல்யாணியைப் பார்த்து, "பயப்படாதே, நீ என்னுடன் வா. நீ எங்கே போக வேண்டும்?" என்றான்.

கல்யாணி, "பதசின்னத்துக்கு" என்றாள். அவன் பிரமித்துப்போய், "என்ன கல்யாணி, பதசின்னத்துக்கா?" என்று கல்யாணியைச் சேர்த்து அணைத்துக்கொண்டான். முதலில் கல்யாணிக்குத் திகிலாக இருந்தாலும் வந்த ஆள் பெண் பிள்ளை என்று தெரியவே கொல்லென்று சிரித்துவிட்டாள். பிறகு, "நீ யாரோ தெரியவில்லையே? உனக்கு எல்லா விஷயமும் தெரியும் போல் இருக்கிறதே?" என்றாள்.

"நான் பிரம்மசாரிணி. சந்தான சைனியத்தின் ஒரு தளபதி. மகா கோர வீர புருஷன்! சரி; வா, போகலாம் பதசின்னத்துக்கு" என்று சொல்லிச் சாந்தி கல்யாணியைத் தன்னுடன் அந்தக் காட்டு வழியே அழைத்துச் சென்றாள்.

வட வங்காளம் நவாபின் கையை விட்டு நழுவிற்று. ஆனால் வாரன் ஹேஸ்டிங்ஸ் சும்மா இல்லை. விரைவில் சந்தானர்களை அடக்கும் பொருட்டு மேஜர் எட்வர்ட்ஸ் என்ற இரண்டாவது தளபதி ஒருவனை அனுப்பி வைத்தான்.

இது ஐரோப்பிய ரீதியான யுத்தமில்லையென்று கண்டுகொண்டான் எட்வர்ட்ஸ். ஒற்றர்களை விடுத்துப் பதசின்னத்தில் சந்தானர்களின் படைப் பலத்தைத் தெரிந்துகொண்டான். அதற்கு மேல் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியை விட்டுவிட்டான். ஆனால் ஓர் அபூர்வமான சூழ்ச்சி செய்தான்.

மாசி மாதத்துப் பௌர்ணமி நெருங்கிற்று. ஆற்றங் கரையில் ஒரு 'மேளா' நடப்பதுண்டு. இந்த ஆண்டு அந்த விழா விசேஷ வைபவத்துடன் நடக்குமென்று தெரிந்தது. சந்தானர்கள் அனைவரும் வந்து அங்கே ஒன்று கூடுவார்களென்றும் தெரிந்தது.

மகேந்திரன் சந்தானப் படையுடன் அங்கே வந்து சேர்ந்தான். அதன் பக்கத்தில் ஒரு செங்குத்தான குன்று. அதன்மேல் ஏறுவது மிகவும் கஷ்டம். அந்தக் குன்றின் மீது பாசறை அமைத்தால் சௌகரியமாயிருக்குமென்று அதன்மேல் ஏறிப் பார்த்து வர எண்ணினான். இரவு வெண்ணிலவு வீசியது. மெல்லக் குன்றின்மீது செல்லலானான். கொஞ்ச தூரமே ஏறியிருப்பான். அப்போது ஜீவானந்தன் அவனெதிரே ஓடிவந்தான்: "குன்றுக்கு அந்தப் பக்கம் இருக்கிறார்கள் நம் விரோதிகள். இன்று இந்த மலை முடியில் நீலமாக ஒளிரும் இரவு வேளையில் சந்தானர்கள் யுத்தத்துக்குத் தயாராக வேண்டும். முன்னதாக உச்சிக்கு வருபவர்களுக்கே ஜயம். வந்தே மாதர கீதத்தைப் பாடுங்கள்" என்றான்.

அப்போது அந்தக் காடும் வெளியும் அதிரும்படி வந்தேமாதர கீதம் கிளம்பியது. ஆங்கிலேயர் குன்றின் உச்சியை நோக்கிவந்துவிட்டார்கள். அன்று நடந்த போரில் ஜீவானந்தனுடைய அபாரமான வீரத்தைக் கண்டு சந்தானர்கள் வியந்தார்கள்; "ஜீவானந்தனுக்குத்தான் சாகத் தெரியுமா? நமக்கும் தெரியாதா? வாருங்கள்; ஆங்கிலேயர்களை அதம் செய்து நாமும் அவனுடன் உயிர் விடுவோம்" என்று ஆர்ப்பரித்துக்கொண்டே ஆங்கிலேயச் சைனியத்தின்மீது பாய்ந்தார்கள்.

ஆங்கிலேயருடைய சைனியம் சின்னபின்னமாகிவிட்டது.

வெண்ணிலா வீசும் இரவு.

அந்த நிசி வேளையில் ஒரு பெண் மணி, யாரும் போவதற்கு அஞ்சும் அந்தப் போர்க்களத்தில் திரிந்து கொண்டிருந்தாள். ஒரு தீவட்டியைக் கொளுத்தி அதன் வெளிச்சத்தில், பிணக் குவியலின் நடுவில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

அவள் யாருமல்ல; சாந்திதான். இப்படிப் புரண்டு அழுதுகொண்டிருக்கும் சமயம் உருக்கமான ஒரு குரலோசை அவள் காதில் விழுந்தது. "எழுந்திரு, அம்மா! அழாதே" என்று யாரோ சொல்வதுபோல் இருந்தது. சாந்தி திரும்பிப் பார்த்தாள். எதிரிலே நிலா வெளிச்சத்தில் அபூர்வமான தோற்றத்தையுடைய ஜடாதாரியான ஒரு மகா புருஷர் நின்று கொண்டிருந்தார்.

சாந்தி எழுந்திருந்தாள். அந்த மகாபுருஷர், "அழாதே, அம்மா; ஜீவானந்தனுடைய உடலை நான் தேடித் தருகிறேன். என்னுடன் வா" என்றார். கடைசியில் பிணக் குவியலிலிருந்து அவர் ஜீவானந்தனுடைய உடலை எடுத்தார். அது எங்கும் சிதைவுண்டு ரத்த மயமாய் விளங்கியது.

சாந்தி அவர் சொன்னபடியே அருகிலுள்ள குளத்துக்குப் போய் அவன் ரணங்களைக் கழுவிக்கொண்டிருக்கும்போது, மகா புருஷர் காட்டுச் செடி கொடிகளின் ரசத்தைப் பிழிந்தெடுத்து வந்து காயங்களின் மேல் பூசி, ஜீவானந்தனுடைய உடலைத் தம் கையால் அடிக்கடி தடவிக்கொடுத்தார். ஜீவானந்தன் ஒரு நீண்ட மூச்செறிந்து எழுந்து உட்கார்ந்தான். சாந்தியைப் பார்த்து, "யுத்தத்தில் யாருக்கு ஜயம்?" என்றான்.

"உங்களுக்கே...இந்த மகாத்மாவை நமஸ்கரியுங்கள்" என்றாள் சாந்தி.

இருவரும் அங்கே பார்க்கையில் ஒருவரையும் காணவில்லை. யாருக்கு நமஸ்காரம் செய்வது?

சாந்தி, "இனி இங்கென்ன நமக்கு வேலை? மாதாவின் காரியம் கைகூடிவிட்டது. இந்தத் தேசம் சந்தானர்களின் கைக்கு வந்துவிட்டது. நமக்கு ராஜ்யத்தில் பாகம் வேண்டாம்" என்றாள்.

ஜீவா: சாந்தி! சாரத்தை உணரும் சக்தி உனக்கு இருக்கிறது. இந்தப் பிராயச்சித்தத்தை அரைகுறையாக நிறைவேற்ற மாட்டேன். தாய் நாட்டின் பணியிலிருந்து விலகி வீட்டை அடைந்து சுக போகங்களை அநுபவிப்பது முறையாகாதே!

சாந்தி: அப்படியா நான் சொல்லுவேன்? சீ! நாம் இனி ஒருகாலும் இல்லறத்தைத் தழுவவேண்டாம்; இப்படியே இருவரும் துறவிகளாகவே இருந்து விடுவோம். தீர்த்த யாத்திரை செய்த பிறகு இமாலயத்தில் பர்ணசாலை கட்டிக்கொண்டு நாம் பரப்பிரம்மத்தை வழிபடுவோம். பாரத மாதாவுக்குச் சகல மங்களங்களும் உண்டாகும்படி வரம் கேட்போம்.

பிறகு இருவரும் எழுந்து கை கோத்துக்கொண்டு வெண்ணிலவு விரித்திடும் நள்ளிரவில் எல்லையற்ற வெளியில் மறைந்தார்கள்.

சத்தியானந்தர் போர்க் களத்திலிருந்து யாருடனும் ஒன்றும் சொல்

லாமல் புறப்பட்டு ஆனந்த மடத்துக்குப் போய்விட்டார். அங்கே நள்ளிரவில் விஷ்ணு கோயில் மண்டபத்தில் வீற்றுத் தியானத்தில் லயித்திருந்தார். அப்போது அந்த மகாபுருஷர் அங்கே வந்தார்; "உன் காரியம் நிறைவேறிவிட்டது. கள்ளத்தனத்தினாலும் பலாத்காரத்தினாலும் நீ ராஜ்யத்தைப் பிடித்தாய். ஆகவே, அது நிலைக்காது. இனி ஆங்கிலேயர் வியாபாரம் செய்வதை விட்டு இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள். பின்னால் வெளியுலகைப் பற்றிய அறிவு ஏற்பட்டு நம் தர்மம் புத்துயிர் பெறும்; அப்போது தர்ம ரீதியாகவே நாடு விடுதலை பெறும். இனி நீ செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. என்னோடு புறப்பட்டு வா" என்றார்.

சத்தியானந்தர் வர மனம் இல்லாமல், "என் தாயை இந்த நிலையில் விட்டா வரச் சொல்கிறீர்கள்? அதைவிட அவள் முன்னிலையிலேயே என் உயிரை விடுகிறேன்" என்றார்.

மகாபுருஷர்: அஞ்ஞானத்தாலேயே இந்தமாதிரி காரியம் செய்வார்கள். வா என்னுடன். ஞானம் பெறுவாய். இமாசலத்தில் தேவியின் ஆலயம் ஒன்று இருக்கிறது. அங்கே உனக்கு அவளைக் காட்டுகிறேன் வா!

இவ்வாறு சொல்லிக்கொண்டே மகாபுருஷர் சத்தியானந்தரின் கையைப் பற்றிக்கொண்டார். ஞானம் வந்து பக்தியைப் பற்றிக்கொண்டது; தர்மம் வந்து கர்மத்தைப் பிடித்துக்கொண்டது; வெறுப்பு வந்து விருப்பை ஆட்கொண்டது!

புதுமை மிரட்சி

சுவரிலே காகிதங்களை (வால் - பேப்பர்) அலங்காரமாக ஒட்டுவது இப்போது பிரிட்டனில் சர்வசகஜமான வழக்கம். 1710-ஆம் வருஷத்திலேயே இந்தக் காகிதங்கள் பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் இறங்கின. ஆனால் அங்கே உள் நாட்டு யுத்தம் நடந்து முடியும்வரைக்கும், அமெரிக்கர் இதை ஒட்டப் பயந்தார்கள். இதுமாதிரி கெட்டியாகச் சுவரில் ஒட்டிக்கொள்ளும் எந்தப் பொருளும் விஷம்போல் தீங்கு செய்யும் என்பதே அவர்கள் பயம்.

'டொமாடோ' என்ற சீமைத் தக்காளி மிக்க அருமையான உணவு என்று இந்தக் காலத்தில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே; இந்தப் பழங்களை ஒரு காலத்தில் பன்றியின் உணவாகத்தான் மதித்தார்கள். மனிதனும் இதை உண்ணலாம் என்று அன்று எவனாவது சொன்னால் அவனை எல்லாரும் பரிகசித்தார்கள்.

1797 - இல் சார்லஸ் நியூபோல்டு என்பவன் இரும்புக் கலப்பையை முதல் முதல் செய்தான். இரும்புக் கலப்பையால் மண்ணிலே விஷம் ஊறிவிடும் என்று சொல்லி, மற்றக் குடியான வரெல்லாம் அதை உபயோகிக்க மறுத்துவிட்டார்கள்.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

மஞ்சரி

டிசம்பர் '50 — நவம்பர் '51

நான்காம் வருஷ அட்டவணை

அரசியல்:

ஊரும் உலகமும் . . எப்ரல் '51 . 1
மே. '51 . . 1   ஜூன் '51 . 1
ஜுலை '51 . . 1   ஆகஸ்ட் '51 . 1
செப். '51 . . 1   அக். '51 . 1
நவம். ' 51 . . 1
ஈரான் எண்ணெய் ஜூன் '51 . 10
எத்தனை ஸ்தானங்கள்? . . . . .
நவ. '51 . . 19
சீனாவின் புது வாழ்வு . பிப். '51 . 1
சீனாமீது நிர்ப்பந்தம் பலிக்குமா ?
மார்ச் '51 . 1
நாடு கொழிக்கும் திட்டம் . . .
ஆகஸ்ட் '51 . 3
பர்மாவில் கம்யூனிஸ அபாயம் . .
செப். '51 . 46
பூலோக சிகரம் - திபேத் . . . .
டிச. '50 . . 1
முதல் சுதந்தரத் தேர்தல் . . .
அக். '51 . 50
யுத்தத்தில் என் கடமை - மகாத்மா காந்தி . . . . ஜன. '51 . . 1
விலகவேண்டிய தலைவர்கள் . . .
நவ. '51 . . 3

உணவு

சில பழங்கள் . . . நவ. '51 . . . 30
சீமைத் தக்காளி . . பிப். '51 . . 21
பாதுகாத்த பழங்கள் . டிச. '50 . . 46

க்விஸ்

டிச. '50 . . 21
பிப். '51 . . 13   மார்ச் '51 . 61
எப்ரல் '51 . . 16   மே '51 . . 16
ஜூன் '51 . . 9   ஜுலை '51 . . 8
ஆகஸ்ட் '51 . . 8   செப். '51 . . 9
அக். '51 . . 24   நவ. '51 . 6

கல்வி

உரக்கப் படி . . . எப்ரல் '51 . . 59
எப்போது படிப்பது? . மே '51 . 64
கலைச்சொல் . . . மே '51 . . . 56
படித்த மனிதன் . . ஆக. '51 . 39
புதுமையான கல்லூரி மார்ச் '51. 41
பொற்கால இலக்கியம் . . . .
அக். '51 . . 12

கலை

அமெரிக்காவில் இந்தியத் தெய்வங்கள் . . . . எப். '51 . . 49
ஆந்திர நாட்டியங்கள் . பிப். '51 . 29
இந்திய மண்பாண்டக் கலை . . . .
அக். '51 . . 58
உலகில் பழைய நடனச்சிலை . . . .
ஆக. '51 . . 36
கல்வியில் பொம்மலாட்டம் . . . .
ஜுலை '51 . . 27
சிலைக்கு வர்ணமா? . செப். '51 . 43
மொத்தை உருவப் படம் . . . . .
பிப். '51 . . 10
விக்கிரமபுரச் சிற்பம் . . . .
ஜூன் '51 . . 44

கற்பனை உலகம்

அபேதவாதிகள் கனவு . . . .
அக். '51 . . 4
அருள் நகர் . . . . ஆகஸ்ட் '51 . . 29
எங்குமில்லா நாடு ஜன. '51 . . 17
கடற்கன்னி நாடு எப். '51 . . 9
குடியரசு . . . . செப். '51 . . 10
தீர்க்கதரிசிகள் கனவு . . . .
ஜூன் '51 . . 46
தெய்வத் திருநாடு ஜுலை '51 . . 52
பரிதிமா நகர் . . . . மார்ச் '51 . . 5
பிந்திய அபேதவாதிகள் . . . . . .
நவ. '51 . . 33

புதிய அட்லாண்டிஸ்........
பிப். '51..14

கார்ட்டூன் கதம்பம்

டிச. '50..38 ஜூன் '51..36
ஜன. '51..78 ஜூலை '51.50
பிப். '51..48 ஆகஸ்ட் '51.24
மார்ச் '51.10 செப். '51..30
ஏப்ரல் '51.22 அக். '51...14
மே '51..26 நவ. '51...15

குழந்தைகள் குறும்பு

டிச. '50..12 ஜன. '51...41
பிப். '51..19 மார்ச் '51..49
ஏப். '51..65 மே '51.23
ஜூன் '51..17 ஜூலை '51..31
ஆகஸ்ட் '51.17 செப். '51.22
அக். '51...15

சமூகம்

அலங்காரச் சுதந்தரம்......
பிப். '51..50
எங்கள் உலகம்...செப். '51..36
என்று வருவானோ?. ஜன. '51.34
கடன் வாங்குவதே தொழிலா?
மே '51..28
சமையலிலே கூட்டுறவு.......
டிச. '50..14
சிகரெட் கொள்ளி. மார்ச் '51..37
நம் செல்வ நிலை..ஜன. '51..89
லஞ்ச ஊழல்........செப். '51...20

சிறுகதை, நாடகம்

உவமைக் கதைகள் - கலில் கிப்ரான்; ஈஸாப். மார்ச். '51..12
ஒத்திகை - ரவீந்திரநாத் டாகுர்.
மே '51..65
கறுப்பனுக்கு ஜே - பரிமள கோஸ்வாமி..ஜன. '51..27
கோடை மழை - வி. ஸ. காண்டேகர்..மார்ச் '51..66
சலவைக் கல் சிலை - பெடார் ஸோலகப்..ஜன. '51..97
சாப விமோசனம் - 'புதுமைப் பித்தன்'. ஆகஸ்ட் '51..57
ஞானிகள் பரிசு - ஓ'ஹென்ரி..
பிப். '51..73
திருவிழாவில் - கலில் கிப்ரான்.
பிப். '51..24
பாங்கி அநுபவம் - ஸ்டீபன் லீகாக்
ஜூன் '51..63
பாடம் கேட்ட கிளி - ரவீந்திரநாத் டாகுர்...செப். '51..59
பெரிய மணி - லப்காடியோ ஹார்ன்..ஏப்ரல் '51..68
பூத ராஜா - கா. சி. வேங்கடரமணி
ஜூலை '51..57
ரகு - ஷீலா சட்டர்ஜி......
அக். '51.61
வருங்காலக் கவிஞன் - வில்லியம் ஸரோயன்... நவ. '51..53
வேடிக்கை - கே. ஏ. அப்பாஸ்..
டிச. '50..72

சுக வாழ்வு

தாம்பூல இன்பம்..செப். '51..27
வாசனையின் வசியசக்தி......
மார்ச் '51..25

தொழில்

அருகி வரும் பட்டு நெசவு ....
ஏப்ரல் '51..29
இந்தியாவின் முதல் பத்திரிகை
ஜூலை '51..57
உள்ளங்கை ரகசியம்........
ஜூலை '51..17
சினிமா தங்கச் சுரங்கமா?....
பிப். '51..25
சைகிளின் கதை..செப். '51..3
டீயின் கதை....ஏப்ரல் '51..45
தென் இந்திய பஸ்கள்.......
செப். '51..51
பறக்கும் டாக்டர். ஜூன் '51..7
பிரிட்டிஷ் பத்திரிகைகள் ....
ஏப்ரல் '51..34
புதிய சணல் விளைச்சல்........
ஜூலை '51...46
முந்திரி சர்பத்தும் எண்ணெயும்
ஏப்ரல் '51...67
முனை உடைந்த கத்தி..........
மார்ச் '51...32
மை செய்த விந்தை அக். '51...43

ருஷிய சினிமா ... ஏப்ரல் '51... 6
வக்கீல்கள் தந்திரம் ஜன. '51...60
வாண வேடிக்கை ... அக். '51..25
வேதத்தில் அரக்கு ஜூன் '51...30

நடைச் சித்திரம்

கண்டதைக் குறிக்கும் பழக்கம் மார்ச் '51...21
திருடனோடு பேட்டி ஜன. '51...57
தேர்தலும் வாக்குறுதியும்.... நவ. '51..16
மனிதரிலே பலவிதம் டிச. '50...18

நாடும் மக்களும்

இந்தியாவின் சீனப் பெயர்கள்... ஆகஸ்ட் '51...33
எகிப்திலே பல முகம் பிப். '51...58
கஞ்சத்துப் பழங்குடிகள் .... மார்ச் '51..58
சிற்பம் மலிந்த சியாம் மே '51.. 8
சீக்கியர் தெய்வம்... டிச. '50..42
நவீன பஞ்ச பாண்டவர்...... ஆகஸ்ட் '51..45
நேபாளக் கல்யாணம் பிப். '51..69
புதிய நகரங்கள்.... மே '51..57
மலையாள வாகனங்கள் மே '51..38
யாத்திரிகர் கண்ட இந்தியா ... அக். '51..33

பாபு ராவ் பதில்

டிச. '50..33 ஜன. '51..22
மார்ச் '51..38
ஏப்ரல் '51..14 மே '51.. 6
ஜூன் '51..28 ஜூலை '51..25
ஆகஸ்ட் '51..22 செப். '51..18
அக் '51..31 நவ. '51.. 9

பிரபல இடங்கள்

இந்தியா ஆபீஸ் நூல் நிலையம்.. டிச '50..52
கலை மலிந்த மலை... பிப். '51.. 7
கன்னட அம்மன்கள்..ஏப். '51..19
காஷ்மீரின் மூன்று அதிசயங்கள் ஜன. '51..37
குவாலியர் விந்தைகள் டிச. '50..63
குன்றும் குரங்கும் ... மே '51..17
சோமநாதர் ஆலயம்........ ஜூன் '51.. 3
பசு பால் சொரிந்த விக்கிரகம் மார்ச் '51..63
பஞ்சகோணக் கட்டிடம்..... ஜூன் '51..24
பானகம் குடிக்கும் கடவுள்.... அக். '51..28
புகழ் பெற்ற நாளந்தா...... நவ. '51..11
மூகாம்பிகை க்ஷேத்திரம்.... ஜன. '51..14
ராவணன் தேர்ப்பாதை..... ஏப். '51..43

பிராணிகள்

இந்திய சரித்திரத்தில் யானை மார்ச் '51..13
குழந்தை வளர்க்கும் ஆண்.... ஆகஸ்ட் '51..49
குரைக்காத நாய்..செப். '51..32
சர்க்கஸ் நிபுணர் தாமு ...... டிச. '50..70
சிங்கப் பாட்டி உபதேசம்.... மே '51..44
நாயும் பூனையும்.. அக். '51..54
பறவை செய்யும் உதவி..... ஜூன் '51..49
புத்திசாலி விலங்குகள்...... ஜூன் '51..22
மதம் பிடித்த யானை....... ஆகஸ்ட் '51..15
விலங்குகளின் விளையாட்டு.... ஜன. '51..49

புத்தகச் சுருக்கம்

அற்புத மருந்து - பெனிஸிலின் காப்டன் என்.சேஷாத்திரிநாதன் பிப்.. '51. 79
ஆனந்த மடம் (நாவல்) பங்கிம் சந்திரர்.. நவ. '51..57
உத்தமி (நாவல்) - தாமஸ் ஹார்டி செப். '51..63
சென்ன பஸவன் (நாவல்) - மாஸ்தி

வேங்கடேச ஐயங்கார்........
மே '51 . .71
பண்ணை வாழ்க்கை - ச. கு. கணபதி ஐயர் .... ஏப். '51. .73
பாரம்பரியம் - பெ. தூரன்....
ஆகஸ்ட் '51. .65
பாரிஸ் கூனன் (நாவல்) - விக்டர் ஹ்யூகோ .... மார்ச் '51 . .73
பிரளயம் (நாவல்) - ராமானந்த சாகர் ..... ஜூலை '51. .67
புண்ணியமும் பலவீனமும் - வ. ரா.
அக். '51. .67
மனத்தத்துவம் - ரெவரண்ட் சத்திய சாமுவேல் டிச. '50. .77
மாயா விநோதினி (நாவல்) - ரவீந்திரநாத் டாகுர் . ஜன.'51. .103
மின்சாரத்தின் விந்தை - பெ. நா. அப்புஸ்வாமி . ஜூன் '51. . 65

பொது

உடற்பயிற்சி வேண்டாம் . . . .
ஜூலை '51 . . 59
கடைசிப் பந்தயம் மே '51 . . . 33
கிறிஸ்துமஸ் மரம் ஜன. '51 . . 73
குட்டிச்சாத்தான் வேலை . . . .
ஏப்ரல் '51 . . . 24
குடை பிடித்தவர் பட்ட பாடு . .
டிச. '50 . . 96
குழந்தை ஒரு கலைஞன் . . . . .
அக். '51 . . 18
குறத்தி குறி பலித்தது
மே '51 . . . 25
கௌடில்யர் காட்டும் வழி . . . .
பிப். '51 . . 37
சங்கங்களைத் தொலைக்க வழி . .
ஏப்ரல் '51 . . . 33
சிறுவர் திருடினால்? டிச. '50 . .22
தேதிக் குழப்பம் ஆகஸ்ட் '51 . . 52
நீர் காட்டும் குச்சி ஆகஸ். '51 . 26
பச்சைத் தேவதை . . . .
டிச. '50 . . . 66
புதிய சரித்திர ஆராய்ச்சி . . . .
பிப். '51 . . . 53
புராதனச் சவம் செப். 51 . . . 16
மரமும் செடியும் மே '51 . . . 52
யாருக்கு ஜயந்தி? டிச.'50 . . . 27
ரோஜா வேலி . . . . நவ. '51 . . 7
லண்டனுக்கு ஒரே நாளில் . . . .
நவ. '51 . . 38
விநோதப் புத்தகக் கடை . . . .
ஜன. '51 . . . 84
வெறுங் கனவா? அக். '51 . . . 30
வேஷத்தை நடிப்போம் . . . .
ஜூன் '51 . . . 54
வேதகாலக் குடியரசு . . . . . .
அக். '51 . . 37

பொழுதுபோக்கு-விளையாட்டு

கிரிக்கெட்டில் குருட்டு நம்பிக்கை
பிப். '51 . . . 6
சதுரங்கம் . . . . .அக். '51 . . . 45
சென்னை வரும் கிரிக்கெட் நிபுணர்கள் ஜன. '51 . . 2
பந்தயத்தில் புரட்சி செய்த கருவி
ஜன. '51 . . . 52
பிரிட்ஜ் ஆட்ட ஒழுங்கு . . . . . .
ஜூன் '51 . . . 38
பொம்மைவிளையாட்டு ஜூன்'51 33
மறுபடியும் வருவார்களா? . . . .
நவ. '51 . . . 49
ஜால வேடிக்கை ஜன. '51 . . . 80
ஹாக்கியின் கதை ஜூலை '51 . . 9

ராமாயணம்

கபட சந்நியாசி . . . நவ. '51 . . 20
குகனும் ராமனும் ஜூன் '51. . 40
கூனியின் சூழ்ச்சி மார்ச் '51 . . .44
சீதா கல்யாணம் ஜன. '51 . . . 64
சீதை மரவுரி தரித்தல் . . . . . .
மே '51 . . . 40
சீதையின் தருமோபதேசம் . . .
செப். '51 . . . 6
சூர்ப்பணகையும் சீதையும் . . .
அக். '51 . . . 8
தசரதனின் பிரிவு . ஜூலை '51 . 14
பரதனும் ராமனும் ஆக. '51. .10
பரசுராம கர்வபங்கம் . . . . . .
பிப். '51 . . . 44
ராமாவதாரம் . . டிச. '50 . . 48

வனவாசத் தீர்மானம் . . . . . . ஏப்ரல் '51 . . . 60

வழிவழி வந்த வசன நடை

அவிவேக பூரண குரு . . . . . . ஜூலை '51 . . . 21
அன்புடைமை . . செப். '51 . . 57
ஆண்டாள் பெருமை . ஏப். '51 . 17
கடவுள் செய்ந்நன்றி . ஆக. '51 . 19
திருவிளக்குத் தர்மம் . மே '51 . 62
தேவி பெருமை . . டிச. '50 . . . 57
நூலில் வேற்றுமை . . மார். '51 . 19
முத்தமிழ் . . . ஜூன் '51 . . . 52

விஞ்ஞானம்

உடம்பிலே உஷ்ணம் . . . . . . ஜூன் '51 . . . 19
இறந்தும் வாழ்ந்தேன் . . . . . . ஜன. '51 . . . 70
எஞ்சின் இல்லாத பஸ் . . . . . . ஜூன் '51 . . . 15
கிரகமும் கிரகணமும் . . . . . . பிப். '51 . . . 61
புதிய சந்திரன் ஜூலை '51 . . . 4
மண்டையை முகமாக்கும் சிற்பி நவ. '51 . . 46
மனித யந்திரம் ஏப்ரல் '51 . . . 54
மூளைப் பரீட்சை மே '51 . . . 11
வானவில்லைப் பிடித்தவர் . . . . ஜூலை '51 . . 36

விவேகானந்தர்: வாழ்வும் வாக்கும்

டிச. '50 . . 29 ஜன. '51 . . 24
பிப். '51 . . 34 மார்ச் '51 . . 29
ஏப். '51 . . 40 மே '51 . . 49
ஜூன் '51 . . 13 ஜூலை '51 . 40
ஆக. '51 . . 40 செப். '51 . . 40
அக். '51 . . 40 நவ. '51 . . 40

வைத்தியம்

இளமையும் அழகும் . ஜன. '51 . 43
உபவாசத்தின் அவசியம் . . . . . மார்ச் '51 . . 51
குழந்தையின் வயிற்றுப் போக்கு ஆகஸ்ட் '51 . . 43
டான்ஸில் பயம் செப். '51 . . . 33
தேனின் குணம் . . . டிச. '50 . . 40
பாம்புக்கடி வைத்தியம் . . . . . பிப். '51 . . 66
பாம்பு விஷம் . . . . நவ. '51 44
வலியை அறிவீர்களா? நவ. '51 . 26
க்ஷய அணு - பேட்டி . மே '51 . . 34

ஜீவிய சரித்திரம்

அபிநவ குப்தர் . ஜூலை '51 . 43
இவர்கள் 1901-இல் என்ன செய்தார்கள்? ஜூன் '51 . . 50
உலகில் பெரியவர்? . செப். '51 . 54
கணித மேதை சகுந்தலா . . . . பிப். '51 . 41
கனவில் தோன்றிய கதை . . . . அக். '51 . . 80
கித்வாயின் யுக்தி . ஜூலை '51 . 3
ஞானி ஜரதுஷ்டிரர் . . மே '51 . 20
சர்வாதிகாரிகள் - எத்தனை பேர்? அக். '51 . 22
சரளா பேன் . . ஆகஸ்ட் '51 . 9
தானீ ஷா . . . . டிச. '50 . . 59
தெனாலி ராமகவி . செப். '51 . 24
பாடகர் பெருந்தன்மை . . . . மார்ச் '51 . . 53
பெர்னார்ட் ஷா . . . டிச. '50 . . 8
மக்ஆர்த்தரின் குலதர்மம் . . . . . மே '51 . . 70
மக்கியவெல்லியின் அறிவுச்சுடர் ஜூலை '51 . . 33
முஸ்லிம் பெண்ணை மணந்த பண்டிதர் . . ஜன. '51 . 47
ரவீந்திரர் . . நஜ்ருல் டிச. '50 . 35
ரூஸ்வெல்ட்டின் வெற்றி ரகசியம் மே '51 . . 61
வரி கொடாத வீரர் . . . . ஜூலை '51 . . 48

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சத்தியம் வெல்லுமா?

என்னதான் ஹிம்சித்து அடக்கினாலும், எப்போதும் சத்தியம் வெல்லும் என்ற கொள்கை மனத்துக்கு இனிய பொய்களில் ஒன்று. எல்லாருமே இந்தப் பொய்யை ஒருவரைப் பார்த்து ஒருவர் சகஜமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அநுபவம் இதற்கு நேர்மாறாக இருக்கிறது. ஹிம்சைக்குப் பயந்து சத்தியம் அமுங்கிப்போன சம்பவங்கள் சரித்திரத்தில் எத்தனையோ காணக் கிடைக்கின்றன.

மதத்திலே சீர்திருத்த இயக்கம், இருபது தடவையாவது லூதருக்கு முன்பு தோன்றியிருக்கும். அத்தனை தடவையும் ஹிம்சை தாங்காமல் அது அமுங்கிப் போயிற்று. ஸ்பெயின், இதாலி, பிளாண்டர்ஸ், ஆஸ்டிரியா இந்த நாடுகளிலெல்லாம் பிராடஸ்டண்டு மதத்தை ஹிம்சையால் அடியோடு அமுக்கி விட்டார்கள். இங்கிலாந்திலும் எலிஜபெத் ராணி மாண்டு, மேரி ராணி ஜீவித்திருந்தால் அதன் கதி அப்படித்தான் ஆகியிருக்கும்.

ஆனால், சத்தியத்துக்கு ஒரு குணம் உண்டு. அதை ஒரு முறை, இரு முறை, பல முறை ஹிம்சையால் அடக்கிவிடலாம். என்றாலும், பல நூற்றாண்டுகளுக்கிடையே திரும்பத் திரும்ப அதைக் கண்டுகொள்ளக்கூடிய மனிதர்கள் தோன்றுவார்கள். கடைசியிலே அதற்குச் சாதகமான ஒரு காலத்தில் அது தென்படும். அதன் பிறகு அதை எந்த ஹிம்சையும் அடக்க முடியாத அளவுக்கு அது பரவிப் பலம் பெற்றுவிடும்.

—'சுதந்தரம்', ஜே. எஸ். மில்.